₹10

fmpb

# அறைகூவல்

Volume 55 | Issue 11 | November 2025

*"உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே"*
*மத்தேயு 22:39.*



## அன்பு

### கிறிஸ்துவைப் போன்று அன்பில் ஆழமாக வளருவோம்

இவைகளிலும் அதிகமாய்
யோவான்.21:15

# ஆரம்ப வரிகள்...




## அன்பு திரளான பாவங்களை மூடும்

ஒரு கணவன் மனைவிக்குள் அடிக்கடி சண்டை வந்ததால் அவர்கள் ஒருவரைப்பற்றி ஒருவருக்குள்ள குறைகளை ஒரு காகிதத்தில் எழுத முடிவு செய்து எழுதினர். அவ்வாறு எழுதும்போது கணவர் அடிக்கடி மனைவியின் முகத்தைப் பார்ப்பார். அப்போது அவரது முக பாவனை மாறும், மறுபடியும் வேகமாக எதையோ எழுதுவார். அவரின் முக பாவனையைக் கண்ட மனைவிக்கு கடுமையான ஆத்திரம் வந்தது. அதற்கிடையே அடுத்தவர் மீதுள்ள குற்றங்களை எழுதியப்பின் அவர்கள் தங்கள் காகிதங்களை மாற்றிக்கொண்டனர். மனைவி கணவன் மீதுள்ள அனைத்து குற்றங்களையும் எழுதியிருந்த சூழ்நிலையில், கணவனின் காகிதத்தில் “உன்னை நேசிக்கிறேன், உன் மீது எனக்கு கோபம் வருகிறது, ஆனாலும் உன்னை நேசிக்கிறேன், உன்னால் நான் அதிகம் காயப்பட்டுள்ளேன், ஆனாலும் உன்னை நேசிக்கின்றேன்” போன்ற அன்பின் வார்த்தைகளை படித்தவுடன் மனைவியிடம் காணப்பட்ட வேதனையின் கண்ணீர் ஆனந்த கண்ணீராக மாறியது. வேதாகமத்தில் 1 பேதுரு 4:8 ... **அன்பு திரளான பாவங்களை மூடும்** என்ற வேத வசனம் எத்தனை உண்மை. நமது இயக்கத்தின் 9ஆம் நெறிமுறை **சகோதர அன்பு** (மத்.22:39). இப்படிப்பட்ட விலையேறப்பெற்ற நெறிமுறைகளின் மீது நமது இயக்கம் கட்டப்பட்டு இயங்கி வருவதால்தான் நாம் இத்தனை வருடங்களை கடந்து, இயேசு நமக்கு காட்டிய அன்பை நம் தேசத்தாருக்கு மொழி, இனம், நிறம், கலாச்சாரம் போன்றவற்றை பேதமையின்றி கொடுத்தும், காட்டியும் வருகிறோம்.

இது இயேசு நமக்கு கொடுத்த இரண்டாம் பிரதான கட்டளையாகும். இவ்வன்பு நம்மிடம் இல்லை என்றால் ஆத்தும பாரம் என்பது நமக்கு சாத்தியமற்ற ஒன்றாயிருக்கும். இதை இன்னும் வளர்க்கும் விதமாக நம் இயக்கத்தில் வயது வித்தியாசமின்றி ஒருவரை ஒருவர் நாம் அண்ணன், அக்கா என்று பாசத்தோடு அழைத்து, ஒருவருக்கொருவர் விசாரித்து, ஜெபித்து, உதவி வருகிறோம். ரோமர் 13:7-10இல் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவது நமது கடன் என்றும், அன்பு செலுத்துவதினால் நாம் நியாயபிரமாணத்தை நிறைவேற்றுகிறோம் என்றும், அன்பின் சீஷனான யோவான் 1யோவான் 4ஆம் அதிகாரத்தில் சகோதர அன்பின் நிமித்தமே நாம் தேவனிடமுள்ள அன்பில் பூரணப்பட முடியும் என்பதை உணர்த்துகிறார். இந்த அன்பை நாம் அன்றாட வாழ்வில் நமது தேவையைவிட பிறர் தேவையை முன்னுரிமைப்படுத்துவதின் மூலமும், ஒருவரின் சூழ்நிலையிலிருந்து அவரை புரிந்துகொள்வதின் மூலமும், நமது வார்த்தைகளினால் மாத்திரம் அன்பு கூறாமல், செயலினாலும் அவ்வன்பைக் காட்ட வேண்டும். இயேசு கிறிஸ்து தனக்கு துரோகம் இழைத்தவர்கள், மறுதலித்தவர்கள் மற்றும் சிலுவையில் அறைந்தவர்களை அன்பாய் நேசித்து, மன்னித்து, அவர்களுக்கு இரட்சிப்பை உண்டுபண்ணினதின் மூலம் நமக்கு மாதிரியைக் கற்றுக்கொடுத்திருக்கிறார். அவ்வாறே நாமும் அன்பு செலுத்த முடியும் என்பதை நம் காலத்தில் வாழும் திருமதி. கிளாடிஸ் ஸ்டெய்ன்ஸ் மற்றும் திருமதி. எரிக்கா கிர்க் போன்ற பெண்மணிகள் தங்கள் கணவர்களை கொன்றவர்களை மன்னித்து நமக்கு முன் உதாரணமாக வாழ்கிறார்கள். எனவே நாம் வேலை/ஊழியம் செய்யும் இடங்களில், நமது அயலாரிடத்தில் எந்த ஒரு கைமாறும் எதிர்பாராமல் நிபந்தனையற்ற அன்பினைச் செலுத்தினால் சுவிசேஷம் என்ற அன்பின் நற்செய்தியினால் நம் தேசம் சந்திக்கப்படும்.

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

“எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்” *1பேதுரு 4:8.*

**தேவனை ஆராதிக்கும் நாம் வெறுப்போடு வாழ்ந்து, அன்புடன் ஜெபிக்க முடியாது.**
*– AW டோசர்*

“சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்” *ரோமர் 12:10*

**மற்றவர்களை நேசிப்பதின் மூலம் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோம் என்று உலகிற்கு சாட்சியிடுகிறோம்.**
*– நிக்கோல் ஸ்டேர்ன்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது ஊழியம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு நற்செய்தி பணி இயக்கம். இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்வதே இதன் பிரதானப் பணி.

இந்திய திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப் பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.

இணைந்திடுங்கள்.
பிறரை அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



### *அன்பு தேவ பணியின் இதயத் துடிப்பு*

*“நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்” (யோ. 13:35)*

### தேவனின் இதயத் துடிப்பு

தேவனின் இயல்பு, உந்துதல், தேவனின் பணி இவை யாவற்றையும் சுருக்கமாக கூறும் ஒரே வார்த்தை அன்பு. அன்பு என்பது தேவன் செய்யும் ஒன்றல்ல, அது அவர் யார் என்பதைக் குறிக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார் (1யோ.4:8). சிருஷ்டிப்புக்கு முன்பே திரித்துவத்தின் ஐக்கியத்திற்குள் அன்பு பாய்ந்துகொண்டிருந்தது. பிதா குமாரனை நேசித்தார், குமாரன் பிதாவை நேசித்தார். ஆவியானவர் அவர்களை சரியான ஒற்றுமையில் இணைத்தார்.

அந்த நித்திய அன்பிலிருந்து தேவன் மனுக்குலத்தை சிருஷ்டித்தார். அதே அன்பிலிருந்து உலகை மீட்க தனது குமாரனை அவர் அனுப்பினார். சிருஷ்டிப்பு முதல் மீட்பு வரை, சிலுவையிலிருந்து இறுதிக் கட்டளை வரை, ஒவ்வொரு தெய்வீக செயலும் அன்பில் தொடங்கி அன்பில் முடிகிறது. ‘ஊழியம் என்பது நமது செயலில் காட்டும் அன்பு, இந்த உலகம் கிறிஸ்து இல்லாமல் அழியும் வரை அமைதியாக இருக்க முடியாத அன்பு’ – டாக்டர். சாம் கமலேசன். அன்பு மங்கும்போது ஊழியம் ஒரு சுமையாகிறது. அன்பு பற்றி எரியும் போது ஊழியம் ஆசீர்வாதமாகிறது.

### 1. அன்பு – ஊழியத்தை உந்தும் சக்தி

நற்செய்தியின் கதை மனித முயற்சியுடன் அல்ல, தெய்வீக அன்பினால் தொடங்குகிறது. தேவன் தமது ஒரே குமாரனைக் கொடுக்கும் அளவிற்கு உலகத்தில் அன்புக்கூர்ந்தார் (யோ.3:16). பிதாவின் அன்பு குமாரனை அனுப்பியது. குமாரனின் அன்பு அவரை சிலுவைக்கு அழைத்துச் சென்றது. ஆவியானவரின் அன்பு திருச்சபையை உலகிற்குள் அனுப்ப அதிகாரம் அளித்தது.

ஒவ்வொரு மிஷனெரி இயக்கத்திற்கும், ஒவ்வொரு இரக்க செயலுக்கும், கீழ்ப் படிதலுக்கான ஒவ்வொரு அழைப்பிற்கும் பின்னால் உள்ள உந்துதல் **அன்பு**. “சிலுவை என்பது அன்பின் சுடர், எரியும் சுடர். ஆனால் அதன் தீப்பொறிகள் நம்மீது விழும் அளவிற்கு நாம் நெருங்கவேண்டும்” –ஜாண் ஸ்டட். அன்பு இல்லாத ஊழியம் ஒரு திட்டமாக மாறுகிறது. ஆனால் அன்புடன் செய்யப்படும்போது தேவனது இதயத்துடனான ஒரு கூட்டாண்மையாக மாறுகிறது. எனவே பரி. பவுல் 1 கொரி. 13:1–13இல் இவ்வாறு கூறுகிறார். “நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன்... மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை’’. எனவே நாம் அன்பினால் தூண்டப்படாவிட்டால் நம் பேச்சுத்திறன், சாதனைகள், நமது விசுவாசம்கூட அர்த்தமற்றதாகிவிடும்.

## 2. அன்பு – சீஷத்துவத்தின் மொழி (யோ.21:15–17)

பேதுருவின் தோல்வி மற்றும் மறுதலிப்பிற்குப் பிறகு இயேசு கலிலேயா கடலோரத்தில் அவரைக் கண்டிக்க அல்ல, மாறாக பரிவோடு சந்தித்தார். யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்று கேட்டார் (யோ.21:15). இந்த கேள்வி மிகவும் தனிப்பட்ட கேள்வியாகும். இவர்களிலும் அதிகமாய் என்பது...

- உங்கள் வலைகள் மற்றும் படகுகளைவிட (உங்கள் வாழ்வாதாரம்/தொழில்)?
- உங்கள் நண்பர்களைவிட (உங்கள் உறவுகள்/முன்னுரிமை)?
- உங்கள் பெருமை மற்றும் கடந்த காலத்தைவிட (உங்கள் சுயபிம்பம்)?

இயேசு பேதுருவின் இருதயத்தை அவரது அறிவால் மற்றும் திறனால் அல்ல, தனது பாசத்தால் ஆராய்ந்தார். தனது ஊழியத்தை மீட்டெடுப்பதற்குமுன் இயேசு அவரது அன்பை மீட்டெடுத்தார். ஒவ்வொரு முறையும் பேதுரு ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்று ஒப்புக்கொண்ட போது இயேசு, என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று பதிலளித்தார். முதலில் அன்பு, பின்பு சேவை என்ற ஒழுங்குமுறை முக்கியமானது. அன்பில்லாத ஊழியம் கையாளுதலாக மாறுகிறது. ஆனால் சேவை செய்யும் அன்பு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நாம் எவ்வளவு செய்கிறோம் என்பதல்ல, ஆனால் நாம் எவ்வளவு அன்புடன் காரியத்தை செய்கிறோம் என்பது முக்கியம் என அன்னை தெரேசா குறிப்பிடுகிறார். உண்மையான சீஷத்துவம் அன்பில் தொடங்கி, அன்பில் முதிர்ச்சியடைகிறது. எனவே 1 கொரி. 13:4–7ன்படி அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது அன்புக்குப் பொறாமை யில்லை; அன்பு தன்னைப் புகழாது; ...சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். இந்த அன்பு ஒரு சீஷரைத் தாங்கும், ஒரு தலைவரை மாற்றும், ஒரு மிஷனெரியைக் கட்டாயப்படுத்தும்.

## 3. அன்பு – தாங்கும் சக்தி

ஊழியம் என்பது ஒரு ஓட்டப்பந்தயம் அல்ல, அது ஒரு மாரத்தான். துன்பம், தவறான புரிதல் மற்றும் சோர்வு ஆகிய பள்ளத்தாக்கின் வழியே அடிக்கடி செல்லும் ஒரு வாழ்நாள் பயணம். மிஷனெரியை உறுதியாக வைத் திருப்பது உத்தி அல்ல அன்பு. கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறது (2 கொரி. 5:14). நெருக்கி ஏவுதல் என்பதின் கிரேக்கச் சொல் சுனெகா. இதன் அர்த்தம் எல்லா பக்கங்களிலிருந்தும் அழுத்தம் கொடுப்பது. வழி கடினமாக இருக்கும்போது அவரது அன்பு நம்மை சூழ்ந்து, தாங்கி பெலப்படுத்துகிறது. அன்பு உண்மையானதாக இருக்க நாம் விலை கொடுக்க வேண்டும், அது காயப்படுத்த வேண்டும், அது நம்மை சுயத்திலிருந்து வெறுமையாக்க வேண்டும்.

உண்மையில் நமக்கு பாராட்டு மங்கும்போதும், நமது முயற்சியின் பலன் கண்ணுக்குத் தெரியாதபோதும், நமது கண்ணீர் அதிகமாக வெற்றிபெறும்போதும் இந்த அன்பு நிலைத்திருக்கும். ஏனெனில் அது ஒருபோதும் தோல்வியடையாத அன்பில் வேரூன்றி உள்ளது (1கொரி.13;8). உலகம் விடாமுயற்சியுள்ள, மன்னிக்கும், தியாகம் செய்யும் அன்பைக் காணும்போது அது இயேசு கிறிஸ்துவையே காண்கிறது.

## 4. அன்பு – ஊழியத்தின் குறிக்கோள்

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூறுவாயாக; .... உன்னிடத்தில் நீ அன்புகூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக. ஊழியம் என்பது வெறும் தகவல்களை பரப்புவதுபற்றியதல்ல, அது அன்பின்

மூலம் மாற்றத்தை பகிர்ந்துகொள்வது. நாம் அன்பினால் கிறிஸ்துவை அறிவிக்கும்போது நற்செய்தி நம்பகமானதாகிறது. 'நாம் இயேசுவைப்போல உலகிற்கு அனுப்பப்படுகிறோம். ஆதிக்கம் செலுத்த அல்ல, கண்டனம் செய்ய அல்ல, அன்பு செலுத்தவே' – ஜான் ஸ்டட். அனைத்து ஊழியத்தின் முடிவும், ஒவ்வொரு பணியின் நிறைவேற்றமும், மனிதக்குலத்தை மீண்டும் தெய்வீக அன்பின் அரவணைப்பிற்குள் கொண்டுவருவதாகும். விசுவாசம் ஒருநாள் காணக்கூடியதாக மாறும். நம்பிக்கை அதன் நிறைவேறுதலைக் கண்டுபிடிக்கும். ஆனால் அன்பு ஒருக்காலும் ஒழியாது (1கொரி.13:8).

## 5. அன்பு – புதுப்பித்தலுக்கான அழைப்பு

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் கேள்வி இன்னும் நம் இதயங்களில் எதிரொலிக்கிறது. **இவர்களிலும் அதிகமாய் என்னை நேசிக்கிறாயா?** என்பது ஒவ்வொரு விசுவாசிக்கும், ஒவ்வொரு தலைவருக்கும், ஒவ்வொரு மிஷனெரிக்குமான கேள்வி. வெற்றி, ஆறுதல், பதவி, கைத்தட்டல் இவற்றைவிட அதிகமாக நாம் இயேசுவை நேசிக்கிறோமா? அவர் அனுப்பும் எவ்விடத்திற்கும் சென்று, அவர் கேட்பதைக் கொடுத்து, அங்கீகாரமின்றி சேவை செய்யும் அளவிற்கு நாம் அவரை நேசிக்கிறோமா? 'அன்பு ஊக்குவிக்கும்போது எந்த தியாகமும் பெரிதாகாது. அன்பு இல்லாதபோது சிறிய வேலைகள் கூட கனமாகிவிடும்' – டாக்டர். சாம் கமலேசன்.

எளிமை, முதல் அன்பு மற்றும் நேர்மைக்கு நேராக நாம் திரும்பும்படி அழைக்கப்படுகிறோம். மரியாளின் பக்தியைப் பாராட்டிய இயேசு கிறிஸ்து வெளி.2:4இல் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று எபேசு சபையைப் பற்றி குறிப்பிடுகிறார்.

**இதயத்திற்கு ஒரு சவால்:** நாம் சற்று நின்று அவரது அன்பை வியந்து பார்ப்போம். அவரது அன்பு அற்புதமானது, மற்றும் நிலையானது. அது ஒருபோதும் சூழ்நிலைகள் அல்லது காலத்துடன் மாறாதது. அவரது அன்பு ஆழமானது மற்றும் முடிவற்றது. நம் இதயங்களின் இருண்ட மூலைகளை அடைந்து, நித்திய கிருபையால் நம்மைத் தழுவுகிறது. அவரது அன்பு மன்னிக்கும் மற்றும் கிருபையுள்ளது. நாம் தோல்வி அடையும்போது நம்மை உயர்த்துகிறது. நாம் விழும்போது நம்மை மீட்டெடுக்கிறது. அவரது அன்பு புனிதமானது மற்றும் அளவிட முடியாதது. அதன் சாராம்சம் தூய்மையானது மற்றும் புரிந்துகொள்ள முடியாதது. அவரது அன்பு நீடித்தது. வாழ்க்கையின் புயல்களில் ஒருபோதும் தோல்வியடையாதது. அவரது அன்பு மனுக்குலத்தை மீட்பதற்கு சக்தி வாய்ந்தது. அவரது அன்பு நிபந்தனையற்றது, மதிப்புமிக்கது, வைராக்கியமானது, விவரிக்க முடியாதது, நமது விசுவாசத்தின் மிகப்பெரிய மர்மம் மற்றும் மிக அழகான யதார்த்தம்.

இந்த அன்புதான் நம்மை அழைக்கிறது, நம்மை மாற்றுகிறது, பூமியின் எல்லைகளுக்கு அவருடைய ஒளியை எடுத்துச்செல்ல நம்மை கட்டாயப்படுத்துகிறது. பவுல் 1கொரி.13:13ஐ இவ்வாறு முடிக்கிறார். ''இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது". எனவே அன்பை நமது உயர்ந்த குறிக்கோளாகவும், பணியில் நமது ஆழ்ந்த உந்துதலாகவும் ஆக்குவோம்.

## 6. குழந்தைகளை வரவேற்கும் அன்பு

இந்த மாதம் நாம் குழந்தைகள் தினத்தைக் கொண்டாடும் வேளையில் சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள்; அவர்களை தடைப்பண்ணாதிருங்கள். ஏனென்றால் தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது (மாற்கு 10:14) என்று இயேசு சொன்ன மென்மையான தருணத்தை நோக்கி நம் கண்கள் திரும்பட்டும். பெரும்பாலும் சிறியவர்களை கவனிக்காத ஒரு கலாச்சாரத்தில் இயேசு அவர்களை

அணைத்துக்கொண்டு, ஆசீர்வதித்து, உண்மையான விசுவாசத்தின் மாதிரியை அறிவித்தார். ஒவ்வொரு குழந்தையும் தேவனின் படைப்பு மற்றும் அன்பின் பிரதிபலிப்பாகும். குழந்தைகளை நேசிப்பது என்பது திருச்சபையின் எதிர்காலத்தையும், ராஜ்யத்தையும் நேசிப்பதாகும். தன் குழந்தைகளை நேசிக்க தவறும் திருச்சபை அதன் எதிர்காலத்தை காணத் தவறும். இந்த குழந்தைகள் தினத்தில், குழந்தைகளை அன்பு, உண்மை மற்றும் கிறிஸ்துவின் மகிழ்ச்சியுடன் வளர்ப்பதற்கான நமது அழைப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம். இயேசு அவர்களை ஆழமாகவும், நிபந்தனையின்றியும் நேசிக்கிறார் என்பதை சிறிய இருதயங்கள் சீக்கிரமாக கற்றுக்கொள்ளும் இடங்களாக நம் வீடுகள், தேவாலயங்கள் மற்றும் பணித்தளங்கள் மாறட்டும்.

அன்புள்ள சகோதர, சகோதரிகளே! பேராசை மற்றும் அலட்சியத்தால் பிளவுப்பட்ட உலகில், நமது மிகப்பெரிய மன்னிப்பு கோரிக்கை அன்பாகவே உள்ளது. அன்பு நமது அடையாளம், அன்பு நமது அழைப்பு, அன்பு நமது சாட்சி, அன்புதான் நமது ஊழியம்.

இயேசுவை சிலுவைக்கு அனுப்பிய, பேதுருவை கரையில் மீட்டெடுத்த, பவுலை பிரசங்கிக்கத் தூண்டிய, தலைமுறை தலைமுறையாக மிஷனெரிகளை பூமியின் எல்லையெங்கும் செல்லத் தூண்டிய முதல் அன்பை பரிசுத்தாவி நம்மில் புதுப்பிக்கட்டும். உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது 1கொரி. 16:14).

அக்டோபர் 4ஆம் தேதி தேவராஜ்யத்தின் விரிவுப்பணியில் அயராது உழைத்த ஆந்திராவைச் சேர்ந்த முதல் மிஷனெரியான ஓய்வுப்பெற்ற அருள்திரு. பிரசாந்த் குமார் காக்கியின் அர்ப்பணமுள்ள சேவையை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம். 40 வருடங்களுக்கும் மேலாக அவரது உண்மையான உழைப்பு, தியாகங்கள் மற்றும் அசைக்கமுடியாத நம்பிக்கை, தேவனின் கிருபை மற்றும் விசுவாசத்திற்குச் சான்றாக நிற்கின்றன. அவரது ஓய்வுக்காலம் பலனுள்ளதாகவும், தொடர்ந்து சாட்சியாக தேவன் அவரை பயன்படுத்தவும் நமது ஜெபத்தில் அவரைத் தாங்குவோம்.

சென்னை கீழ்க்கட்டளையில் அக்டோபர் 5ஆம் தேதி தலைவர்களின் குடும்பக்கூடுகை சிறப்பாக நடைபெற்றது. இக்கூடுகை உறவுகளை பெலப்படுத்துவதற்கும், மனப்பாரங்களை பகிர்ந்துகொள்வதற்கும், ஒன்றுகூடி கர்த்தருக்குள் மகிழ்ந் திருப்பதற்கும், மேலும் தங்களை தெய்வத்துவத்தில் புதுபித்துக்கொள்வதற்கும் ஏற்றத்தருணமாக அமைந்தது. ஜெப வேளையும், பகிர்வுகளும் மற்றும் தலைவர்களிடையே காணப்பட்ட உற்சாகப் படுத்துதலும் இந்த ஊழியத்திலே இவர்கள் குடும்பமாக இணைந்து செய்யும் காரியங்களை முக்கியத்துவப்படுத்துகிறது. மற்றும் இவற்றை தனித்துப் பிரிக்க இயலாததாய் அமைகிறது. அருள்திரு. ஜே.எஸ். சாந்தராஜ் அவர்கள் மூலமாக 3 மிஷனெரிகள் தேவப்பணிக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.

தேவனின் அளவற்ற கிருபையால் பஞ்சாப் மாநில ஊழியங்களின் பொன்விழா நிகழ்ச்சிகள் புத்லாடாவில் மிகுந்த நன்றியறிதலுடனும், சந்தோஷத்துடனும் சிறப்பாக நடைபெற்றது. 1500க்கும் மேலானோர் ஒன்றுகூடி 50 வருடங்களாக ஆண்டவர் செய்து வந்த நன்மைகளையும், அவரின் உண்மைத்துவத்தையும் எண்ணி மனமொத்துத் துதித்தனர். சண்டிகர் திருச்சபைகளின் பேராயர், அத்தொகுதி யின் எம்.எல்.ஏ. மற்றும் சிறுபான்மை ஆணையத்தின் பொதுச் செயலர் போன்றோரின் வருகையும், பங்களிப்பும் இக்கூடுகையை மேலும் சிறப்புறச் செய்தது. இக்கூடுகையிலே திருச்சபை விசுவாசிகளும், மிஷனெரிகளும் உயர்ந்த தரிசனத்துடன்

அறுவடைப் பணியிலே முன்னேறிச் செல்ல உற்சாகப்படுத்தப்பட்டார்கள். மேலும் சென்னை மற்றும் கோயம்புத்தூர் பகுதியிலிருந்து வந்த ஜெபக்குழுத் தலைவர்களும், அங்கத்தினர்களும் இக்கூடுகையை சிறப்பித்தனர்.

அக்டோபர் 14ஆம் தேதி இராஜஸ்தானில் ஊழியம் செய்யும் நம் மிஷனெரிகளை சந்திப்பதற்கான சிறந்ததொரு வாய்ப்பு கிடைக்கப்பெற்றேன். இச்சந்திப்பு அவர் களோடு இணைந்து ஜெபிப்பதற்கும், நல்லுறவை வளர்ப்பதற்கும் ஏதுவாக அமைந்தது. அவர்களது ஊழிய அனுபவங்கள் மற்றும் உபத்திரவங்களின் ஊடே கடந்துச்சென்ற நேரங்களிலே அவர்களுக்கிருந்த விசுவாசத்தின் உறுதித்தன்மைகள் போற்றுதற்குறியது. அவர்களின் விலகாத விசுவாசம், உறுதியான மனதிடம், கர்த்தருக்குள் அசைக்கமுடியாத மற்றும் மாறாத நம்பிக்கை எனக்குள்ளே ஆழமாக ஊடுருவி என்னையும் பெலப்படுத் தியது. கடினமான நேரங்களிலே தேவன் தொடர்ந்து அமைதலாகவும், அரும்பெரும் காரியங்களை செய்துவருவதும் நினைவில் கொள்ளப்படவேண்டிய காரியங்கள்.

நமது பணித்தளங்கள் யாவும் மென் மேலும் கடுமையான எதிர்ப்புகளைச் சந்தித்து வருகின்றன. நமது ஊழியர்களுக்கு தேவன் தைரியத்தையும், ஞானத்தையும் மற்றும் கிருபைகளையும் தந்து, உபத்திரவத்தின் நேரங்களிலே உண்மையான சாட்சி பகர்வதற்கு கிருபை அருளுமாறு ஜெபியுங்கள். மேலும் அவர்கள் விசுவாசத் திலே உறுதிநிலை அடைந்தவர்களாக, அன்பிலே பயமற்றவர்களாக மற்றும் ஊழியத்திலே கனி நிறைந்தவர்களாக சிறந்து விளங்கட்டும். அவர்களுக்காக ஏறெடுக்கப்படும் உங்கள் ஜெபமே அவர்களது பெலன். அவைகள் இருதயத்தின் சோர்வுகளை நீக்கும். விசுவாசத்துடன் சாட்சிப்பகர உதவும். மற்றும் எதிர்ப்புள்ள இடங்களிலே தேவ ஊழியத்தை திறம்பட செய்ய உதவிடும். இந்த தேசம் தேவனை கண்டுக்கொள்ளும் அறிவிலே நிறைந் திருப்பதற்கு நாம் இணைந்திருப்போம். உண்மையான அன்பு செலுத்துவதிலேயும், திறப்பிலே நின்று ஜெபிப்பதிலேயும் நாம் ஒருமனம் கொண்டிருப்போம்.

இம்மாதத்தில் நடைபெறவுள்ள மேலாண்மைக்குழு மற்றும் செயற்குழு கூடுகைகளுக்காக ஜெபியுங்கள். நமது தேசம் முழுவதும் செயல்பட்டு வரும் தேவ ஊழியங்களிலே சிறப்பானதை செய்வதற்குரிய தேவ ஞானத்திற்காகவும், ஒற்றுமைக்காகவும், தேவ சித்தத்தின்படி சிறந்த தீர்மானங்கள் எடுப்பதற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இப்படிப்பட்ட சவாலான நேரங்களிலே நமக்காக வெளியரங்கமாக வெளிப் படுத்தப்பட்ட சிலுவையின் அன்புக்கு திரும்புவோமாக! தேவனுக்காக செய்யப்படும் இந்த ஊழியங்களின் வெற்றி, பெலன் மற்றும் நோக்கத்திலே அன்பே பிரதானமாக இருக்கட்டும். ஏனெனில் அன்பு பிரதான மாக இருக்கும் பட்சத்தில் தேவ ராஜ்யத்தின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும்.

இப்படிப்பட்டதான இந்த பரிசுத்த அன்பு, ஊழியங்களிலே ஜெபிக்கவும், கொடுக்கவும், மன்னிக்கவும் மற்றும் எதையும் செய்வதற்கு இணக்கம்கொள்ளும் காரணிகளாக இருக்கட்டும். கிறிஸ்துவால் நமக்கு கிடைக்கப்பெற்ற இந்த அன்பு இவ்வுலகத்தாரையும் ஆட்கொள்ளட்டும். உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது (1கொரி.16:14).

கிறிஸ்துவின் பணியில்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**



# ஊழியத்தை இயக்கும் அன்பு

**மத்தேயு 22:37-39**

**ஏமி கார்மைக்கேல்:** ''அன்பு இல்லாமல் நீங்கள் கொடுக்க முடியும். ஆனால் கொடுக்காமல் நீங்கள் அன்பு செலுத்த முடியாது''. உண்மையான அன்பு எப்போதும் தியாகச் செயலுக்கு வழிவகுக்கிறது.

**டேவிட் லிவிங்ஸ்டன்:** "தேவனுக்கு ஒரே ஒரு மகன் இருந்தார். அவரை ஒரு மிஷனெரியாக்கினார்". இது மனித குலத்திற்காக ஊற்றப்பட்ட தெய்வீக அன்பின் ஆழத்தை பிரதிபலிக்கிறது.

இயேசுவிடம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டபோது, முழு கட்டளையின் வல்லமையை சுருக்கமாக வழங்கினார். இயேசு அவனை நோக்கி: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூறுவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதே" (மத். 22:37-39).

## தினசரி சீஷத்துவத்தை வழிநடத்தும் அன்பு (L.O.V.E.) என்ற சுருக்கெழுத்து

- L - Listen to God and others with empathy. (தேவனிடமும், மனிதர்களிடமும் பச்சாத்தாபம் காட்டுதல்)
- O - Obey God's Word in every sphere of life. (வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்).
- V - Value people as image-bearers of God. (அனைத்து மனிதர்களும் தேவனின் சாயலை தரித்தவர்கள் என மதித்தல்)
- E - Engage in acts of kindness and justice. (இரக்கம் மற்றும் நீதியின் செயல்களில் ஈடுபடுதல்)

**எலிசபெத் எலியட்:** "தேவனின் சித்தம் என்பது உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சேர்க்கும் ஒரு பொருளல்ல. அது நீங்கள் தேர்ந்தெடுக்கும் ஒரு பாதை." தேவனை உங்கள் முழு இருதயத்தோடு நேசிப்பது என்பது உங்கள் முழு வாழ்க்கையையும் தேவப் பணியுடன் இணைப்பதாகும்.

மத்.22:37இல் **உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும்** அன்பு கூறுவாயாக என எழுதப்பட்டுள்ளது. மாற்கு 12:30 & உபா.6:5இல் கூடுதலாக **முழு பலத்தோடும்** அன்பு கூறவேண்டுமென்று எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். சில விளக்கவுரைகளில் இருதயம், ஆத்துமா பலப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு சொற்களின் பயன்பாடு தனித்துவமான மனித திறன்களை வரையறுப்பதற்காக அல்ல, மாறாக தேவனை நேசிக்க தேவைப்படும் முழுமையான அன்பினை கோடிட்டுக் காட்டுகிறது.

மத்.22:39இல் **உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக** என்ற வசனம் லேவி.19:18லிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இது சுய அன்பை வெளிப்படுத்தவில்லை. மாறாக விசுவாசிகள் தங்களைப்போல பிறரையும் நேசிக்க வேண்டுமென்ற உன்னதமான கற்பனையை வெளிப்படுத்துகிறது. “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக என்பதை பிரதான கட்டளையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உணர்த்துகிறார். மனிதன் உணர்வுப் பூர்வமாகவும் (இருதயம்), விருப்பத்தின் அடிப்படையிலும் (ஆன்மா), அறிவோடும் (மனம்), உடல் வலிமையோடும் (பலம்) தேவனை ஆராதிக்க வேண்டுமென்று மாற்கு தனது சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார்.

## பிரதான கற்பனை

மாற்கு 12:28-31 & லூக்கா 10:25-27 - கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று பரிசேயர் கேட்ட இரண்டாவது கேள்வியானது முக்கியமான ஒன்றாகும். இயேசுவை சோதிக்கும்படியாக இக்கேள்வி கேட்கப்பட்டது. அவரது பதிலினால் அவர் நியாயப்பிரமாணத்தை அழிக்க வந்தார் என்று அவர்மீது குற்றம்சாட்ட எண்ணினார்கள். தேவன் மோசேக்கு வழங்கிய 10 கட்டளைகளில் தேவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும், பிறருக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் சுருக்கி லேவி.19:18 மற்றும் உபா.6:5 வசனங்களில் எழுதப்பட்டுள்ளன. அன்பே நமது வாழ்வின் அடிப்படை. குறிப்பிட்ட கற்பனைகளுக்குப் பதிலாக தேவனைப்போல் அன்பு செலுத்த வேண்டுமென்ற கட்டாயத்தை இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார்.

## I. தேவனிடம் அன்பு செலுத்துதல்

முதலாம் கற்பனையானது நாம் முழு இருதயத்தோடு தேவனிடத்தில் அன்பு செலுத்தவும், எல்லாவற்றிற்கும் மேலாக அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் போதிக்கிறது. இந்த அன்பு நமது ஆராதனை, கீழ்ப்படிதல், ஊழியம், அவரின் சித்தத்தின் படி வாழ்வது ஆகியவற்றின் மூலம் வெளிப்படுகிறது. இதைக் குறித்து உபா. 6:5, லேவி. 19:18, ரோமர் 13:10 ஆகிய வசனங்களில் வாசிக்கலாம்.

### தேவனுக்கான முழுமையான அன்பு

தேவனிடம் அன்பு செலுத்துவது நமது அர்ப்பணத்தின் ஒரு பகுதியல்ல. 'முழு' இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் அன்பு கூறவேண்டும் என்பதன் மூலம் தேவன் நம்மிடம் முழுமையான அன்பை எதிர்பார்க்கிறார் என்று அறிகிறோம். **இருதயம்** நமது ஆழமான அன்பையும், **ஆத்துமா** நமது உள்ளான வாழ்க்கையையும், நித்திய ஆவியையும், **மனது** நமது சிந்தையையும், புரிந்து கொள்ளுதலையும் வெளிப்படுத்துகிறது. இவற்றிற்கு இடையூறாக உள்ள நமது சுயம், விக்கிரகம், கவனச் சிதறல் போன்றவை முற்றிலும் ஒதுக்கப்படவேண்டும். தேவனை நேசிப்பதொன்றே வாழ்வின் அனைத்திற்குமான அடித்தளமாக அமைய வேண்டும்.

### 2. பிறரிடத்தில் அன்பு செலுத்துதல்

இரண்டாவது கற்பனையாக இயேசு கிறிஸ்து நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள அன்பையும், மற்றவர்களிடம் காட்டும் அன்பையும் ஒப்பிடுகிறார். (லேவி. 19:18) **உன்னைப்போல் பிறனையும் நேசி** என்ற போதனை உண்மையான அன்பை செயலளவிலும், சுயநலமற்ற விதத்திலும் பிறனிடத்தில் காட்டுவதை எதிரொலிக்கிறது. அப்படியானால் நமக்கு பிறர் யார்? நமக்கு அறிமுக மற்றவர்கள், விரோதிகள், மேலும் சமுகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள். பிறரை நேசிப்பது என்பது தேவனை நேசிப்பதின் உண்மை வெளிப்பாட்டின் கனியாகும். இக்கட்டளை சமுதாய மறு மலர்ச்சியை உயிரூட்டி, மற்ற நம்பிக்கை உடையவர்களிடத்தே தொடர்பு கொள்ளச் செய்கிறது. அயலாரிடத்தில் உண்மையான அன்பை வெளிப்படுத்தி நன்மை செய்வதிலும், பிறரை கவனிப்பதிலும், மரியாதை செலுத்துவதிலும், நேர்மையாக நடப்பதிலும் மற்றும் நாம் பிறரிடம் எதிர்பார்ப்பது போல் வாழ்ந்து காட்டுவதின் மூலமே இக்கட்டளையை முழுமைப்பெற செய்திட முடியும். இது நம்மை பிறருக்கு ஆசீர்வாதமானவர்களாக்குகிறது.

### ஒன்றோடொன்று இணைந்திருப்பது

முதலிரண்டு கற்பனைகளைக் கைக்கொள்பவன் தேவனில் அன்புகூர்ந்து, பிறரிடத்திலும் அன்புகூறுகிறான் என இயேசு கூறுகிறார். உண்மையாக தேவனில் அன்புகூறுபவர் இயற்கையாகவே பிறரையும் அன்புடன் நடத்துவர்.

### கிறிஸ்தவ நடைமுறை

உண்மை சீஷத்துவத்திற்கு அன்பே அடையாளமாகிறது. இந்த அன்பானது வெறும் உணர்வுகளோ, வார்த்தைகளோ அல்ல. இது சேவை, மன்னித்தல், கீழ்ப்படிதல் போன்றவற்றை உள்ளடக்கியது. தேவன் மற்றும் நம் அயலகத்தாரிடத்தே கொள்ளும் உண்மை அன்பானது தனி மனிதர்களையும், உறவுகளையும், சமுதாயத்தையும் நல்வழிப்படுத்தும், மாற்றம் கொணரும் வல்லமை கொண்டது. இது தேவனின் சித்தத்தின்படி வாழும் நெறிமுறைகளுக்கு அஸ்திபாரமாகிறது.

## வாழ்ந்து காட்டுதல்

**சேவையில்:** கிறிஸ்துவின் அன்பினால் நாம் முழுமை பெருகிற பொழுது நமது சுயத்தை வெறுத்து தேவனுக்கும் மற்றவர்களுக்கும் சேவை செய்பவர் களாக உருமாறுவோம். இதை அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் வாழ்க்கையில் நாம் காணமுடியும்.

**அன்னை தெரேசா:** வறுமையில் வாழ்ந்தவர்களுக்கும், ஒதுக்கப் பட்டவர்களுக்கும், கைவிடப்பட்டு தெருக்களில் வாழ்ந்தவர்களுக்கும் சேவை செய்தார்.

**மேரி ரீட்:** அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்த இவர் 1891இல் தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தன் வாழ்நாள் முழுவதும் தொழு நோயாளிக்கு சேவை செய்து 1943இல் மரித்தார்.

**புனித டாமியன்:** பெல்ஜியத்தின் குருவானவர். ஹவாய் ராஜ்ஜியத்தின் மோலாக்காய் தீவில் ஒதுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்த தொழு நோயாளிகளின் மத்தியில் பணிசெய்த போது 1884இல் தொழு நோயால் பாதிக்கப்பட்டு 1889இல் மரித்தார்.

**நமது மிஷனெரிகள்:** இவர்களைப் பின்தொடர்ந்து நமது மிஷனெரிகளும் சேவை மற்றும் தியாகத்தின் ஆவியைப் பெற்றவர்களாய் முன்னணியில் நிற்கிறார்கள்.

**மன்னிப்பில்:** தேவ அன்பு பிறரை நேசிப்பதற்கு நம்மை வழிநடத்துகிறது. இது அவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்வதில் விளங்குகிறது. (எபே.4:32, 1யோ.4:20-21, மத்.6:14-15).

**கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலில்:** தேவனுக்கு கீழ்ப்படிவதின் மூலம் அவர்பால் உள்ள நமது உண்மை யான அன்பு வெளிப்படுகிறது. "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று இயேசு கூறுகிறார். (யோ.14:15, 1யோ.5:3, யோ.15:10).

## முடிவுரை

தேவனின் கற்பனை வெறும் கட்டளை யல்ல, இது தேவனின் இயல்பை காட்டுகிறது. நாம் தேவனையும், பிறரையும் நேசிக்கும்போது பரலோகத்தை பூமியிலே பிரதி பலிக்கிறோம்.

**அருள்திரு. M.P. திம்மேஷ்,**
தென்மண்டல செயலர்

## இளம் வாலிபர் கூடுகை

நாள்: 08.11.2025

நேரம்: காலை 9.30மணி முதல் மாலை 4.00 மணி வரை

இடம்:
ஆல் நேஷன்ஸ் சர்ச், சந்தானம்மாள் தெரு, கௌரிவாக்கம், தாம்பரம் (SIVET COLLEGE அருகில்)



## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவாக மனதார

# வாழ்த்துகிறோம்

CNI மும்பை திருமண்டலத்தின் **முதல் தமிழ் பேராயர்**
Rt. Rev. பிரபு துரைசாமி ஜெபமணி, B.D., D.min.

2025 செப்டம்பர் 14 அன்று CNI மும்பை திருமண்டலத்தின் புதிய பேராயராக அபிஷேகம் செய்யப்பட்டுள்ள Rt. Rev. பிரபு துரைசாமி ஜெபமணி அவர்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் இதயப்பூர்வமாக வாழ்த்துகிறோம். இப்புதிய ஊழியப் பொறுப்பில் தேவனின் அளவில்லா கிருபையும், வழிநடத்துதலும் பெற்றிட ஜெபிக்கிறோம்.

பேராயர் ஜெபமணி கடந்த 11 ஆண்டுகளாக மும்பையில் ஆழமான அர்ப்பணிப்புடன் தேவனுக்கு ஊழியம் செய்து வந்தார். புனே வேதாகம கல்லூரியில் பெற்ற இறையியல் பயிற்சி ஊழியத்தின் முக்கியமான பொறுப்பிற்கு அவரைத் தகுதிப்படுத்தியது. அவரது டீக்கன் மற்றும் குருத்துவ அபிஷேகம் அவரது ஆவிக்குரிய பயணத்தில் முக்கிய மைல் கற்களாக உள்ளன. விசுவாசத்தில் வேரூன்றப்பட்ட பேராயர் பிரபு D. ஜெபமணியின் பக்திநெறி அவரது தனிப்பட்ட வாழ்வில் பிரதிபலிக்கிறது. ஊழியத்தில் சிறந்த ஆதரவாக இருக்கும் அவரது மனைவி மற்றும் மும்பையில் கல்வி பயிலும் இரண்டு மகள்களைத் தந்து தேவன் இவரை ஆசீர்வதித்துள்ளார்.

**அருள்திரு. ராபின்சன் ஹஸ்தக்,** துறை செயலர் – வடக்கு & வடகிழக்கு விரிவுப்பணி




# பணித்தள விஜயம்

2025 செப்டம்பர் 19, 20, 21 ஆகிய தேதிகளில் பள்ளிக்கரணை வாலிபர் குழுவின் சார்பில் ஒரிசா மாநிலத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றோம். நம்முடைய மிஷனெரி திரு. சங்கர் அவர்கள் பணிசெய்யும் மூன்று மாவட்டங்களுக்குச் சென்று பார்க்கும்படி கர்த்தர் கிருபை பாராட்டினார். இது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நம்முடைய மிஷனெரிகளை தேவன் வல்லமை யாய் பயன்படுத்தி வருகிறதை அங்குள்ள விசுவாசிகளின் உற்சாகத்தில் நாங்கள் அறிந்துகொண்டோம். ஆண்டவர் எங்களை மிகவும் நேர்த்தியாக மூன்று நாட்களும் ஊழியத்தில் வழிநடத்தி, சுகபத்திரமாய் சென்னை திரும்ப கிருபை செய்தார். எங்களுக்கு உதவி செய்த மிஷனெரி குடும்பத்திற்கு எங்களது நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக!

**திரு. D. பிரேம் ஆனந்த்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர்–பள்ளிக்கரணை

## மிஷனெரி பிரதிஷ்டை



ஆண்டவரின் பெரிதான கிருபையினால் காஞ்சிபுரம், இ.சி.ஐ. ஆலயத்தில் மூன்று மிஷனெரிகளின் பிரதிஷ்டை ஆராதனை 21.09.2025 அன்று ஆயர் அருள்திரு. J. ஐசக் அதிசயநாதன் தலைமையில் நடைபெற்றது. சபை ஆராதனையில் அருள்திரு. ரூபன் சாமுவேல் தேவ செய்தி அளித்தார்கள். பிரதிஷ்டை ஆராதனையில் மண்டல செயலர் அருள்திரு. ஜெயசேகர் தேவ செய்தி மற்றும் சவால்மிக்க பணித்தள செய்தியைப் பகிர்ந்து கொண்டார். மிஷனெரிகள் தங்களின் சாட்சிகளைப் பகிர்ந்துகொண்டனர். மிஷனெரிகளை தங்கள் ஜெபத்தாலும், ஈகையினாலும் தாங்க முன்வந்த திரு. W. கென்னத் மார்டின், திருமதி. E. வனிதா புஷ்பம், மாஸ்டர் I.R. எபினேசர் ஹில்டன் ஆகியோருக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறோம். ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்கள் முழு ஆதரவு அளித்தது அவர்களில் இருந்த மிஷனெரி தரிசனத்தை வெளிப்படுத்தியது. எல்லா துதியும், கனமும், மகிமையும் தேவன் ஒருவருக்கே உரித்தாகுவதாக!

**திரு. இம்மானுவேல் கனகராஜ்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – காஞ்சிபுரம்

## மிஷனெரிகள் பிரதிஷ்டை



கர்த்தருக்கு மகிமையாக அக்டோபர் 5ஆம் தேதி கீழ்க்கட்டளை பணிமாவட்டத்தின் சார்பாக நான்கு மிஷனெரிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இவர்களை திரு. மகாதேவன் ராஜன் குடும்பம் மற்றும் திரு. நிமான்சிங் குடும்பம் ஜெபத்தாலும், ஈகையினாலும் தாங்கி வருகிறார்கள். அருள்திரு. ஜாண் சாந்தராஜ், அருள்திரு. விஜய் P. ஐசக், அருள்திரு. C.R. ஜார்ஜ் மற்றும் ஊழியர்கள் இணைந்து மிஷனெரிகளைப் பிரதிஷ்டை செய்தார்கள். கீழ்க்கட்டளை பணி மாவட்ட செயலர் திரு. ஜாண் சாலமோன் அவர்கள் மற்றும் அனைத்து ஜெபக்குழுத் தலைவர்கள், அங்கத்தினர்கள் இணைந்து இந்த பிரதிஷ்டை ஆராதனையை சிறப்பாக நடத்தினார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருள்திரு. C.R. ஜார்ஜ்,** பிராந்திய விரிவுப்பணி செயலர் – தென் சென்னை

# மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. T. ஜெபதுரை அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் உடன்குடியைச் சேர்ந்தவர். இவர் மூணாரில் 33 வருடங்கள் பணிசெய்தபோது தன் அழுத்தமான பணிகளின் மத்தியிலும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் விரிவுப் பணியில் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை திறமையாகச் செய்து பல ஜெபக்குழுக்களையும், ஜெபக்குழுத் தலைவர்களையும், மிஷனெரிகளையும் உருவாக்கி உள்ளார். திருச்சபைகளில் ஆராதனை நடத்தவும், நற்செய்தியைப் பகிரவும் தேவன் இவரை பயன்படுத்தினார். ஜெபக் கூட்டங்கள், எழுப்புதல் முகாம்கள் நடத்தியும், தனது ஜெபம், எளிமை, தியாகம், பரிசுத்த வாழ்வின் மூலம் பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்தார். நம் இயக்கத்தின் பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழுவின் அங்கத்தினராக சிறப்பாக செயல்பட்டவர். 22.06.2025 அன்று தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்த அன்னாரது இழப்பு நமது இயக்கத்திற்கும், திருச்சபைகளுக்கும் பேரிழப்பாகும். ஆறுதலின் தேவன் தாமே அவரது இரண்டு மகன்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள ஜெபிப்போம்.

**திரு. T. சாமுவேல்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர்.

# பணித்தள விஜயம்



கர்த்தரின் பெரிதான கிருபையால் காஞ்சிபுரம் மாவட்டத்தின் சார்பாக 25 பேர் கொண்ட குழுவாக 27.09.2025 அன்று கர்நாடகா மாநிலத்திலுள்ள கோலார் பிராந்தியத்திற்குச் சென்றடைந்தோம். அங்கிருந்து பிராந்திய செயலர் மற்றும் மிஷனெரிகளோடு இணைந்து 4 குழுவாகப் பிரிந்து முல்பகல், ஸ்ரீனிவாசபுரம், மாலூர் மற்றும் கோலார் பணித்தளங்களைப் பார்வையிட்டோம். விசுவாசிகளின் அனுபவ சாட்சிகளைக் கேட்கவும், இரவு ஜெபக்கூட்டங்களில் கலந்துகொள்ளவும் தேவன் கிருபை செய்தார். 28.09.2025 அன்று 5 இடங்களில் நடைபெற்ற ஆலய ஆராதனையில் பங்குப்பெற்று தேவ வார்த்தையைப் பகிர்ந்துகொண்டோம். மாலையில் பிராந்திய செயலர், மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் அனைவரும் குடும்பமாகக் கலந்துகொண்ட கூட்டத்தில் அருள்திரு. ரூபன் சாமுவேல் தேவ வார்த்தையைப் பகிர்ந்தார்கள். எதிர்ப்புகள் மத்தியிலும் அயராது தேவ வார்த்தையை சுமந்துச் செல்லும் நமது மிஷனெரிகளின் கடின உழைப்பையும், சபைகளின் வளர்ச்சியையும் கண்ணாரக் கண்டு தேவனைத் துதித்து, எங்களின் அர்ப்பணிப்பை, ஜெபத்தை இன்னும் அதிகமாக்க வேண்டும் என்ற சிந்தையோடு திரும்பி வர தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. இம்மானுவேல் கனகராஜ்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – காஞ்சிபுரம்

## மகிமைக்குள் பிரவேசித்தார்



திருச்சி, சுப்பிரமணியபுரம் நமது ஜெபக்குழுத் தலைவர் திரு. சார்லஸ் தினகர் அவர்களின் தகப்பனார் திரு. ஜே. தங்கராஜ் ஐயா (83 வயது) கடந்த 17.09.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். ஐயா அவர்கள் இந்திய ரயில்வேயில் ஜுனியர் எஞ்சினியராக பணி செய்து ஓய்வுப் பெற்றவர். கடந்த 35 ஆண்டுகள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தீவிர ஆதரவாளராக செயல்பட்டு, அநேக ஆலயங்களைக் கட்டுவதற்கு ஆதரவு அளித்தவர். ஐயாவின் பிள்ளைகளான திரு. ஜான் சாமுவேல் கருணாகர், திரு. சார்லஸ் தினகர், திருமதி. பிளாரன்ஸ் உஷாராணி ஆகியோரின் குடும்பங்களின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

**அருள்திரு. மணிமாறன்,** விரிவுப்பணி செயலர் – மத்திய மண்டலம், திருச்சி

## மிஷனெரி பிரதிஷ்டை



28.09.2025 அன்று பெரியவிளை CSI ஆயர் மண்டல திருச்சபை, ஞாயிறு காலை ஆராதனையில் மிஷனெரி சகோ. பென்னிசன் எபிநேசர் அவர்களை சபை போதகர் அருள்திரு. சுஜின் ராஜ் அவர்களும், குமரி மாவட்ட பிராந்திய செயலர் அருள்திரு. ஆல்பின் அவர்களும் அர்ப்பணம் செய்து வைத்தார்கள். பெரியவிளை, பரிபூரணம் நற்செய்தி ஜெபக்குழு இம்மிஷனெரியை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குகிறார்கள். சகோ. Y.P. தேவதாஸ் அவர்கள் மிஷனெரி அர்ப்பணிப்பு ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

**அருள்திரு. ஆல்பின்,** குமரி மாவட்ட பிராந்திய செயலர்



## ஆலயப் பிரதிஷ்டை

ஜார்கண்ட் மாநிலம் வனாஞ்சல் பிராந்தியம், அம்திகா பணித்தளம், டெய்லிபதர் கிராமத்தில் சென்னை, சாந்தோம் மற்றும் மந்தவெளி ஜெபக்குழு சார்பாக கட்டப்பட்ட ஆலயத்தை 05.10.2025 அன்று தேவனுடைய நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்ய ஆண்டவர் கிருபை பாராட்டினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**கௌரவ பிராந்திய செயலர்**
**– சாந்தோம், சென்னை.**

# பணித்தள விஜயம்



செப்டம்பர் மாதம் 25ம் தேதி சென்னை அண்ணாநகர் ஜெபக்குழு சார்பாக 11 பேர் கொண்ட குழுவாக ஜார்கண்ட் மாநிலம், சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்தியத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றோம். 25ஆம் தேதி இரவில் பாக்கூர் இரயில் நிலையம் வந்து சேர்ந்தபோது மிஷனெரி குடும்பத்தினர் அன்புடன் வரவேற்று, இரவில் சோட்டாகக்ரி தலைமைத்துவ பயிற்சிமையத்தில் தங்கவைத்தனர்.

மறுநாள் ஜோர்டிகா கிராமத்திற்குச் சென்று அங்குள்ள ஆலயத்தின் விசுவாசிகளோடு ஆலய ஆராதனையில் பங்குப்பெற்றோம். சந்தால் இன மக்கள் மத்தியில் நாம் செய்து வரும் ஊழியத்தின் வளர்ச்சியையும், சபை மக்களின் மேம்பாட்டையும், மிஷனெரிகளின் தியாகமான ஊழியங்களையும் கண்கூடாகக் காணமுடிந்தது. மேலும் முதியோருக்கு கல்வி கற்பித்தல், ஆலய ஆராதனைகள், உபவாச ஜெபங்கள், வாலிபர் & பெண்கள் கூட்டங்கள் யாவும் நினைப்பதற்கு மேலாகவே வளர்ச்சியடைந்துள்ளன. ஆலய ஆராதனைக்குப்பின் சாந்தனா சிறுவர் விடுதிக்குச் சென்று இரவில் நடந்த பிள்ளைகளின் கலை நிகழ்ச்சியில் பங்குப்பெற்றோம். அடுத்தநாள் சுந்தர்பஹாடியிலுள்ள பாண்ட்ரியா கிராமத்துக்கு மலை, ஆறுகளைக் கடந்து சென்றோம். மக்களுடைய விசுவாச வளர்ச்சியைக் கண்டு தேவனுக்கு நன்றி செலுத்தினோம். மேலும் அவர்களுடைய அனுதின உழைப்பு கடினமானதென்று அறிந்துகொண்டோம். விசுவாசிகள் தெய்வ பயத்தில் சிறந்து விளங்குகிறார்கள். மறுநாள் கதுவா பணித்தளத்தில் சேலம் ஜெபக்குழுவால் கட்டப்பட்ட ஆலய பிரதிஷ்டை வைபவத்தில் கலந்துகொண்டோம். மிகவும் அழகான ஆலயத்தைக் கட்டிக் கொடுத்த சேலம் ஜெபக்குழுவினரைப் பாராட்டுகிறோம். அன்று மாலை பணித்தளத்தில் கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகளின் கல்லறைகளைப் பார்வையிட்டு, அவர்களின் தியாகமான வாழ்க்கைக்காக நன்றி செலுத்தி ஜெபித்து வந்தோம். பின்னர் சமுதாய கல்லூரிக்குச் சென்று அதைப் பொறுப்பேற்று நடத்தும் அண்ணன், அக்காவை சந்தித்து அவர்களைப் பாராட்டி ஜெபித்து வந்தோம். இரவில் பர்ஹர்வா சிறுமியர் விடுதி சென்று அங்கு நடந்த கலை நிகழ்ச்சியில் பங்குப்பெற்றோம். 29ஆம் தேதி அங்கிருந்து புறப்பட்டு இரவில் சென்னை வந்து சேர்ந்தோம்.

நாங்கள் பணித்தள விஜயம் செய்த நாட்களில் மிஷனெரி குடும்பங்கள் காட்டின அன்பு, இனிய உபசரிப்பு, தங்குமிடம், போக்குவரத்து வசதிகள் யாவும் மிகவும் அருமையாக இருந்தது. இவை எங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாதவைகள். நாம் இன்னும் அதிகமாக ஜெபிக்கவும், உழைக்கவும் வேண்டும் என்ற எண்ணத்தை உணர்த்தியது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. A.P. கனகராஜ்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – அண்ணா நகர், சென்னை

# ஆலயப் பிரதிஷ்டை



கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நெல்லை பிராந்தியத்திலிருந்து 13 பேர் கொண்ட ஒரு குழு திரு. ஜே. செல்வராஜ் அவர்கள் தலைமையில் 7.10.2025 முதல் 13.10.2025 வரை குஜராத் மாநிலத்திற்கு பணித்தள விஜயம் சென்றோம். ஜாவ்டா பள்ளியையும், கெர்காம் சிறுவர் விடுதியையும், சில்வாசா, பர்டோலி, சூரத், ஜமுனா நகர் ஆகிய பணித்தளங்களையும் மற்றும் அஹ்வா ஆலயத்தையும் பார்ப்பதற்கு ஆண்டவர் கிருபை செய்தார். பிப்பள்வாடா பணித்தளத்தின் பமாரியா கிராம ஆலயத்தை 10.10.2025 அன்று அருள்திரு. சோபிதா சிங் அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள். அதில் நமது பள்ளியில் படித்த நமது விசுவாசியான உள்ளூர் எம்.எல்.ஏ. திரு. மோகன் பாயும் கலந்துகொண்டார். இவ்வாராதனையை ஒழுங்கு செய்த பிராந்திய செயலர் மற்றும் மிஷனெரிகளுக்கு நன்றி கூறுகிறோம். தேவனுடைய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக!

**திரு. ஜே. செல்வராஜ்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – திருநெல்வேலி மத்திய பகுதி

## கிறிஸ்தவ வியாபாரிகள் கூடுகை – 2025

நாள்: 9 நவம்பர் 2025 ஞாயிற்றுக் கிழமை

நேரம்: மாலை 5 மணி முதல் 8.30 மணி வரை

இடம்: இம்மானுவேல் ஆலய சமுதாய கூடம், அஸ்தம்பட்டி, சேலம் – 7

செய்தியாளர்கள்: **சகோ. ஐசக் பாலசிங்**

**திருமதி. ஜாஃபி ஐசக்** (தூத்துக்குடி மாவட்டம்)

பணித்தள செய்தி: **மிஷனெரி ஜான்சன் சங்கர்**

**திருமதி. ஜெபராணி** (FMPB, ஹிமாச்சல்)

## மிஷனெரி தரிசனக் கூடுகை
## பெருங்குடி பணி மாவட்டம்

நாள்: 15 நவம்பர் 2025 சனிக் கிழமை

நேரம்: மாலை 5.30 மணிக்கு

இடம்: பாரத் தாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெருங்குடி, சென்னை-96.

செய்தியாளர்: **அருள்திரு. பால் சாலமோன்** (FMPB, சென்னை)

தொடர்பு: 7708273734, 9176599911

# நிதிக்காவலரின் அறிக்கை

*"இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது" (சங். 133:1)*

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளர்களே,

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

2024-2025ஆம் நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கையை (மார்ச் 31 வரையுள்ள) உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன். எங்களிடத்திலே ஒப்புவிக்கப்பட்ட உக்கிராணத்துவத்தை எடுத்தியம்பவும், ஜெப சிந்தையோடுகூட எதிர்கால ஊழியத்தை திறம்பட திட்டமிடுவதற்கும் கொடுக்கப்பட்ட இத்தருணத்திற்காக தேவனின் உண்மைத்துவத்தை எண்ணி அகமகிழ்கிறேன்.

ஒரு இயக்கமாக இயங்கி வரும் நமது அனைத்து செயல்களிலும் தேவனது வழிநடத்துதலையும், அவரது பிரசன்னத்தையும் நல் இதயத்துடன் நாடுவோமாக. நம்மிலே நற்செயல்களைத் தொடங்கினவர் முற்றும்முடிய அதை நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார் என்பதை விசுவாசித்து முன்னேறுவோமாக! மேலும் தேவனது உன்னத சித்தத்தை நிறைவேற்ற முற்படும் நம்மிலே, தேவ ஊழியத்தின் அனைத்து திட்டங்களிலும் தெய்வீக ஞானத்தைத் தேடும் மெய் எண்ணங்களும், உண்மைத் தேடுதலும் முழுமைப்பெற்று சிறக்கட்டும். தேவனுக்குச் செய்யும் இந்த உன்னத பணியிலே நமது ஒற்றுமையும், அர்ப்பணமும் கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிப்பதிலே நிலைகொண்டிருக்கட்டும். உங்களது உண்மைத்துவமான ஜெபத்திற்கு தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

## 2024-2025 ஆண்டுக்கான நிதி அறிக்கை:

உள்ளம் கனிந்த நன்றியுடன் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 2024-2025 மார்ச் 31 வரையிலான தணிக்கையிடப்பட்ட நிதி அறிக்கையை சமர்ப்பிக்கிறேன். இந்த நிதி அறிக்கையை புதிய வடிவில் தயாரித்து வழங்கிய நமது தணிக்கையாளர்கள் திரு. ஜான் ரவிந்திரன் மற்றும் அவரது குழுவினருக்கும், FMC நிர்வாகக் குழு மற்றும் நமது கணக்குப் பிரிவு குழுவினருக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

நமது இயக்கத்தின் பொதுக்குழு மற்றும் நிர்வாகக்குழுவின் ஒப்புதலளிக்கப்பட்ட 31.03.2025 வரையிலான தணிக்கைச் செய்யப்பட்ட நிதி அறிக்கையின் முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருமானத்தின் விபரங்கள் | 2024- 2025 நிதயாண்டு (கோடிகள்) | 2023-2024 நிதயாண்டு (கோடிகள்) |
|---|---|---|
| அயல் நாட்டு வருவாய்* | 2.80 | 3.66 |
| வட்டி மற்றும் இதர வருவாய் | 2.78 | 2.42 |
| உள்நாட்டு வாருவாய்* | 77.82 | 74.63 |
| மொத்த வருவாய் | 83.41 | 80.71 |

*நிதி வருவாய்களும் அடங்கும்.

| | | |
|---|---|---|
| இந்த ஆண்டிற்கான மொத்த செலவுகள் | 87.35 | 82.09 |
| வருமானத்தை மீறிய செலவு | (3.94) | (1.38) |

| வருமானத்தின் விபரங்கள் | 2024- 2025 நிதயாண்டு (கோடிகள்) | 2023-2024 நிதயாண்டு (கோடிகள்) | வித்தியாசம் |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 83.41 | 80.71 | ↑ 3.3% |
| மொத்த செலவுகள் | 87.35 | 82.09 | ↑ 6.4% |
| அதிகபட்சம் / இழப்பு | (3.94) | (1.38) | செலவு > வருமானம் |
| மொத்த நிதி | 88.12 | 91.53 | ↓ 3.7% |
| மொத்த சொத்து | 91.24 | 95.76 | ↓ 4.7% |
| FCRA வருவாய் | 2.80 | 3.66 | ↓ 23.5% |

இந்த நிதி அறிக்கைகள் நமது பொறுப்புணர்விலே உள்ள அர்ப்பணம், வெளிப்படைத்தன்மை மற்றும் உக்கிராணத்துவத்தை எவ்வண்ணம் எங்களிடையே ஒப்படைக்கப்பட்ட இக்காரியங்களை உத்தமத்தோடு நிறைவு செய்துள்ளோம் என்பதை வெளிக்கொணர்கிறது.

**சட்ட மாற்றங்கள்:**

வருமான வரிச்சட்டம் பணப் பரிவர்த்தனைகளின் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. நமது ஜெபக்குழுத் தலைவர்கள் ஆதரவாளர்களிடமிருந்து பெறப்படும் காணிக்கைகளை பதிவு செய்ய கைப்பேசி செயலியின் பயன்பாட்டை உபயோகப்படுத்துமாறு ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள். சில வங்கிகள் பண வைப்புகள் (Money Deposit) மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால் அதிக சவால்களை சந்திக்கவேண்டியுள்ளது.

**முடிவுரை:**

உங்களது மாறாத ஜெபங்களுக்கும், தியாகமான பங்களிப்பிற்கும் மற்றும் இயக்கத்தோடுள்ளதான உறுதியான நல்லுறவுக்கும் இம்மடல் வாயிலாக உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கிறேன். ஆண்டவர் நம்மை தொடர்ந்து ஆசீர்வதித்து அவருடைய மகிமைக்காக நம்மை வழிநடத்துவாராக!

எதிர்வரும் சவால்களை சந்திப்பதற்கு தேவன் எங்களை வழிநடத்த அனைவரும் உங்களது ஜெபங்களிலே நினைவுகூறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தேவன் உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் மிகுதியாக ஆசீர்வதித்து அவருடைய நாமத்தில் இன்னும் பெரிய சாதனைகள் புரிய உங்களை வழிநடத்துவாராக!

நன்றியுடனும், ஆசீர்வாதத்துடனும்,

கிறிஸ்துவில் உங்கள் சகோதரன்,



**CA. L. நெல்சன்**
பொருளாளர்

# INDEPENDENT AUDITOR'S REPORT ON FINANCIAL STATEMENTS

To
The Members of
**M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND**

**Report on the Financial Statements:**
We have audited the Financial Statements of M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND, 29, High School Road, Ambattur, Chennai – 600 053 ("the Society"), which comprise of Balance Sheet as at 31st March 2025, the Income & Expenditure account and the Receipts and Payments account for the year ended 31st March 2025 and the notes to the financial statements consisting of summary of significant accounting policies.

In our opinion and to the best of our information and according to the explanations given to us,

Subject to our "Observations on Financial Systems and Statements" attached to this Report, these Financial Statements of accounts of **M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND** give a true and fair view of the financial position of the Society as at 31st March 2025 and of its financial performance for the year then ended in accordance with the Accounting Standards issued by the Institute of Chartered Accountants of India (ICAI).

**Basis for Opinion:**
We have conducted our audit in accordance with Standards on Auditing (SAs) issued by the Institute of Chartered Accountants of India. Our responsibilities under those standards are further described in the *Auditor's Responsibilities for the Audit of the Financial Statement* section of our report. We are independent of the "M/s. Friends Missionary Prayer Band, Chennai" in accordance with the Code of Ethics issued by the ICAI, and have fulfilled our other ethical responsibilities in accordance with the Code of Ethics. We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

**Responsibilities of Management and those charged with Governance for the Financial Statement:**
Management is responsible for the preparation and fair presentation of these financial statements that give a true and fair view of the state of affairs and results of operations in accordance with the accounting principles generally accepted in India. This responsibility includes the design, implementation and maintenance of internal control relevant to the preparation and presentation of these Financial Statements that give a true and fair view and are free from material misstatement, whether due to fraud or error.

J S A S ASSOCIATES CHARTERED ACCOUNTANTS FRN:014859S CHENNAI-40

In preparing the financial statements, management is responsible for assessing the entity's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the entity or to cease operations, or has no realistic alternative but to do so.

Those charged with governance are responsible for overseeing the Organization's financial reporting process.

**Auditor's Responsibilities for the Audit of the Financial Statement:**
Our objectives are to;

1. Obtain reasonable assurance about whether the financial statements as a whole is free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditor's report that includes our opinion. Reasonable assurance is a high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with Standards on Auditing (SAs) will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

   As part of an audit in accordance with SAs, we exercise professional judgment and maintain professional skepticism throughout the audit. Identify and assess the risks of material misstatement of these Financial Statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for our opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.

2. Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the entity's internal control.

3. Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates, if any, and related disclosures made by management.,

4. Evaluate the overall presentation, structure and content of these Financial Statements, including the disclosures, and whether these Financial

& ASSOCIATES FRN 014859S CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS

a g e

Statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

5. We have communicated with those charged with governance regarding, among other matters, significant audit findings, including any significant deficiencies in internal control that we identified during our audit.

Our responsibility is to express an opinion on these Financial Statements based on our audit. We conducted our audit in accordance with the Standards of Auditing (SA) as prescribed by the Institute of Chartered Accountants of India (ICAI). These Standards require that we comply with ethical requirements and plan and perform the audit to obtain reasonable assurance about whether these financial statements are free from material misstatements.

An audit involves performing procedures to obtain audit evidence about the amounts and disclosures in these Financial Statements. The procedures selected depend on the auditor's judgment, including the assessment of the risks of material misstatement, of these Financial Statements, whether due to fraud or error. In making those risk assessments, the auditor considers the internal control relevant to the entity's preparation and fair presentation of these Financial Statements in order to design audit procedures that are appropriate in the circumstance, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the entity's internal control. An audit also includes evaluating the appropriateness of the accounting policies used and the reasonableness of the accounting estimates made by the management, as well as evaluating the overall presentation of these financial statements.

We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our audit opinion.

For J S A S & Associates
Chartered Accountants
(FRN. 014859S)

John Ravindran Moses
Partner
(Mem. No. 028566)
UDIN : 25028566BMMAIF8339

Place: Chennai
Date: 20.09.2025

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**BALANCE SHEET AS AT 31ST MARCH 2025**

(Amount in Rs.)

| Particulars | Note | Value as at 31-03-2025 | Value as at 31-03-2024 |
|---|---|---|---|
| **Sources of Funds** | | | |
| **NPO Funds** | 3 | | |
| Unrestricted Funds | | 47,03,10,280 | 50,97,50,339 |
| Restricted Funds | | 41,08,89,339 | 40,55,61,355 |
| | | 88,11,99,619 | 91,53,11,695 |
| **Current liabilities** | | | |
| Other current liabilities | 4 | 3,11,85,630 | 4,22,94,335 |
| | | 3,11,85,630 | 4,22,94,335 |
| **Total** | | **91,23,85,249** | **95,76,06,030** |
| **Application of Funds** | | | |
| **Non-current assets** | | | |
| Property, Plant and Equipment and Intangible assets | 5 | | |
| Property, Plant and Equipment | | 45,63,35,205 | 42,75,93,432 |
| Construction in Progress | | 1,61,94,770 | 2,39,67,357 |
| Non Current Investments | 6 | 23,51,25,992 | 16,67,02,782 |
| | | 70,76,55,967 | 61,82,63,571 |
| **Current assets** | | | |
| Current Investments | | 14,80,42,938 | 24,08,45,222 |
| Cash and bank balances | 7 | 1,06,32,957 | 3,31,55,134 |
| Other current assets | 8 | 4,60,53,388 | 6,53,42,103 |
| | | 20,47,29,283 | 33,93,42,459 |
| **Total** | | **91,23,85,249** | **95,76,06,030** |

The accompanying notes 1 to 15 are an integral part of the financial statements

**For J S A S & ASSOCIATES**
**Chartered Accountants**
**(Firm Registration No. 014859S)**

J S A S & ASSOCIATES FRN: 014859S CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS

**John Ravindran Moses**
**Partner**
**(Membership No. 028566)**
UDIN: 25028566BMMAIF8339

Place: Chennai
Date: 20.09.2025

Friends Missionary Prayer Band 29, High School Road, Ambattur, Ch-53

**L.NELSON**
**TREASURER**

**VIJAY PRASANNA ISAAC**
**GENERAL SECRETARY**

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

29 High School Road, Ambattur, Chennai - 600053

**Income and Expenditure Account for the year ended 31st March 2025**

(Amount in Rs.)

| Particulars | Note | Year ended 31-03-2025 | Year ended 31-03-2024 |
|---|---|---|---|
| **Income** | | | |
| Foreign Contribution Received | 9 | 2,80,34,736 | 3,65,88,512 |
| Domestic Receipts | 10 | 77,82,40,650 | 74,62,71,624 |
| Other Income | 11 | 2,78,28,578 | 2,42,16,353 |
| **Total Income** | | **83,41,03,964** | **80,70,76,490** |
| | | | |
| **Expenses:** | | | |
| Program Expenses | 12 | 65,23,45,564 | 62,23,95,744 |
| Administration Expenses | 13 | 7,59,63,227 | 6,45,63,566 |
| Employee Benefits | 14 | 10,72,92,576 | 9,75,65,615 |
| Depreciation and amortization expense | 15 | 3,79,42,655 | 3,63,82,491 |
| **Total expenses** | | **87,35,44,023** | **82,09,07,416** |
| | | | |
| **Excess of Expenditure over Income** | | 3,94,40,059 | 1,38,30,927 |
| The accompanying notes 1 to 15 are an integral part of the financial statements | | | |

The accompanying notes 1 to 15 are an integral part of the financial statements

**For J S A S & ASSOCIATES**
**Chartered Accountants**
**(Firm Registration No. 014859S)**

J S A S & ASSOCIATES * FRN: 014859S CHENNAI-40 * CHARTERED ACCOUNTANTS *

**John Ravindran Moses**
**Partner**
**(Membership No. 028566)**
UDIN : 25028566BMMAIF8339

Friends Missionary Prayer Band * 29, High School Road, Ambattur, Ch-53 *

**L.NELSON**
**TREASURER**

**VIJAY PRASANNA ISAAC**
**GENERAL SECRETARY**

Place: Chennai
Date: 20.09.2025

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

**Notes forming part of the Financial Statements for the year ended, 31st March, 2025**

**5. Property, Plant and Equipment and Intangible Assets (owned assets)** (Amount in Rs.)

| PARTICULARS | W.D.V. AS ON 31 March-2024 | ADDITIONS 2024 - 2025 | Capitalized Amt | DELETIONS 2024 - 2025 | GROSS BLOCK | RATE OF DEPRECIATION | DEPRECIATION AMOUNT | W.D.V. AS ON 31-MAR-2025 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Bicycle | 11,98,252 | 21,316 | | | 12,19,568 | 10% | 1,21,132 | 10,98,436 |
| Building on Lease Land | 68,384 | - | | | 68,384 | 10% | 6,838 | 61,546 |
| Buildings | 24,95,47,735 | 5,30,92,375 | | | 30,26,40,110 | 10% | 2,79,77,558 | 27,46,62,551 |
| Computer | 4,06,359 | 12,17,864 | | | 16,24,223 | 40% | 4,73,462 | 11,50,761 |
| Equipment | 2,55,46,067 | 52,87,450 | | | 3,08,33,517 | 15% | 42,88,258 | 2,65,45,260 |
| Four/Six Wheelers | 1,14,85,468 | - | | | 1,14,85,468 | 15% | 17,22,820 | 97,62,648 |
| Furniture & Fittings | 19,72,782 | 7,23,665 | | | 26,96,447 | 10% | 2,39,719 | 24,56,728 |
| Generator | 33,88,138 | 21,88,403 | | | 55,76,541 | 15% | 6,77,713 | 48,98,828 |
| Land | 12,03,56,536 | - | | | 12,03,56,536 | 0% | - | 12,03,56,536 |
| Motor Cycle/Scooter | 1,36,23,710 | 42,52,355 | | 99,000 | 1,77,77,065 | 15% | 24,35,154 | 1,53,41,911 |
| **Sub Total** | **42,75,93,432** | **6,67,83,428** | **-** | **99,000** | **49,42,77,860** | | **3,79,42,655** | **45,63,35,205** |
| **Construction in Progress** | | | | | | | | |
| **INDIAN ACCOUNT** | | | | | | | | |
| Jhansi Home | 16,000 | | 16,000 | | - | 0% | - | - |
| Ambakani Home | 14,04,545 | | | | 14,04,545 | 0% | - | 14,04,545 |
| Poondi Project | 9,02,798 | 30,07,406 | 39,10,204 | | - | 0% | - | - |
| Gangupada Home | 5,00,000 | 21,09,565 | | | 26,09,565 | 0% | - | 26,09,565 |
| Kawant Home | 2,40,122 | | | | 2,40,122 | 0% | - | 2,40,122 |
| Home Sangavi | 12,29,912 | 3,97,205 | 16,27,117 | | - | 0% | - | - |
| Taloda Home | 4,60,115 | 2,46,073 | | | 7,06,188 | 0% | - | 7,06,188 |
| Sarasmal Girls Home | 4,90,401 | 13,00,000 | 17,90,401 | | - | 0% | - | - |
| Netrang Home | 61,570 | 2,92,860 | | | 3,54,430 | 0% | - | 3,54,430 |
| Pandeni Home | 5,00,000 | 14,76,670 | | | 19,76,670 | 0% | - | 19,76,670 |
| Pathalgaon Home | 6,91,200 | | | | 6,91,200 | 0% | - | 6,91,200 |

Friends Missionary Prayer Band • 29, High School Road, Ambattur, Ch-53 •

ISAS & ASSOCIATES • FRN: 014535S • CHENNAI-40 • CHARTERED ACCOUNTANTS

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

**Notes forming part of the Financial Statements for the year ended, 31st March, 2025**

**5. Property, Plant and Equipment and Intangible Assets (owned assets)** (Amount in Rs.)

| PARTICULARS | W.D.V. AS ON 31 March-2024 | ADDITIONS 2024 - 2025 | Capitalized Amt | DELETIONS 2024 - 2025 | GROSS BLOCK | RATE OF DEPRECIATION | DEPRECIATION AMOUNT | W.D.V. AS ON 31-MAR-2025 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Nelli Rehinius Building | 28,61,526 | 36,26,373 | 64,87,899 | | - | 0% | - | - |
| Kustagi | 3,66,067 | | 3,66,067 | | - | 0% | - | - |
| Indur Church | 4,02,642 | | 4,02,642 | | - | 0% | - | - |
| Premnagar Church | 3,00,595 | | 3,00,595 | | - | 0% | - | - |
| Khai Church | 2,05,160 | | 2,05,160 | | - | 0% | - | - |
| Ettiwadi Church | 2,14,727 | | 2,14,727 | | - | 0% | - | - |
| Ishlapuram Church | 89,959 | | 89,959 | | - | 0% | - | - |
| RCPS | | 10,56,845 | | | 10,56,845 | 0% | - | 10,56,845 |
| LTI Periyamalai | | 15,77,900 | | | 15,77,900 | 0% | - | 15,77,900 |
| Home Selemba | | 45,000 | | | 45,000 | 0% | - | 45,000 |
| **FCRA ACCOUNT** | | | | | | | | |
| Dumka Multi Purpose Hall | 25,60,815 | 4,30,478 | 29,91,293 | | - | 0% | - | - |
| Dhalbumgarh Home | 69,11,544 | 33,72,912 | 1,02,84,456 | | - | 0% | - | - |
| Jhansi Home | 35,57,659 | 69,58,373 | 1,05,16,032 | | - | 0% | - | - |
| Khegam Hostel | | 24,91,784 | 24,91,784 | | - | 0% | - | - |
| Joshipur Home | | 2,35,248 | 2,35,248 | | - | 0% | - | - |
| Home Pipalwada | | 9,89,583 | 9,89,583 | | - | 0% | - | - |
| RCPS | | 1,01,73,208 | 1,01,73,208 | | - | 0% | - | - |
| Home Kawant | | 55,32,305 | | | 55,32,305 | 0% | - | 55,32,305 |
| **Sub Total** | **2,39,67,357** | **4,53,19,788** | **5,30,92,375** | **-** | **1,61,94,770** | | **-** | **1,61,94,770** |
| **TOTAL** | **45,15,60,789** | **11,21,03,216** | **5,30,92,375** | **99,000** | **51,04,72,630** | | **3,79,42,655** | **47,25,29,975** |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

### Notes forming part of the Financial Statements for the year ended, 31st March, 2025

| Sl. No | Particulars | Year ended 31-03-2025 | Year ended 31-03-2024 |
|---|---|---|---|
| 9 | **Foreign Contribution Received** | | |
| | Donation - Building | 1,92,83,687 | 2,28,41,659 |
| | Donation - Christmas Gift | 93,775 | 8,000 |
| | Donation - Church Expenses | 14,25,125 | 21,94,606 |
| | Donation Community Dev - Camp | - | 11,76,410 |
| | Donation Community Dev - Child Care | - | 7,95,603 |
| | Donation Community Dev - Education | - | 24,26,428 |
| | Donation General | - | 93,219 |
| | Donation HR Study Scholarship | 5,61,371 | - |
| | Donation Medical | 59,13,878 | 37,69,053 |
| | Donation - Monthly Pledge | 5,99,188 | 26,89,797 |
| | Donation Training & Development | 1,57,713 | 5,93,739 |
| | **Total Foreign Contribution Received** | **2,80,34,736** | **3,65,88,512** |
| 10 | **Domestic Receipts** | | |
| | Donation - Annual Meet | 95,93,642 | 61,27,849 |
| | Donation - Adult Literacy | 19,600 | 41,750 |
| | Donation - Building | 1,02,41,965 | 71,89,935 |
| | Donation - Calamity Releif | 1,12,913 | 37,93,392 |
| | Donation - Children Home Maintenance | 7,19,650 | 27,00,346 |
| | Donation - Christmas Gift | 4,20,09,163 | 3,85,48,546 |
| | Donation - Church Construction | 7,06,95,954 | 6,30,15,068 |
| | Donation Community Dev - Camp | 1,38,24,739 | 65,70,994 |
| | Donation Community Dev - Child Care | 16,89,35,695 | 16,05,92,330 |
| | Donation Community Dev - Education | 69,44,236 | 54,57,718 |
| | Donation Community Dev - Health Care | 10,23,140 | 3,89,946 |
| | Donation - Field Equipment | 6,24,860 | 2,15,480 |
| | Donation - General | 4,60,25,172 | 5,15,38,971 |
| | Donation - HR Study Scholarship | 24,04,249 | 15,03,848 |
| | Donation - Linguistic Work | 16,70,150 | 10,41,300 |
| | Donation - Medical | 47,31,481 | 56,92,173 |
| | Donation - Monthly Pledge | 38,55,35,474 | 37,07,49,718 |
| | Donation - Music & Media | 3,11,018 | 3,89,891 |
| | Donation - National Missionaries Conference | 1,30,620 | 54,70,495 |
| | Donation - Pension fund | 1,50,700 | 10,31,403 |
| | Donation - Through Field Congregation | 1,04,482 | 14,51,066 |
| | Donation - Training & Development | 64,13,907 | 48,19,375 |
| | Donation - Vehicle | 59,61,840 | 79,31,880 |
| | Donation - Vocational Training | 56,000 | 8,150 |
| | **Total Domestic Receipts** | **77,82,40,650** | **74,62,71,624** |

R. Nelson

Friends Missionary Prayer Band, Ch-53

FRN: 014859S CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS

FRIENDS MISSIONARY PRAYER BAND

Notes forming part of the Financial Statements for the year ended, 31st March, 2025

| Sl. No | Particulars | Year ended 31-03-2025 | Year ended 31-03-2024 |
|---|---|---|---|
| 11 | **Other income** | | |
| | Bank Interest- Savings Bank A/c | 10,46,216 | 11,87,759 |
| | Fixed Deposit Interest | 2,64,57,513 | 2,21,64,730 |
| | Interest on Income Tax Refund | 1,89,699 | - |
| | Miscellaneous Income | 1,35,150 | 4,39,364 |
| | Sale of Vehicles | - | 4,24,500 |
| | **Total other income** | **2,78,28,578** | **2,42,16,353** |
| 12 | **Program Expenses** | | |
| | **FOREIGN CONTRIBUTION A/C PAYMENTS** | | |
| | Community Dev Educational Expenses | 6,18,990 | 19,13,951 |
| | Community Dev Child Care Expenses | 1,52,442 | 12,99,167 |
| | Community Dev Project Medical Care | 1,35,484 | 17,78,273 |
| | **DOMESTIC PAYMENTS** | | |
| | Calamity Relief Expenses | 26,09,749 | 8,73,428 |
| | Children Education Expenses | 2,43,79,709 | 2,33,64,884 |
| | Children HR Study Scholarship Expenses | 79,23,222 | 77,22,611 |
| | Christmas Gift | 3,82,07,925 | 3,72,96,538 |
| | Church Expenses Support | 7,28,55,649 | 5,58,35,367 |
| | Community Dev Camp Expenses | | |
| | Training & Development | 82,89,668 | 91,95,688 |
| | Community Dev Camp Exp | 5,82,32,246 | 5,50,70,727 |
| | Linguistic Work | 9,89,036 | 12,87,702 |
| | Community Development Expenses | | |
| | Medical Care Expenses | 37,83,233 | 36,80,851 |
| | Child Care Expenses | 17,52,91,439 | 16,89,50,150 |
| | Educational Expenses | 6,91,971 | 6,83,452 |
| | Vocational Training Expenses | 12,50,000 | 18,75,000 |
| | Adult Literacy | 5,15,421 | 67,961 |
| | General, Hospitality & Maintenance | | |
| | Mission Field | 52,54,507 | 70,02,729 |
| | Others | 6,41,732 | 5,48,987 |
| | Medical Expenses | | |
| | Mission Field | 86,29,299 | 83,94,045 |
| | Meeting Expenses | | |
| | Mission Field | 16,42,872 | 3,93,674 |
| | Annual Meet Expenses | 82,09,923 | 82,45,163 |
| | National Missionaries Conference Exp. | - | 1,70,33,224 |
| | Postage & Courier | | |
| | Mission Field | 1,76,195 | 2,02,359 |
| | Magazine Postage | 27,83,684 | 35,30,101 |

Friends Missionary Prayer Band

J S ASSOCIATES CHARTERED ACCOUNTANTS FRN:014859S CHENNAI-40

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

**Notes forming part of the Financial Statements for the year ended, 31st March, 2025**

| Sl. No | Particulars | Year ended 31-03-2025 | Year ended 31-03-2024 |
|---|---|---|---|
| | Printing & Stationary | | |
| | Mission Field | 6,91,739 | 18,08,710 |
| | Magazine Printing | 97,26,173 | 1,06,47,679 |
| | Promotional Material Expenses | 82,12,061 | 71,77,945 |
| | Rent & Rates | | |
| | Mission Field | 94,26,747 | 96,24,877 |
| | Repairs & Renewals | | |
| | Mission Field | 71,35,052 | 92,91,816 |
| | Salary & Allowances | | |
| | Mission Field | 11,80,58,120 | 10,31,71,756 |
| | Mobilization | 3,82,00,638 | 3,07,78,118 |
| | Staff Higher Study Expenses | 3,16,614 | 2,76,992 |
| | Telephone & Trunk Calls | | |
| | Mission Field | 22,36,340 | 21,90,859 |
| | Travelling Expenses | | |
| | Mission Field | 1,95,83,990 | 1,78,24,587 |
| | Vehicle Maintenance | | |
| | Mission Field | 1,54,93,695 | 1,33,56,374 |
| | **Total Program expense** | **65,23,45,564** | **62,23,95,744** |
| | | | |
| 13 | **Administration Expenses** | | |
| | **FOREIGN CONTRIBUTION A/C PAYMENTS** | | |
| | Bank Charges | 33,303 | 67,892 |
| | General, Hospitality & Maintenance | 98,360 | - |
| | Repairs & Renewals | 1,34,250 | 10,93,750 |
| | Meeting Expenses | - | 42,190 |
| | Travelling Expenses | 3,87,016 | - |
| | **DOMESTIC PAYMENTS** | | |
| | Audit Fees & Other Expenses | 2,41,760 | 2,65,500 |
| | Bank Charges | 3,86,925 | 4,07,834 |
| | FBF Gift | 6,15,455 | 5,32,800 |
| | General, Hospitality & Maintenance | 45,25,459 | 31,68,873 |
| | Legal Fees | 1,56,000 | 24,173 |
| | Meeting Expenses | 70,37,375 | 31,63,623 |
| | Office Maintenance | 42,47,596 | 36,87,186 |
| | Postage & Courier | 30,98,702 | 26,61,376 |
| | Printing & Stationary | 96,83,751 | 91,34,836 |
| | Rent & Rates | 2,88,17,369 | 2,65,88,779 |
| | Repairs & Renewals | 60,94,616 | 43,11,736 |
| | SBF Gift | 2,21,600 | 1,07,821 |
| | Subscription To Other Missions | 50,000 | |

R. Nelson

Friends Missionary Prayer Band ... High School Road, Ambattur, Ch-53

JSAS & ASSOCIATES FRN: 014859S CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

**Notes forming part of the Financial Statements for the year ended, 31st March, 2025**

| Sl. No | Particulars | Year ended 31-03-2025 | Year ended 31-03-2024 |
|---|---|---|---|
| | Taxes & Insurance | 8,94,597 | 10,16,742 |
| | Taxes & Rates | 5,02,993 | 6,31,069 |
| | Telephone & Trunk Calls | 10,95,467 | 11,65,536 |
| | Travelling Expenses | 53,95,821 | 43,04,587 |
| | Vehicle Maintenance | 22,44,812 | 21,87,263 |
| | **Total Administration Expenses** | **7,59,63,227** | **6,45,63,566** |
| | | | |
| 14 | **Employee Benefits** | | |
| | **FOREIGN CONTRIBUTION A/C PAYMENTS** | | |
| | Staff Medical Expenses | 24,11,380 | 33,70,660 |
| | **DOMESTIC PAYMENTS** | | |
| | Contribution To EPF | 2,00,44,233 | 2,38,57,621 |
| | EPF Damages | 1,63,74,869 | 1,53,60,108 |
| | EPF- Interest | 84,93,788 | 74,11,146 |
| | Medical Expenses | 1,26,75,971 | 86,67,644 |
| | Pension Expenses | 1,45,24,686 | 1,22,04,413 |
| | Gratuity | 86,68,610 | 52,33,295 |
| | Salary & Allowances | 1,63,47,284 | 1,45,28,978 |
| | Staff Welfare | | |
| | Holiday Allowance | 24,48,401 | 21,15,178 |
| | Warm Cloth Allowance | 23,31,300 | 28,26,600 |
| | Staff Welfare - General | 29,72,054 | 19,89,972 |
| | **Total Employee Benefits** | **10,72,92,576** | **9,75,65,615** |
| | | | |
| 15 | **Depreciation and amortization expense** | | |
| | on tangible assets (Refer note 6) | 3,79,42,655 | 3,63,82,491 |
| | **Total Depreciation and amortization expense** | **3,79,42,655** | **3,63,82,491** |

# WE ARE HIRING

**Born again Christian**

## Administrative Officers Child Care

**Qualification** Master of social work (MSW / Postgraduate)

**Experience** minimum 2 years of experience in child welfare, counselling or community development (freshers with passion and aptitude may also apply).

**About us** we are a faith- based, non-profit organisation committed to the holistic development of children and youth, nurturing them with love, care and opportunities for a brighter future.

**How to apply** Apply on or before 15th November to **hrd@fmpb.org**

21.09.2025 அன்று சென்னையில் நடைபெற்ற நமது மிஷனெரிகளின் ஆவிக்குரிய கூடுகையில் டாக்டர் பால் தினகரன் மற்றும் அவரது மகன் சகோ. சாமுவேல் பால் தினகரன் கலந்துகொண்டு தேவ செய்தியளித்து நமது ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள்.



# பர்த்தோபாரா

# ஆலய வரலாறு



## தப்காரா பணித்தளம்,

சத்தீஸ்கர் பிராந்தியம்
தென் கிழக்கு மண்டலம்

*எழுதியவர்:*
**திருமதி. ஆக்னஸ் எட்வர்ட்**

## அறிமுகம்

சத்தீஸ்கர் மாநிலம், சுர்குஜா மாவட்டத்திலுள்ள சீதாபூர் தாலுகாவில் உள்ள தோதகான் பஞ்சாயத்தின் கீழ் பர்த்தோபாரா கிராமம் அமைந்துள்ளது. தோதகான் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட சர்பஞ்ச் (கிராமத் தலைவர்) நிர்வகிக்கும் ஒரு பெரிய கிராமம். தோதகான் மக்கள் தொகையில் பெரும்பான்மை யானவர்கள் பட்டியல் பழங்குடி (ST) இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 89.44% பேர். அதே நேரத்தில் பட்டியல் இனத்தினர் (SC) 1.70% பேர் உள்ளனர். பெரும்பாலானோர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் அல்லது விவசாயத் தொழிலாளர்களாக உள்ளனர்.

## தொடக்கம்

தப்காரா பணித்தளம் 01.03.2005 அன்று திறக்கப்பட்டது. இந்த பணித்தளத்தில் ஊழியம் செய்த முதல் மிஷனெரிகள் திரு. டென்னி சிங் டெப் மற்றும் திரு. கோகானி பிரவின் பாய். பின்னர் தப்காரா பணித்தள மிஷனெரியாக திரு. பிரவின் பாய் நியமிக்கப்பட்டார். அந்நாட்களில் பர்த்தோபாராவில் சிலர் பெயரளவில் கிறிஸ்துவைப் பின்பற்றி வந்தனர். மேலும் மது அருந்துதல் மற்றும் சூனியக்காரர்கள் மீது நம்பிக்கை, விலங்குகளை பலியிடுதல் உள்ளிட்ட பல மூடப் பழக்கங்கள் பரவலாக இருந்தன.

2006 ஆம் ஆண்டில், கெர்ஜு கிராமத்தைச் சேர்ந்த சுதேச ஊழியர் களான திரு. சாமுவேல் கல்கோ மற்றும் திரு. ரஞ்சித் என்பவர்கள் பர்த்தோபாராவில் தங்கி ஊழியம் செய்ய அனுப்பப்பட்டனர். அவர்கள் விறகு வாங்க கிராமத்திற்குச் சென்றபோது அங்கு ஒரு மந்திரவாதியைச் சந்தித்தனர். மந்திரவாதி அவர்களை தேவதாஸ் லகாடாவின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு அவரது சகோதரர் நிக்கோலஸ் கடுமையான மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் பேசவோ அல்லது தன்னுடைய அன்றாடக வேலைகளை செய்துகொள்ளவோ

முடியாமல் இருந்தார். பல மந்திரங்கள் செய்தும் பலன் கிடைக்கவில்லை. சுதேச ஊழியர் நிக்கோலஸுக்காக ஜெபித்து, அவரது குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை முழுமனதுடன் விசுவாசிக்க ஊக்குவித்தார். ஊழியர்கள் வாரத்திற்கு இரண்டு முறை அவரது வீட்டிற்குச் சென்று வாராந்திர உபவாச ஜெபங்களைத் தொடங்கினர். இரண்டு மாதங்களுக்குப் பின் நிக்கோலஸ் அற்புதமாகப் பேசத் தொடங்கி படிப் படியாக குணமடைந்தார். இதன் விளைவாக தேவதாஸ் லகாடாவின் குடும்பத்தினர் மேலும் 10 பேருடன் சேர்ந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்.


*தேவதாஸ் லகாடா*

திரு. சாமுவேல் கல்கோ பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டார். புதிய சுதேச ஊழியர் நியமிக்க தாமதம் ஏற்பட்ட போதிலும் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாக இருந்தனர். தேவதாஸ் லகாடாவின் பிள்ளைகளும், நிக்கோலஸும் உபவாச ஜெபங் களையும், சத்சங் கூடுகைகளை நடத்தி வந்தனர். பின்னர் சுதேச ஊழியர் ரஃபேல் இப்பகுதியில் ஊழியத்தைத் தொடர்ந்தார்.

2010 ஜூன் மாதம் பிரவீன்பாய் மற்றும் அவரது குடும்பத்தினர் கன்சபெலில் இருந்து உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள பயணம் செய்தபோது ஒரு பயங்கரமான சாலை விபத்தில் கோகானி பிரவின்பாய், அவரது மனைவி பாருபேன் மற்றும் அவர்களின் மகன் பிரின்ஸ் குமார் ஆகியோர் உயிரிழந்தனர். அவர்களின் மகள் பிரஷன்சா குமாரி மட்டுமே உயிர் பிழைத்தார். தப்காரா மண்ணில் அவர்களின் உடல் கோதுமை மணிகளாக விதைக்கப்பட்டன.

## ஆலய வளர்ச்சி

இயேசு கிறிஸ்துவின் அற்புத அடை யாளங்களின் மூலம் ஆலயம் வளர்ச்சி பெற்றது.

- நிர்மல் லகடா (தற்போதைய சபை மூப்பர்) கடுமையான இடுப்பு வலியிலிருந்து சுகம்பெற்று பின் விசுவாசத்திற்குள் வந்தார்.


*அந்தோனியா லகடா*

- நிக்கோலஸின் மனைவி அந்தோனியா லகடா, காச நோயினால் பாதிக்கப்பட்டிருந்த சோய்காடி கிராமத்தைச் சேர்ந்த தனது மாமா இக்னேஷியஸ் காக்காவுடன் தனது சாட்சியை பகிர்ந்து கொண்டு அவருக்காக ஜெபித்தபோது அவர் பூரண சுகம்பெற்று இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்.
- தேவதாஸ் லகாடாவின் வீட்டில் தொடங்கிய ஆராதனை ஏழு ஆண்டுகள் தொடர்ந்தது. அதன்பின் ஆலயம் கட்டி முடிக்கும் வரை நிர்மல் லகாடாவின் வீட்டிற்கு மாற்றப்பட்டது.

## சபை மற்றும் சமூகம்

பர்த்தோபாரா சபையில் பர்த்தோபாரா, சோய்காடி, உதாமா மற்றும் சட்டா கிராமங்களைச் சேர்ந்த ஓராவன், நாக்வான்சி மற்றும் லோஹர் சமூகங்களைச் சேர்ந்த விசுவாசிகள் தேவனை ஆராதித்து வருகின்றனர்.



சுக்தேவ் காக்கா

சுக்தேவ் காக்கா என்பவர் ஆலயம் கட்ட தனது நிலத்தை நன்கொடையாக வழங்கினார். துவக்கத்தில் இவர் பெயரளவில் கிறிஸ்தவராகவும், குடிக்கு அடிமைப்பட்டும் இருந்தார். அவரது மகள் இனம்புரியாத வியாதியினாலும், பிசாசின் பிடியினாலும் பாதிக்கப்பட்டு, பல சிகிச்சைகள், மந்திரங்கள் செய்தும் பலனின்றி ஒன்பது வருடங்களுக்குப்பின் மரித்துப்போனாள். அதன்பின் அவரது மகன் இக்னேஷிஸும் அவ்வாறே பாதிக்கப்பட்டு ஒரு வருடமாக படுத்தபடுக்கையானார்.

சுக்தேவின் சகோதரர் ஒருநாள் இக்னேஷியஸுவுடன் இயேசு கிறிஸ்துவின் வல்லமையைக் குறித்து பகிர்ந்துகொண்டார். அதைக்கேட்டதும் உடனே அவர் சற்று நலமடைந்தவராக எழுந்து உட்கார்ந்தார். லக்டா வீட்டில் நடக்கும் ஆராதனைக்கு இவரது குடும்பம் அழைத்துச் செல்லப் பட்டனர். அங்கு ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் ஒரே மாதத்திற்குள் இக்னேஷியஸ் காச நோயிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் பூரண விடுதலையடைந்தார். எனவே சுக்தேவ் மனப்பூர்வமாக தனது நிலத்தை ஆலயம் கட்ட நன்கொடையாகத் தந்தார்.

தேவனை அறியும் முன் பல மூட நம்பிக்கைகளை பின்பற்றி, அவரது வயலில் விதைவிதைத்தபோது மூன்று கூடைகள் மட்டுமே காய்கறிகள் கிடைத்தது. ஆனால் ஆண்டவரை ஏற்றுக்கொண்டப்பின் ஜெபித்து விதைவிதைத்தபோது 50, 80, 118 கூடைகள் என காய்கறிகளைப் பெற்றுக்கொள்ளும்படி தேவன் ஆசீர்வதித்தார்.

## ஆலயக்கட்டுமானப் பணிகள்

23.09.2013 அன்று 30×20 அடி அளவுள்ள ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் கூடிய ஒரு ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டுமானத்தின்போது எந்த எதிர்ப்பும், இடையூறுமின்றி முழு சபையினரும் கட்டுமானப் பணியில் உற்சாகமாக ஈடுபட்டனர். அவர்கள் 50% கூலியை மட்டும் பெற்றுக்கொண்டனர். ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 18.05.2014 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. பணித்தள மிஷனெரி திரு. பத்வி சோமாலியா குடும்பத்தினர் மற்றும் பிராந்திய செயலாளர் திரு. ஆரோன் சிங் ஆகியோர் பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டனர்.

## பர்த்தோபாரா சபையினரின் அற்புதங்கள் மற்றும் சாட்சிகள்

- பர்த்தோபாராவைச் சேர்ந்த நன்கு அறியப்பட்ட மந்திரவாதியான சுதினி,

அதிக உதிரப்போக்கினால் அவதிபட்டு வந்தார். விசுவாசிகளின் மூலம் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டு, சுதேச ஊழியர் நோர்சாய் லக்டாவிடம் ஜெபித்தார். தேவன் அற்புத சுகமருளினார்.

- சோய்காடி கிராமத்தைச் சேர்ந்த அமர்சாய் நாக்வான்சி குடிப்பழக்கத் திற்கு அடிமைப்பட்டவர். அவர் ஒரு வருடம் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார். சுவிசேஷகர் நோர்சாய் லக்டா மற்றும் விசுவாசிகள் அவருக்காக ஜெபித்தபோது அவர் முழுமையாக குண மடைந்தார். இந்த அற்புதமானது நாக்வான்சி சமூகத்தைச் சேர்ந்த அநேகர் கிறிஸ்துவை விசுவாசிக்க வழிவகுத்தது.

- பிற மத நம்பிக்கையை தீவிரமாக பின்பற்றிவந்த தோக்னி பாய், மூன்று ஆண்டுகளாக மலத்துடன் இரத்தபோக்கு ஏற்பட்டு அவதிப்பட்டு வந்தார். மந்திரவாதிகள் மற்றும் மருத்துவர்களுக்காக ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக செலவழித்தும் சுகம் கிடைக்க வில்லை. சுதேச ஊழியர் நோர்சாய் லக்டா அவருக்காக ஜெபித்தார். ஒரு மாதத்திற்குள் அவர் பூரணமாக சுகமடைந்தார்.

- லோஹர் இனத்தைச் சேர்ந்த குட்லிபாய் ஒரு வருடமாக கடுமையான இருமலினால் பாதிக்கப்பட்டிருந்தார். பிசாசின் பிடியினால் அலைகழிக்கப்பட்டு அவரது தலைமுடி பின்னப்பட்டு வளர்ந்து வந்தது. மேலும் வெறும் கையால் நெருப்பைத் தூக்குவது போன்ற செயல்களை செய்துவந்தாள். ஒருநாள் தேவன் அவளுக்கு தரிசனமானதால் ஆலய ஆராதனையில் கலந்துகொண்டார். அங்கு சுதேச ஊழியர் அவளுக்காக ஜெபித்தப்பின் அவளது தலைமுடி வெட்டப்பட்டது. உடனே அசுத்தாவி யின் பிடியிலிருந்தும், வியாதி யிலிருந்தும் விடுதலைப் பெற்றாள்.

## ஞாயிறு ஆராதனை

ஞாயிறுக் கிழமை ஆராதனையில் 35 முதல் 45 விசுவாசிகள் கலந்து கொள்கின்றார்கள். சபை மூப்பர் அல்லது சுதேச ஊழியர்கள் ஆராதனையை நடத்தி வருகிறார்கள். மொத்த விசுவாசிகள் 27 குடும்பங்கள்.

## ஜெபிக்க

- இங்கு காணப்படும் தண்ணீர் பற்றாக்குறை நிரந்தரமாக சரிசெய்யப்பட...

- பின்வாங்கிய குடும்பங்கள் மற்றும் குடிக்கு அடிமைப்பட்டோர் மனந் திரும்ப...

- சிறிய ஜெபக்குழுக்கள் மற்றும் பொதுவான கூட்டங்களில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட...

- கிறிஸ்தவர்களின் சாட்சியினிமித்தம் இன்னும் அநேக ஆத்துமாக்கள் தேவனுடைய மந்தையில் சேர்க்கப்பட ஜெபிப்போம்.

# 1 நவம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கய்தியன்கின் வெய்ஃபெய்
திரு. தாங்லால் ஸௌ
திருமதி. மேரி முர்மு தினேஷ்

## ஜம்மு

### நௌஷேரா:

**ஷேக் சுபானி & எமி பாக்கியா**

**துதிக்க:** இரண்டு புதிய குடும்பங்கள் ஆலய ஆராதனையில் உற்சாகத்துடன் கலந்துகொள்கிறார்கள். குடியின் அடிமைத்தனத்திலிருந்து சுமித் விடுதலை பெற்று கிரமமாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்கிறார். காட்டிலிருந்து கால் நடைகளுடன் வீடு திரும்பும்போது மயங்கி விழுந்து சுயநினைவை இழந்த விசுவாசி மம்தா தேவி சிறிது நேரத்தில் எவ்வித பாதிப்புமின்றி சுயநினைவு பெற்று வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். நெஞ்சு வலியினால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுந்தரி அனைவரின் ஜெபத்தின் மூலம் விரைவில் சுகம் பெற்று வீடு திரும்ப கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெற்று வரும் அஞ்சலிக்கு தேவன் இரக்கம் பாராட்ட. உடல் நடுக்கத்திலிருந்து கௌரவ் குமார் மற்றும் தொடர் இருமலிலிருந்து நரேஷ் சுகம் பெற; தீவிர விசுவாசியாக இருந்த ரமேஷ் குடிப்பழக்கத்தினால் விசுவாசத்தை விட்டு பின்வாங்கியுள்ளார். அவர் குடியிலிருந்து விடுபட்டு மீண்டும் கிறிஸ்துவண்டை திரும்ப; ராம்தேவின் மறைவினால் துன்புறும் அவரது மனைவிக்கு தேவன் ஆறுதலளிக்கவும், பிள்ளைகள் தங்கள் தாயாரை நன்கு கவனித்துக்கொள்ளவும்; கமலுக்கு ராணுவத்தில் வேலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

### ராம்கார்:

**ஜாண் எஸுங் & லிபெனி ஜமி**

**துதிக்க:** குல்வன்டா, கியா, கெய்தா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். பல்லா கிராமத்தில் சத்சங் கூடுகை நடத்தவும், பராரி மோக்லா கிராமத்தில் பின்தொடர் பணி செய்யவும் தேவன் கிருபை செய்தார். நிலச்சரிவினால் உடைபட்ட சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகிறதால் தொடர்ந்து ஊழியம் செய்ய ஏதுவாக உள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியில் சிக்கியுள்ள மக்கள் ஜீவனுள்ள தேவனின் வல்லமையை உணர; பில்லி சூனிய கட்டுகளிலிருந்து மோகன் லாலுக்கும், மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அவரது மகளுக்கும் தேவன் விடுதலை அருள; ராம்காரில் புதிய ஆராதனைக்குழுத் துவங்கவும், அநேகர் வாஞ்சையோடு அதில் கலந்துகொள்ளவும்; மிஷனெரியின் பிள்ளைகளை புதிய பள்ளியில் சேர்க்கவும் தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

# 2 நவம்பர்
ஞாயிறு

## ஹிமாச்சலப் பிரதேசம்

### கர்சோக்:

**பவன் குமார் & பிரபாஷினி தேவி**

**துதிக்க:** விசுவாசி சஞ்சயின் நான்கு வயது மகனுக்கு திடீரென இருதயப் பிரச்சனை ஏற்பட்டதால் மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய அறிவுறுத்தினர். விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் மருத்துவர்கள் ஆச்சரியப்படும்விதமாக சஞ்சயின் மகனுக்கு தேவன் அற்புத சுகமருளினார். ரீயாவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். சந்தீப் குமார் ஊழியத்தில் உற்சாகத்துடன் உதவி செய்து வருகிறார். வசந்த்பூர் பணித்தளத்தில் சிறுவர்கள் விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். மிஷனெரியின் மகள் ஏஞ்சல் நன்கு படிப்பதற்கு தேவன் தந்துவரும் ஞானத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி பிரீத்திக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; பசந்த்பூர் கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; விசுவாசிகளையும், மிஷனெரிகளையும் துன்புறுத்த வகைதேடும் எதிர்ப்பாளர்களின் சூழ்ச்சிகளுக்கு நமது மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகளை தேவன் பாதுகாக்க; புதிய விசுவாசிகள் தேவபக்தியில் வளரவும், இரட்சிப்பின் அனுபவத்தை பூரணமாய் பெற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

### தானேதார்: ஜெபர்சன் &காயத்ரி

**துதிக்க:** கடுமையான மழை காலங்களில் தேவன் நமது ஊழியர்களையும் மற்றும் விசுவாசிகளையும் பாதுகாத்தார். பழுதடைந்த சாலைகளின் வழியே எவ்வித பாதிப்புமின்றி விசுவாசிகள் ஆலயத்திற்கு வந்துபோக தேவன் உதவி செய்து வருகிறார். ஆராதனையில் கலந்துகொள்ளும் ஷேர்சிங் தன் விசுவாசத்தை அறிக்கை செய்ய வாஞ்சை காட்டுகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஷீத்தல் & ஆதித்யாவின் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற; தவறான உபதேசங்களுக்கு நமது சபை விசுவாசிகளை தேவன் விலக்கிக்காக்க; விசுவாசத்திலிருந்து பின்மாற்றமடைந்துள்ள பிரதாப் மனந்திரும்ப; டயலிசிஸ் செய்துவரும் ஸ்வரூப்; மூளையில் தொற்று ஏற்பட்டுள்ள ஆறுமாத குழந்தை விவித்; அதிக சுகவீனமாயிருக்கும் சஞ்சயின் தந்தை; கை எலும்பு முறிவினால் வேதனைப்படும் கிமி ஆகியோரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## செலவின்றி மருத்துவம்

*ஹரியானா, பத்தேபாத் பணித்தளத்திலுள்ள ஹிஸ்ராவன் கலான் கிராமத்தில் வசித்துவரும் நமது விசுவாசி சந்தீப்பின் நான்கு வயது மகள் 5 ரூபாய் நாணயத்தை தவறுதலாக விழுங்கிவிட்டாள். அது அவளது தொண்டையில் அடைத்துகொண்டது. அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது மருத்துவர் 20,000/- ரூபாய் செலவாகும் என்று கூறவே, அவர் 25 கி.மீ. தூரத்திலுள்ள அரசு மருத்துவமனைக்கு தன் மகளை கொண்டுச்சென்றார். அங்கு எவ்வித செலவுமின்றி 5 ரூபாய் நாணயத்தை மருத்துவர் தொண்டையிலிருந்து வெளியே எடுக்க தேவன் உதவி செய்தார். பிள்ளையின் ஜீவனை பாதுகாத்த தேவனைத் துதித்து தேவனுக்கு சாட்சிப் பகிர்ந்து வருகிறார் சந்தீப். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!*

## 3 நவம்பர்
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. மார்கரெட் ஜோதிமணி ஆசீர்

# பஞ்சாப்

### புத்லாடா:
### பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

**துதிக்க:** மந்திர்பேடா, தல்வாடி, மூனக் ஆகிய கிராமங்களில் சத்சங் கூடுகைகள் நடத்தவும் மேலும் பெண்களுக்கான பயிற்சியை மூன்று இடங்களில் நடத்தவும் கர்த்தர் கிருபை செய்தார். சூலார், கனக்வால், ராம்கார் பட்டல் ஆகிய புதிய கிராமங்களில் மக்கள் வாஞ்சையோடு சுவிசேஷம் கேட்டனர். கடுமையான வயிற்று வலியினால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ராஜு மஸியை தேவன் குணப்படுத்தினார். அமன்தீப் சிங்கிற்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். தன்னார்வ ஊழியர் ஜஷ்பால் சிங்கின் திருமணம் சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தல்வாடி, புத்லாடா, பரேட்டா ஆகிய கிராமங்களில் நடைபெறவுள்ள வாலிபர் மற்றும் பெண்களுக்கான பயிற்சி தடையின்றி நடைபெற; அநேக வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபத்துடன் காத்திருக்கும் விக்ரம் ஜீத், விக்கி சிங், ஷீத்தல், காஜல் ஆகியோர் குடும்பத்திற்கு தேவன் இரக்கம் பாராட்ட; விசுவாசிகளின் பொருளாதாரத்தை தேவன் ஆசீர்வதிக்க; ஊழியத்தில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வரும் ராம்சிங், சுதேஷ்ராணி, ஜாஸ்பல் சிங் ஆகியோரின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

### மான்சா:
### தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** மக்கா, ராய்பூர், புர்ஜ் பலாய்கே, அலெக் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். புதிய விசுவாசியான ராய்சிங்கின் ஜெபத் திற்குப் பதிலளித்து, புதிய கடை ஒன்றை துவங்க தேவன் உதவி செய்தார். ஹர்ஷ்தீப் கௌரின் வறுமை நீங்க தேவன் நல்லதொரு வேலையை தந்து ஆசீர்வதித்துள்ளார். வீட்டைவிட்டு சென்ற சுர்ஜித்சிங்கின் இளைய மகன் தேவனால் தொடப்பட்டு மனந்திரும்பி வீட்டிற்கு திரும்பிவர கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பீரா சிங், பால்தீப் சிங், குல்தீப் சிங், கிரி சிங், பல்லா சிங் ஆகியோரின் வீடுகள் கன மழையினிமித்தம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனை சீரமைக்க தேவையான பொருளாதார உதவிகளை தேவன் தந்தருள; கிறிஸ்தவ வாலிபப் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; குடி, புகையிலை மற்றும் போதைப் பொருள்களுக்கு அடிமைப்பட்டுள்ளவர்களுக்கு தேவன் விடுதலை அருள; ஊழியத்திற்கு அர்ப்பணிப்புள்ள அநேக வாலிபர்களை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

# 4 நவம்பர்
## செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. முத்தா ரத்னகுமாரி சதீஷ்

### நிஹால் சிங் வாலா & பகாபூரானா:
**சிவசங்கரன் & மெர்சி எலிசபெத்**

**துதிக்க:** பயிர்களுக்கு அடிக்கும் பூச்சிக்கொல்லி மருந்தினால் பாதிக்கப்பட்ட கபீர் சிங்கின் கண்கள் ஜெபத்தினால் குணமானது. படுக்கை அறையிலிருந்த விஷப்பாம்பிடமிருந்து ஜோதி மற்றும் அவரது 10 வயது மகன் பிராபா ஜோத்தை தேவன் பாதுகாத்தார். கை வீக்கத்திலிருந்தும், கடுமையான வயிற்று வலியிலிருந்தும் அஞ்சலிக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரோஷ்னி, பேபி, மார்கரேட், யெஷுவா ஆகியோருக்கு தேவன் புத்திர சந்தானம் அருள; அமன் கீத்துக்கு தேவன் ஏற்ற வேலையைத் தந்தருள; கிறிஸ்தவ வாலிபர்களுக்கு பக்தியுள்ள வாழ்க்கைத் துணை அமைந்திட; போதையின் அடிமைத்தனத்திலிருந்து மங்கள், குர்பிரீத், ரெஷேம், பியான்ட் சிங் ஆகியோரை தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

### அம்ரித்சர்:
**சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா**

**துதிக்க:** நான்கு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், ஐந்து பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்யவும் தேவன் கிருபை பாராட்டினார். சுச்சா சிங் மற்றும் சுமன் கௌரை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். பல்லா மற்றும் பால்கலான் கிராமங்களில் புதிய ஆராதனைக்குழுத் துவங்க தேவன் உதவி செய்தார். புதிய தொடர்பாளரான குல்தீப் கௌர் ஜெபத்தின் மூலம் நல்ல வேலையைப் பெற்றுக்கொண்டார். விசுவாசி ஆர்த்தி கௌருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தந்தருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லவ்சிங், மின்டர் குர்பிரீத், விஜயா, அமர்ஜித், குல்தீப் கௌர் ஆகிய புதிய தொடர்பாளர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; விபத்தினால் முகம் மற்றும் கை, கால்களில் ஏற்பட்ட காயங்களினால் வேதனைப்படும் லுக்விந்தர் கௌரை தேவன் குணப்படுத்த; குடி மற்றும் போதையின் அடிமைத்தனத்திலிருந்து மணிசிங், மஞ்சித் சிங், சுச்சா சிங் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; பித்தப்பைக் கல் மற்றும் கட்டியினால் அவதியுறும் சிம்ரன் ஜீத் கௌரை தேவன் குணப்படுத்த; புதிய ஆராதனைக் குழுக்களில் அநேகர் வாஞ்சையோடு கூடி தேவனை ஆராதிக்க; இப்பணித்தளத்தின் ஊழியம் விரிவாக்கப்பட அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

**5** **நவம்பர்**

உபவாச ஜெபநாள் — புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. ஜெயஶ்ரீ

# உத்தராகண்ட்

## பாஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** கோருகாவ் கிராமத்தில் தடையின்றி சுவிசேஷம் அறிவிக்கவும், பண்ணகாடா கிராமத்தில் ஆத்தும ஆதாயப் பயிற்சியை சிறப்பாக நடத்தவும் தேவன் உதவி செய்தார். கிருஷ்ணா மற்றும் ஜோதி குடும்பத்தினரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். உடல்நலக் குறைவினால் மனநலம் பாதிக்கப்பட்டு குடும்பத்தில் சமாதானமின்றி தவித்து வந்த சுக்விந்தர் கௌர் ஜெபத்தின் மூலம் சுகமும், சமாதானமும் பெற்றார். ஹரிபுரா கிராமத்தைச் சேர்ந்த பரம்ஜீத் கௌர் விசுவாசிகள் மற்றும் ஊழியரின் இடைவிடா ஜெபத்தின் மூலம் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றார். அநேக நாட்களாக வேலைக்காக ஜெபத்துடன் முயற்சி செய்து வந்த லலித் குமார் மற்றும் சோனுவுக்கு தேவன் நல்ல வேலையை தந்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்ப்பப்பை புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள அன்ஷிகாவுக்கு (26 வயது) தேவன் பூரண சுகமருள; குடிக்கு அடிமைப்பட்டுள்ள நமது விசுவாசி தர்மவதியின் மூன்று மகன்களும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; ராஜேந்திரன் குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு உதவியாக இருக்கும் காளை மாட்டின் கழுத்தில் ஏற்பட்டுள்ள பெரிய கட்டியை தேவன் சுகப்படுத்த; கால் அறுவை சிகிச்சைக்குப்பின் தொடர் வலியினால் படுத்தபடுக்கையாயிருக்கும் சந்தா தேவிக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## தினேஷ்பூர்: சிவகுமார் & சுசிலா மராக்

**துதிக்க:** விசுவாசி தரம்பாலின் இரத்தத்தில் தொற்று ஏற்பட்டு உடல் அரிப்பினால் கஷ்டப்பட்டு வந்தார். அவரது மனைவி அவருக்கு எண்ணெய் பூசி விசுவாசத்துடன் ஜெபிக்கவே தேவன் பூரண சுகமருளினார். சாந்தினி மற்றும் ராஜ்குமாரியின் குடும்பங்கள் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். மூல வியாதியிலிருந்து விசுவாசி கர்னேல் சிங்கிற்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் கேட்ட வாலிபர்களான கபில், ஜோகேஷ், ஆயூஷ், அன்னு, பிரியா, லக்ஷ்மி, பிரியங்கா ஆகியோர் இரட்சிக்கப்பட; கர்ப்பப்பை கட்டியினால் அவதியுறும் 18 வயது பிரியங்காவுக்கு தேவன் சுகமருள; சிறுநீரகக் கல்லினால் கஷ்டப்படும் 10 வயது பிரபு ஜோத்தை தேவன் குணப்படுத்த; அசுத்தாவியின் பிடியிலிருந்து புதிய தொடர்பாளரான சூரஜ், கல்பனா மற்றும் கௌசல்யாவுக்கு தேவன் விடுதலை அருள ஜெபிப்போம்.

# 6 நவம்பர்
வியாழன்

### மல்தன்சோர்:
**ஷிஷு பால் & அனிதா**

**துதிக்க:** தாரி கிராமத்தில் ஆராதனை நடந்துகொண்டிருந்தபோது எதிர்ப்பாளர்கள் குழுவாக வந்து ஆராதனையை தடைசெய்து, காணிக்கை பை, மொபைல் போன் மற்றும் வேதாகமங்களை எடுத்துச் சென்றனர். விசுவாசியின் மகளையும் அடித்துவிட்டனர். பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு எவ்வித பிரச்சனையுமின்றி சுதேச ஊழியர் வீடு திரும்ப கர்த்தர் உதவி செய்தார். பிசாசின் பிடியிலிருந்து மாயூர் கௌருக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நேஹா, ஸ்வாதி, சோனியா, நீத்து ஆகியோருக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; மிஷனெரியின் மனைவிக்கு கல்லீரல் தொற்றிலிருந்து தேவன் சுகமருள; விசுவாசிகள் மற்றும் ஊழியர்களை எதிர்ப்பாளர்களின் சூழ்ச்சியிலிருந்து தேவன் பாதுகாக்கவும், இவர்கள் திடமனமுள்ளவர்களாய் இருக்கவும் ஜெபிப்போம்.

## ஹரியானா

### ஃபத்தேஹ்பாத்:
**டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்**

**துதிக்க:** அநேக வருடங்களாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்த தேஜ்பாலுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளியதால் கிராமத்தினர் தேவனுடைய வல்லமையை அறிந்துகொண்டனர். ஏழு பேர் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். சாஸ்த்ரி நகரில் சிறிய ஆராதனைக்குழு ஒன்றை துவங்க தேவன் கிருபை செய்தார். இருதய நோயிலிருந்து சுபாஷுக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்ட ஹனுமன்சிங் தேவனை விசுவாசிக்க; அசோக் நகர் மற்றும் ஹிஜ்ராவன் கலான் பகுதியில் நடைபெற்ற கூட்டங்களின் மூலம் தேவன் பெருத்த அறுவடையைக் கட்டளையிட; கல்லீரல் கட்டியினால் அவதியுறும் 22 வயது ராஜேஷை தேவன் குணப்படுத்த; பிசாசின் பிடியினால் அவதிப்படும் பிரமோத், ஷிவா, சுனிதா ஆகியோரை தேவன் விடுவிக்க; மூன்று வருடங்களுக்கு முன் காணாமல்போன சந்தோஷ் பத்திரமாய் திரும்பி வர; பட்டியா காலனி, கசும்பி, ஜான்சால், ஹிஜ்ராவன் கலான் ஆகிய கிராமங்களில் விரைவில் ஆலயம் கட்ட தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

## 7 நவம்பர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாலசுப்ரமணியன் (ஏ) சைமன் பீட்டர்

### தோஷம்:
**அஜய் பர்டே & ஷைதுல்**

**துதிக்க:** நடைபெற்ற வாலிபர் முகாம் மற்றும் முழுஇரவு ஜெபத்தில் அநேகர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். சுமித்ரா தேவியின் மகன் ஓஷிக் ஜெபத்தின் மூலம் கண் வலியிலிருந்து சுகம்பெற்றான். கடுமையான தலைவலியினால் அவதிப்பட்ட பாவனுக்கு தேவன் சுகமருளினார். குடும்பப் பிரச்சனையினிமித்தம் பிரிந்துசென்ற சன்னியின் மனைவி, ஜெபத்தினால் மீண்டும் குடும்பத்துடன் இணைந்து சமாதானமாக வாழ கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுமித்ராவின் குடும்பத்தில் தேவன் பூரண சமாதானமருள; அசுத்தாவியின் பிடியிலிருந்து தொனியாவை தேவன் விடுவிக்க; விஜய் மற்றும் முகேஷ் குடியின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நன்னோ என்பவருக்கு தேவன் பூரண சுகமருள; பிவானி மற்றும் ரேவாரி கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைத் தந்தருள ஜெபிப்போம்.

### பர்வாலா:
**மிண்டு குட்டும் & சுப்ராபாக்**

**துதிக்க:** வாலிபர் முகாமில் அநேகர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். காய்ச்சல் மற்றும் இரத்தத் தொற்றினால் பாதிக்கப்பட்ட விசுவாசியின் மகள் அனுவிற்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். விபத்தினால் காயமேற்பட்டு, மனநிலை பாதிக்கப்பட்ட மன்தீப்பிற்காக சபையார் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அவருக்கு அற்புத சுகமருளினார். கடுமையான வயிற்று வலியினால் கஷ்டப்பட்டு வந்த ரோஷன் லால்க்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவாச பிரச்சனை மற்றும் உடல் வலியினால் பாதிக்கப்பட்டுள்ள மூர்த்தி, அதிக கால் வலி மற்றும் பெலவீனத்தினால் கஷ்டப்படும் அங்ரஜ், கால் நரம்பு பிரச்சனையினால் கால் வீங்கி வேதனை அனுபவித்து வரும் நரேஷ் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; அசுத்தாவியின் பிடியினால் அவதியுறும் ரஞ்சித்சிங் என்ற புதிய தொடர்பாளருக்கு தேவன் விடுதலை அருள; பருத்தி எடுக்கும் வேலைக்காக ராஜஸ்தான் மற்றும் குஜராத்திற்கு சென்றுள்ள விசுவாசிகளை தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

# 8 நவம்பர்
சனி

### ஜீவன் நகர்:
**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** கட்டிட பொறியாளரான விசுவாசி சுதீர் குமார் சந்தித்த சாலை விபத்தில் அதிக பாதிப்பின்றி அற்புதமாய் தேவன் பாதுகாத்தார். திடீரென அதிக எடைக் குறைவினால் பாதிக்கப்பட்ட மிஷனெரியின் மனைவிக்கு ஏற்ற வேளையில் மருத்துவ உதவி கிடைக்க தேவன் கிருபை செய்தார். சிர்ஷா மற்றும் தபாவாலி ஆராதனைக் குழுக்களில் நமது விசுவாசிகள் நாளுக்கு நாள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகின்றனர். குடும்ப சூழ்நிலையினால் ஒரு வருடமாக விசுவாசத்தில் பின்தங்கியிருந்த பிட்டுசிங் குடும்பம் மனந்திரும்பி மீண்டும் ஆராதனையில் கிரமமாக கலந்துகொள்கின்றனர். சுவிசேஷத்தின் நிமித்தம் சிறையிலிருந்த மிஷனெரி தீபிகாவின் சகோதரி மீனா குமாரி, அவரது கணவர் மற்றும் மகன் ஆகியோருக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாய் புற்றுநோயிலிருந்து ஜாஷாவுக்கு தேவன் அற்புத சுகமருள; ஜீவன் நகர் பணித்தளத்தில் ஊழியம் செய்ய அர்ப்பணிப்புள்ள ஊழியரை தேவன் தந்தருள; ஊழியத்திற்கு எதிர்ப்புகள் பெருகிவரும் இந்நாட்களில் ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகள் தடைபடாது செயல்படுத்தப்பட தேவன் உதவி செய்ய; மிஷனெரி தீபிகாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள; நடைபெறவுள்ள இரவு கூட்டங்கள், படக்காட்சி ஊழியம், சத்சங் கூடுகைகள் மூலம் அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

## உத்தரப்பிரதேசம்

### பொக்ராயான்:
**சாந்தகுமார் & ஜின்சி**

**துதிக்க:** சபை மூப்பர் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்களுக்காக நடத்தப்பட்ட வேதபாட பயிற்சியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். 20 பேர் தங்கள் கிராமங்களில் வேதபாட குழுவை நடத்துவதற்கு தங்களை அர்ப்பணித்தனர். கிராம பஞ்சாயத்தினரின் தடைகளுக்கு மத்தியிலும் வாலிபப் பெண்களுக்காக நடத்தப்பட்ட சிறப்பு கூடுகையில் அநேகர் பங்குப்பெற்றனர். பெண்கள் பயிற்சியில் சுமார் 95 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு நாள் வாலிபர் பயிற்சி, சட்ட ஆலோசனை பயிற்சி போன்றவற்றில் அநேகர் கலந்துகொண்டு பயன்பெற; கிராமத் தலைவர்களான பல்வன்சிங், வீருலால், முகுந்தா லால், ஆனந்த்ராம், அஜாப்சிங் ஆகியோர் தேவனை விசுவாசித்தாலும், அதை அறிக்கையிட தயங்குகின்றனர். தேவன் அவர்களின் பயத்தை நீக்கி விடுதலையோடு இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சராக ஏற்றுகொண்டு அறிக்கையிட; பகல் நேர பராமரிப்பு மையத்தின் கட்டிடம் புதுப்பிப்பதற்கு உள்ளூர் தலைவர்களின் அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

## 9 நவம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. செல்லத்துரை J.
திரு. ஜெரால்டு சேவியர்

### பஸ்தி: ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி

**துதிக்க:** பிசாசின் பிடியிலிருந்து நந்தினி மற்றும் ராகினி ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றுள்ளனர். TWR மூலம் நடத்தப்பட்ட வேதாகம தேர்வில் 20 விசுவாசிகள் உற்சாகத்துடன் பங்குபெற்றனர். எதிர்ப்புகள் மத்தியிலும் விசுவாசிகள் சிறு ஜெபக்குழுக்களில் இணைந்து ஜெபித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சங்கீதாவுக்கு தேவன் சுகப் பிரசவம் அருள; அதிக உதிரப்போக்கி லிருந்து மாதுரி அம்ரேஷுக்கு தேவன் சுகமருள; அசுத்தாவியின் பிடியிலிருந்து அனிதாவுக்கு தேவன் விடுதலை அருள; கிறிஸ்தவ ஊழியங்களை கண்காணிக்க 11 பேர் கொண்ட குழுவை உருவாக்கியுள்ள உள்ளூர் தலைவர்களின் சூழ்ச்சிகளை தேவன் முறியடிக்க ஜெபிப்போம்.

### கோண்டா சிறுவர் விடுதி:
### ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா சௌத்ரி

**துதிக்க:** நட் சமூகத்தைச் சேர்ந்த அநேகர் இந்நாட்களில் தேவனை விசுவாசித்து அவரின் மந்தையில் இணைந்து வருகின்றனர். நமது விடுதிப் பிள்ளைகளை கடுமையான வியாதி களுக்கு விலக்கி தேவன் பாதுகாத்து வருகிறார். சுவிசேஷத்திற்கு எதிர்ப்புகள் பெருகிவரும் இந்நாட்களில் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாயிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நட் சமுதாய மக்கள் ஆவிக் குரிய வாழ்வில் வளரவும், எதிர்ப்புகளை தைரியத்துடன் எதிர்கொள்ளவும் தேவன் அவர்களுக்கு உதவி செய்ய; கோண்டா பகுதியிலுள்ள விசுவாசிகள் இங்கு நடைபெறும் ஊழியங்களை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கு வதற்கு முன்வர; சிறுநீரகம் மற்றும் நரம்பு பிரச்சனைக்கு சிகிச்சைப் பெற்று வரும் மிஷனெரியின் மனைவி தும்பாவுக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர்

**துதிக்க:** வாலிபர் கூடுகையில் 21 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். எவ்வித தடையுமின்றி ஆன்லைன் மூலம் வேதாகம வகுப்புகள் நடத்திட தேவன் கிருபை செய்தார். நடைபெற்ற வேதாகமத் தேர்வில் 20 பேர் உற்சாகத்தோடு பங்குப் பெற்றனர். வாய்புற்றுநோயிலிருந்து ஷைலேந்திர குமார் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். இரண்டு வருடங்களாக அசுத்தாவியின் பிடியில் சிக்கித் தவித்த தேவ்காந்த்க்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேக்னா மற்றும் பைசோலி ஆலயங்கள் விரைவில் திறக்கப்பட்டு ஆராதனை நடைபெற; அசுத்தாவியின் பிடியிலிருந்து சவிராமின் மனைவி பிரியாவுக்கும், பால்சிங் மற்றும் அவரது மகள் ஜான்விக்கும் தேவன் விடுதலை அருள; மம்தாவுக்கு தேவன் புத்திர சந்தானம் அருள; இரவில் தூக்கமின்றி தவிக்கும் பாபுராம், குடிக்கு அடிமைப்பட்டுள்ள விஜய்சிங் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள ஜெபிப்போம்.

## 10 நவம்பர்
திங்கள்

### ஜின்ஜக்: பும்சோன்சின் & லுன்சிங்

**துதிக்க:** புதிய கிராமத்தில் தடையின்றி சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். படாவல் கிராம ஆலயம் மீண்டும் திறக்கப்பட்டு ஞாயிறு ஆராதனை தொடர்ந்து நடைபெற தேவன் கிருபை செய்தார். போலாநகர் ஆலயத்தில் பெண் தலைவர்கள் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. எதிர்ப் பாளர்களிடமிருந்து நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களைப் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போலாநகர் ஆலயத்தின் பழுதுபார்க்கும் பணிக்கான தேவைகளை தேவன் சந்திக்க; ரூரா ஆலயத்திற்கு மின்சார இணைப்பு விரைவில் கிடைக்க; ராஜேஷ்பாபுவின் மனைவி ஆஷாவிற்கு ஒரு மாதத்திற்கு முன்பு கர்ப்பப்பை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது, அதிகளவு நீரிழிவு நிமித்தம் காயம் ஆறாமல் நீர் வடிந்துகொண்டிருக்கிறது, தேவன் பூரண சுகமருள; இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து நடக்க முடியாமல் அதிக வலியினால் கஷ்டப்படும் சுதேச ஊழியர் சந்தோஷ் குமாரின் மனைவியை தேவன் குணமாக்க ஜெபிப்போம்.

### ரணியா: அனில் குமார் & கவிதா

**துதிக்க:** வைரல் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட குலாப் என்பவரின் குடும்பத்தினர் அனைவரும் ஜெபத்தின் மூலம் பூரண சுகம்பெற்றனர். ஒருவருடத் திற்குப்பின் மீண்டும் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள தயா குடும்பத்திற்கு தேவன் கிருபை செய்துள்ளார். சில மாதங்களுக்கு முன்பு மிஷனெரியை கொலை செய்வதாக மிரட்டிய திலீப் என்பவர் மனந்திரும்பி ஆலயம் வந்து மன்னிப்பு கேட்கும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் பிடியினால் துன்புறும் சுமித்ரா, சுனிதா, ரீனா ஆகியோரை தேவன் விடுவிக்க; ஊர்மிளாவின் குடும்பத்தினர் தொடர்ந்து சுகவீனப்பட்டு வருவதால் அவர்களது விசுவாசத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளது, தேவன் அவர்களது விசுவாசத்தை பெலப்படுத்த; ஹர்னாம் குடும்பத்தினர் உற்சாகத்துடன் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; புதிதாக விசுவாசத் திற்குள் வந்துள்ள பாயல் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### சிக்கந்ரா:
### பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** அலியாபூர் கிராமத்தில் இரவு கூடுகையும், மூன்று கிராமங்களில் பெண்கள் கூடுகையும், குராடை மற்றும் நினோஹ்ரா கிராமங்களில் விசுவாசிகளின் கூடுகையும் சிறப்பாக நடைபெற தேவன் உதவிச் செய்தார். சிக்கந்ரா மற்றும் பலாக்ராமோ ஆலய ஆராதனைகளில் புதிதாக அநேகர் கலந்துக் கொள்கின்றனர். பூஜா, லக்ஷ்மி, சாந்தி ஆகியோரின் குடும்பத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருகின்றனர். அம்மை நோயிலிருந்து காஜலை குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜேஷ், ராம்நாதா, பூணம் ஆகியோரின் குடும்பத்தினர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; தேவ பக்தியில் வளர்ந்து வரும் நினோஹ்ரா, கோஜாபூல், கக்ரியா கிராமத்தினர் மற்றவர்களுக்கு சாட்சியாய் வாழ; ரியா மற்றும் ராகவின் திருமணம் விரைவில் நடைபெற; வரும் நாட்களில் நடைபெறவுள்ள இரவு கூடுகைகள், சுவிசேஷ ஊழியம் மற்றும் விசுவாசிகளின் பயிற்சி தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## 11 நவம்பர்
### செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரேம்லதா சுரேஷ் மால்தோ
திருமதி. ஜாய் பெல்லா இவாஞ்சலின் சுனில்
திருமதி. ஏஞ்சல் ராஜ் ஆல்பர்ட்

### ஜாலவ்ன்:
### கவித் ராகேஷ் ரத்திலால் & ஈகார் ரேஷ்மா மாருதி

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். காரேகலார் கிராமத்து பூசாரிக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். ஆஷிகி என்ற சகோதரிக்கு அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலை அருளினார். சுகவீனமாயிருந்த உமேஷ், முனேஷ் ஆகியோருக்கு தேவன் சுகமருளினார். நான்கு இடங்களில் விசுவாசிகளுக்கான கூடுகையும் மற்றும் தேடுவோர் முகாமும் நடத்திட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குழந்தை பாக்கியத்திற்காக நான்கு வருடங்களாக ஜெபித்து வரும் ஹேம்லதா மற்றும் 15 வருடங்களாக ஜெபித்து வரும் தினேஷுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; இருதய பிரச்சனையிலிருந்து ராம்பஹதூர், கல்லீரல் தொற்றிலிருந்து குட்டி, பித்தப்பைக்கல் பிரச்சனையிலிருந்து நேஹா, புற்றுநோயிலிருந்து பிரீத்தி ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; குனியாபுரா, துசேபுரா, ஜகம்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

### கைம்கஞ்ச்:
### ஸ்டீபன் ஹன்ஸ்தா & சுபாஷினி முர்மு

**துதிக்க:** சுவிசேஷத்தினிமித்தம் மூன்று மாதங்களாக சிறையிலிருந்த விசுவாசி விஜய்சிங்கிற்கு தேவன் விடுதலை கிடைக்கச் செய்தார். டைபாய்டு காய்ச்சலிலிருந்து விசுவாசியின் மகள் ஆஷாடாவை தேவன் குணமாக்கினார். ஜெபத்தின் மூலம் அசுத்தாவியின் பிடியிலிருந்து சச்சினின் மனைவிக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகள் பெருகி வரும் இந்நாட்களில் தேவன் விசுவாசிகளைப் பெலப்படுத்தவும், சுவிசேஷத்தினிமித்தம் மூன்று மாதங்களாக சிறையிலிருக்கும் நமது விசுவாசிகள் தரம்வீர், சர்வன்சிங் மற்றும் மஹாவீருக்கு விரைவில் விடுதலை கிடைக்கவும், கிராமங்களில் வாழும் அவர்களது குடும்பத்தினரின் தேவைகளைத் தேவன் சந்திக்கவும், ஆறுதல்படுத்தவும் ஜெபிப்போம்.

## 12 நவம்பர்
உபவாச ஜெபநாள்
புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சங்கர் P.

# மத்தியப் பிரதேசம்

## குணா:
**சத்தீஷ் & ஷர்மிளா**

**துதிக்க:** திருமணமாகி மூன்று வருடங்களாக குழந்தை இல்லாததால் கணவன் வீட்டாரால் உபத்திரவங்களைச் சந்தித்து வந்த சீமா பரேலாவுக்காக ஊழியர்கள் தொடர்ந்து ஜெபித்தபோது தேவன் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் அருளி ஆசீர்வதித்துள்ளார். உடல் வீக்கத்தினால் கஷ்டப்பட்ட ராம்பாய்க்காக சபையார் இணைந்து ஜெபித்தபோது தேவன் உடனே அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார். பில்லி சூனிய கட்டிலிருந்து நிஷ்பாய்க்கு தேவன் விடுதலை அருளினார். காய்ச்சல் மற்றும் கால் வீக்கத்தினால் அவதியுற்ற சுதேச ஊழியரின் மகளுக்கு தேவன் அற்புத சுகமருளினார். தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொண்ட ரீமா பாய்க்கு குழந்தை பாக்கியம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளுக்கு இடையூறு விளைவிக்கும் கிராமத்து மந்திரவாதிகள் மனந்திரும்ப; வயிறு வீக்கத்திலிருந்து கமலா பாய், காச நோயிலிருந்து ராதா பாய், தலையில் கட்டியினால் கஷ்டப்படும் 9 வயது நிதேஷ், கால் வலியினால் நடக்க இயலாமலிருக்கும் தன்னார்வ ஊழியரின் மகள் பிரியா ஆகியோருக்கு தேவன் சுகமருள; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி சத்தீஷின் கடுமையான முதுகுவலியையும், அவரது மனைவி ஷர்மிளாவின் நெஞ்சுவலி மற்றும் வலிப்பு வியாதியையும் தேவன் குணப்படுத்த; பிலாலா இன மக்கள் மத்தியில் தேவன் சுவிசேஷத் திற்குத் திறந்த வாசலைத் தந்தருள; இக்கோடியா கிராமத்தில் ஆராதனையை தடைசெய்யும் லக்ஷ்மண், சின்லால், பூறா ஆகியோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## தார்: சாந்து மராண்டி & ராக்கி

**துதிக்க:** விசுவாசிகளுக்கு இந்தாண்டு நல்ல விளைச்சலைத் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். ஐந்து புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். கல்லீரல் தொற்றினால் மூன்று மாதங்களாக அவதியுற்று வந்த காளி ஒசாரிக்கு தொடர் ஜெபம் மற்றும் சிகிச்சையின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். கடந்த மாதம் கன மழையினால் ஏற்பட்ட தொற்று வியாதிகளினால் பாதிக்கப்பட்டிருந்த சுதேச ஊழியர் மற்றும் விசுவாசிகளின் குடும்பங்களுக்கு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் கைலாஷ் தாக்கூர் மற்றும் ராம்சிங் தாக்கூர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; எட்டு மாதங்களாக வாய் புற்றுநோயினால் கஷ்டப்படும் ஜித்தேனுக்கு தேவன் அற்புத சுகமருள; நமது விசுவாசி சௌஹானின் தந்தை இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; பழைய விசுவாசிகள் விசுவாசத்தில் வளரவும், புதிய விசுவாசிகளுக்கு மாதிரியாய் ஜீவிக்கவும் தேவன் உதவி செய்ய; நடைபெறவுள்ள ஜீப் குழு ஊழியம், படகாட்சி ஊழியம், தேடுவோர் முகாம் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஜெபிப்போம்.

# 13 நவம்பர்
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. அனில்பாய் கன்விட்

## டப்ரா:

**சத்திகந்த் பரிச்சா & சகரிகா பிரதான்**

**துதிக்க:** விசுவாசி அரவிந்த் மற்றும் அவரது மனைவியை பாம்பு கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். ஹசினாவின் பிரசவத்தில் சிக்கல் ஏற்பட்டபோது ஜெபத்தின் மூலம் சுகப்பிரசவத்தில் குழந்தை பிறக்க தேவன் கிருபை செய்தார். புதிய விசுவாசியான பாபு சிங் மற்றும் அவரது மகனை சாலை விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார். அநேக மாதங்களுக்குப் பிறகு கிட்டென்டா கிராமத்தில் ஞாயிறு ஆராதனையைத் துவங்க தேவன் கிருபை செய்தார். எதிர்ப்புகள் அதிகமாயிருந்தபோதிலும் இம்மட்டும் ஆலய ஆராதனையை தடைபடாமல் நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜீப் குழு ஊழியத்திற்கு அர்ப்பணமுள்ள ஓட்டுநர் கிடைக்க; விசுவாசிகள் எதிர்ப்பினிமித்தம் விசுவாசத்தை விட்டு பின்வாங்காமலிருக்க; நான்சி டைபாய்டிலிருந்து சுகம்பெற; கடன் பிரச்சனையிலிருந்து விசுவாசி சுரேஷ் விடுவிக்கப்பட; ஆகாஷ் மற்றும் நிக்கில் குடி மற்றும் புகையிலைப் பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற; முதுகு தண்டுவட வலியிலிருந்து மிஷனெரிக்கு தேவன் சுகமருள; விசுவாசிகளின் பிள்ளைகளான ஆஷா & ஆராதனா விடுதியில் தங்கி, உற்சாகத்தோடு தங்கள் படிப்பைத் தொடர ஜெபிப்போம்.

## உதய்நகர்:

**டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா**

**துதிக்க:** சிகோர் மாவட்டத்தில் இச்சாவார் என்ற பகுதியில் துணை மையம் அமைக்க தேவன் கிருபை செய்தார். பாக்லி பணித்தளத்தில் ஏற்பட்ட உபத்திரவத்தில் தேவன் விசுவாசிகளைப் பாதுகாத்தார். இதுவரை மத்தியப் பிரதேசத்தில் 10 பணித்தளங்கள், 22 சபைகள், 24 சுதேச ஊழியர்களைத் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். 89 நாட்கள் சிறையிலிருந்த நமது விசுவாசிகளை தேவன் பாதுகாத்து, பெலப்படுத்தியதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உபத்திரவத்தின் நிமித்தம் பின்வாங்கிப்போன விசுவாசிகள் ஆவிக்குரிய உயிர்மீட்சியைப் பெற; சபை மூப்பர்களை தேவ ஆவியானவர் பெலப்படுத்த, கடுமையான நேரங்களில் விசுவாசத்தில் அவர்கள் உறுதியாய் நிலைத்திருக்க; பொய் குற்றச்சாட்டினால் நீதிமன்ற வழக்கை சந்தித்து வரும் நமது சுதேச ஊழியர் தீபக், தினேஷ், ஹரி, ஜீவன் மற்றும் ஜெகராம் பாபா, அர்ஜுன், சச்சின், மெய்தா, கிரண், மஞ்சு ஆகியோரின் வழக்குகள் விரைவில் முடிக்கப்பட; பிலாலா, கோண்ட் மற்றும் பரேலா இன மக்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; கட்டாய மதமாற்றம் என்ற பெயரில் கிறிஸ்தவர்களுக்கு நடத்தப்படும் அநீதிகள் மறையவும், தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்தவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

# 14 நவம்பர்
## வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரஞ்சித் ஜேம்ஸ், திரு. ஜாண் C.H.
திருமதி. ஜெலின் சங்கர்
செல்வி. மகேஷ்வரி ரெபேக்கா
திரு. வால்வி தீனா தானா

### பால்: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** விஷப்பாம்பு கடித்து மயக்க நிலைக்குச் சென்ற ரிங்குவிற்காக நமது விசுவாசி தரியா ஜெபித்தபோது தேவன் அவரது ஜீவனை காப்பாற்றினார். 10 வருடங்களாக சிறுநீரகக் கற்களினால் அவதியுற்று வந்த கனிஷ்காவையும், அடிக்கடி மூக்கிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்த சரிஷ்னாவையும் தேவன் குணப்படுத்தினார். சுலேப்டி கிராமத்தில் நடைபெற்ற ஆவிக்குரிய முகாமில் 36 விசுவாசிகள் கலந்துகொண்டு பயன்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநிலை பாதிப்பினால் அவதியுறும் பட்லிபாயை தேவன் குணப்படுத்த; பாலிராம், ராதா, கிட்டாரிபாய் ஆகியோர் தங்கள் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கைச் செய்ய; தங்கள் குழந்தையை இழந்து தவிக்கும் நிர்மலா & கைலாஷ் குடும்பத்திற்கு தேவன் ஆறுதலையும், மன சமாதானத்தையும் அருள; சுயநினைவை இழந்து படுக்கையிலிருக்கும் ஜமால் பாய்க்கு தேவன் பூரண சுகமருள; சபை மூப்பர், வாலிபர், சிறுவர் கூடுகைகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## அஸோம்
### கோகாமுக் & தகுவாகனா:
### டென்சிங் & கவிதா

**துதிக்க:** 11ஆம் வகுப்பு படிக்கும் சம்மோனி பெர்மி பக்கவாதத்திலிருந்தும், ஓய்புலி கடுமையான தலைவலி மற்றும் உயர் இரத்த அழுத்தத்திலிருந்தும், டிஷ்கு கல்லீரல் பிரச்சனையிலிருந்தும், ஜான்மோனி பாங்கிங் நுரையீரல் மற்றும் சுவாசப் பிரச்சனையிலிருந்தும், டிப்தியோனா நோரோ வயிறு மற்றும் உடல் வலியிலிருந்தும் ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகம் பெற்றனர். ஒன்பது பேர் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். மிஷனெரியின் மகள் லிசாவுக்கு நல்ல ஆரோக்கியத்தையும் மேலும் ஊக்கமளிக்கும் மருத்துவ முடிவுகளையும் தேவன் வழங்கியுள்ளார். கடந்த மாதம் அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் ஊழியத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் நீங்க; சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட்டுள்ள மார்க்கதிங் சென்டே, மஞ்சள் காமாலை மற்றும் கல்லீரல் பிரச்சனையினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மேரி பெகு ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; டோர்ஜ், போகம், ஓவ்குரி, தரோங், தெகெரகுரா மற்றும் உரியம்குரி கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசலை தேவன் கட்டளையிட; துர்நாற்றம் மற்றும் பூஞ்சை தொற்றுடன் கூடிய கடுமையான தோல் வியாதியால் பாதிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளாக சிகிச்சைப் பெற்று வந்தும் சுகம் கிடைக்காத டெபன் டாயுங்க்கு தேவன் அற்புத சுகமருள; ரோஷிமியின் குழந்தை முடக்குவாதத்திலிருந்து சுகம் பெற, அவரது கணவர் வீட்டார் அனைவரும் இவ்வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுகம் பெற ஊக்கத்துடன் ஜெபிப்போம்.

# 15 நவம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஆலிஸ் பிரேசோயி
திருமதி. வசாவா சவிதாபேன் பச்சியாபாய்

## தேமாஜி:
### பிரவீன் தாஸ் & மார்கிரெட்

**துதிக்க:** நான்கு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். இயேசு திரைப்பட ஊழியம் ஆறு கிராமங்களில் நடைபெற தேவன் கிருபை செய்தார். லுடாசுட் கிராமத்தில் விசுவாசிகளின் முகாமில் அனைத்து விசுவாசிகளும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இரண்டு கிராமங்களில் நடைபெற்ற சுவிசேஷக்குழு ஊழியத்தில் விசுவாசிகள் உற்சாகத்துடன் ஈடுபட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அர்ப்பணமுள்ள தன்னார்வ ஊழியர்களை தேவன் தந்தருள; மிஸ்ஸிங் இன மக்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துவை தங்கள் குடும்பத்துடன் விசுவாசித்து ஏற்றுக்கொள்ள; இரண்டு வருடங்களாக நடக்க முடியாமல் கஷ்டப்படும் 11 வயது ஜோக்லா மிலி, இரண்டு கால்களிலும் வீக்கத்தினால் கஷ்டப்படும் மெய்னா மிலி, மனநிலை பாதிக்கப்பட்டு இரவில் தூக்கமின்றி அவதியுறும் கோமல் பங்கிங் ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

# பீஹார்

## கிழக்கு கங்கை பிராந்தியம்:
### பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்

**துதிக்க:** நான்கு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், இரண்டு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்யவும் தேவன் கிருபை செய்தார். சிகிச்சைப் பெற்று வரும் சிருஷ்டி குமாரியின் உடல் நிலையில் தேவன் முன்னேற்றத்தைத் தந்துள்ளார். 10 வருடங்களுக்குப் பிறகு ஜெபத்தின் மூலம் ரெய்னுதேவி தன் கணவருடன் இணைந்து வாழ தேவன் கிருபை செய்தார். அசுத்தாவியின் பிடியிலிருந்து சுக்னி குமாருக்கு தேவன் விடுதலை அருளி பெலப்படுத்தினார். ரவி சங்கருக்கு காவல் துறையில் வேலை கிடைக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மதுபானி கிராமத்தில் எதிர்ப்பை சந்தித்து வரும் விசுவாசிகளை தேவன் பெலப்படுத்த; கள்ள உபதேசங்களுக்கு ஷிவ்நகரா விசுவாசிகளை விலக்கி தேவன் பாதுகாக்க; டெரேன்சடா மற்றும் டெல்சந்த்சடா ஆகியோருக்கு வியாதியிலிருந்து தேவன் சுகமருள; தன்னார்வ ஊழியர்களான சுமேர் குமார், பப்பு ரிஷிதேவ் ஆகியோர் ஊழியத்தை உற்சாகத்துடன் செய்ய; கஜோல் கிராமத்தில் பின் தொடர் பணி செய்யவும், தாமுவா கிராமத்தில் எதிர்ப்புகள் மறையவும், மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டவும் ஜெபிப்போம்.

# 16 நவம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஆபிரகாம் தாமஸ்

## ஜார்க்கண்ட்

### ஜாமா:
**முன்னா மொகிந்தர் & சுமித்தா தாஸ்**

**துதிக்க:** 24 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், 24 பேர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணையவும் தேவன் கிருபை செய்தார். விசுவாசிகள், வாலிபர், சபை மூப்பர் ஆகியோருக்கான பயிற்சிகள் சிறப்பாக நடைபெற்றன. சாலை விபத்து மற்றும் வியாதிகளிலிருந்து மிஷனெரி மற்றும் சுதேச ஊழியரின் குடும்பங்களைப் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுதியில் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் நற்செய்திப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள; கிறிஸ்தவ வாலிபர்கள் தங்கள் வாழ்வில் இயேசு கிறிஸ்துவை பிரதிபலிக்க; வலிப்பு, பக்கவாதம், காச நோய் மற்றும் மனநல பாதிப்பினால் அவதியுறும் விசுவாசிகளை தேவன் குணப்படுத்த; தனது தந்தையின் மறைவினால் வாடும் மிஷனெரி முன்னா மற்றும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

### பத்தர்காமா:
**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** வாய் பேச முடியாமலிருந்த சோட்டு ரவிதாஸ் 15 நாட்கள் ஜெபத்திற்குப் பின் பேசும் திறனைப் பெற்றுக்கொண்டார். அசுத்தாவியின் பிடியிலிருந்து சந்தோ தேவிக்கு தேவன் விடுதலை அருளினார். மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். விசுவாசிகள் நற்செய்தி அறிவிப்புப் பணியில் உற்சாகத்துடன் பங்குபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுஷ்மா தேவி மற்றும் லக்ஷ்மி தேவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; சிறுநீரகப் பிரச்சனையினால் வயிறு வீங்கி அவதியுறும் 5 வயது மனீஷை தேவன் குணப்படுத்த; ஊழியத்தை விரிவுப்படுத்த அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர் மற்றும் தன்னார்வ ஊழியரை தேவன் தந்தருள; விரைவீக்கத்திலிருந்து அபிஷேக், ஜித்தேந்திரா ரவிதாஸ், சுரேந்திர ரவிதாஸ், மோதிலால் ஆகியோரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## நினைவுகூறும் தேவன்

*மத்தியப்பிரதேசம், கர்சோன் பணித்தளத்தின் பட்டியா கிராமத்தில் வசித்து வரும் ரமேஷ் & யசோதா குடும்பம் திருமணமாகி 12 ஆண்டுகளாக குழந்தையின்றி தவித்து வந்தனர். அநேக மருத்துவர்களிடம் சென்று சிகிச்சைப் பெற்றும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. இவர்கள் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டு அவரை விசுவாசிக்க துவங்கினார்கள். இதனால் உறவினர்கள் மற்றும் ஊராரின் ஏளனத்திற்கும், பழிச் சொல்லுக்கும் ஆளாயினர். ஆயினும் சோர்ந்து போகாமல் விசுவாசத்துடன் தொடர்ந்து ஜெபித்த வந்த அவர்களின் வாழ்க்கையில் தேவன் அற்புத கிரியை நடப்பித்தார். ராகாலை நினைவுகூர்ந்த தேவன் யசோதாவையும் நினைவுகூர்ந்து கர்ப்பம் தரிக்க செய்தார். தேவன் சகலத்தையும் செய்ய வல்லவர் என்பதற்கு யசோதாவின் வாழ்க்கை சாட்சியாக உள்ளது. அல்லேலூயா!*

## 17 நவம்பர்
### திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹேமலதா ஆபிரகாம்

**பர்ஹர்வா: மல்லா வித்யாசாகர் & தீபிகா ராணி பானி**

**துதிக்க:** பாரத்தா மால் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். மால் இன மக்கள் வாழும் ராணிபூர் மற்றும் சந்துபூர் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்க தேவன் உதவி செய்தார். மூன்று கிராமங்களில் சிறுவர்களுக்கான வேதாகம வகுப்புகள் தடையின்றி நடைபெற்று வருகிறது.சாலை விபத்திலிருந்து சிண்டு ரவிதாஸ், சாந்தி தேவி, கஞ்சன் தேவி மற்றும் துளசியை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள பாரத்தா மால் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் பூரண சுகம்பெற; பேபி குமாரி, மேன் குமாரி, பிரமிளா ஆகியோருக்கு இலவச அரசு வீட்டு மனை கிடைக்க; லக்ஷ்மி தேவி, அதோரி, கமலி, பாயல், கங்கியா ஆகியோருக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; நாராயண் மாலுக்கு தேவன் ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தந்தருள; கிராமத்தினரால் எதிர்ப்பை சந்தித்து வரும் சபை மூப்பர் கோபன் மாலுக்கு தேவன் பாதுகாப்பருள ஜெபிப்போம்.

**சாந்தோபானி & பத்தோர்காரா: ஜேக்கப் ஞானப்பண்டிதன் & சாந்தி**

**துதிக்க:** டைபாய்டு காய்ச்சலிலிருந்து மோஹன் ராய் மற்றும் புதிய விசுவாசி சீமா டேபியின் மகள் கரீனா குமாரிக்கு தேவன் சுகமருளினார். சிச்ரோ கிராமத்தைச் சேர்ந்த சிவ்லால் ராய் சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்டார். ஆறு கிராமங்களில் இரவு கூடுகை மற்றும் அநேக கிராமங்களில் பின்தொடர்ப் பணி செய்ய தேவன் கிருபை பாராட்டினார். மால் பஹாடியா மக்கள் மத்தியில் தேவன் இம்மட்டும் ஊழியரை பயன்படுத்தி வரும் கிருபைக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறு ஆராதனையில் உற்சாகத்துடன் பங்குபெற்று வந்த புதிய தொடர்பாளர்களை தடைசெய்யும் பாக்ஜோன்பா கிராமத்து வாலிபர்கள் மனந்திரும்ப; பந்தன் பஹாரி, சிச்டா, ஹரிபூர், கரண்புரா, ஜீட்பூர், உதய் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டுவோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பிரன்ராய், கோரி டெபி & கிரண் டெபி ஆகியோர் தடையின்றி இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைய; புதிய விசுவாசி பிரேம் ராய்க்கு ஏற்ற வேலைக் கிடைத்து சாட்சியாய் வாழ ஜெபிப்போம்.

### ஒருங்கிணைந்த ஜெபம்

*குஜராத் மாநிலம், சோரம்பா பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசி சுரேஷ்பாய் தவறாமல் ஆலய ஆராதனையில் கலந்துகொள்பவர். இவர் பிறருடைய வயலில் கூலி வேலை செய்து வருபவர். ஒருநாள் வயலில் வேலை செய்யும் போது விஷப்பாம்பு கடித்தது. வலியினால் துடித்த அவரை அருகிலிருந்தவர்கள் உடனே மருத்துவ மனையில் அனுமதித்தனர். மருத்துவர்கள் பரிசோதித்து அவர் பிழைப்பது கடினம் என்று கூறினர். இந்த செய்தியை கேள்விப்பட்ட சபையார் ஒன்றாக இணைந்து அவரை காப்பாற்றும்படி தேவனிடம் கண்ணீரோடு ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் அற்புதமாய் அவரது ஜீவனைப் பாதுகாத்தார். அல்லேலூயா!*

## 18 நவம்பர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜாக்குலீன் பெஞ்சமின்
திரு. திசாங்சே சங்தம்

### மோகுல் பஹாடி: ஹேமுவேல் லிம்மா & ரீட்டாஞ்சலி கரோடா

**துதிக்க:** சபை மூப்பர் பயிற்சியும், சுதேச ஊழியர் பயிற்சியும் சிறப்பாக நடைபெற்றன. சுமித் தெஹ்ரி என்ற குழந்தையின் தொப்புள் கொடியில் தொற்று ஏற்பட்டதால் ஊழியரை அழைத்து ஜெபித்தபோது தேவன் பூரண சுகமருளினார். சால்போனா சபையில் தடைப்பட்டிருந்த சிறிய ஜெபக்குழுவை மீண்டும் துவங்க தேவன் கிருபை செய்தார். வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த பாசுதேவுக்கு தேவன் சுகமருளினார். இரண்டு இடங்களில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் அநேகர் கலந்துகொள்ளும்படி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநலம் பாதிக்கப்பட்டு, கயிறுகளால் கட்டப்பட்டுள்ள மங்களா தெஹ்ரியை தேவன் குணப்படுத்த; ரேஷ்மி குமாரி என்ற வாலிபப் பெண் மனநலம் பாதிக்கப்பட்டு பெற்றோரால் கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளார், தேவன் அற்புத சுகமருள; சிக்கில்செல் அனிமியாவினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவன் யாகுப் தெஹ்ரியை தேவன் குணப்படுத்த; சப்புடியா கிராமத்தைச் சேர்ந்த ஒரே விசுவாசியான சோனியா தெஹ்ரி வயிற்று வலியிலிருந்தும், கார்த்திக் தெஹ்ரி சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

### நகர் உண்டாரி: பிபின் பிஹாரி பிரதான் & ஜரானா பரிச்சா

**துதிக்க:** அல்கர் மற்றும் துள்சிதாமார் கிராமங்களில் ஆலய கட்டுமானப் பணியைத் துவங்கவும், விசுவாசிகள் உற்சாகத்தோடு உதவி செய்யவும் தேவன் கிருபை செய்து வருகிறார். இரண்டு மாதங்களாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு உண்ணவும், உறங்கவும், பேசவும் முடியாமல் தவித்து வந்த பிகாஸ் காசிக்கு துள்சிதாமார் கிராம விசுவாசிகள் உபவாசித்து ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலை அருளினார். சிறுவர்களுக்காக நடத்தப்பட்ட விசேஷித்த கூடுகையில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்துகொண்டு பயன்பெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவனை விசுவாசித்து வரும் பிகாஸ் காசின் குடும்பத்தினர் தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்ய; ஜார்கண்ட் மற்றும் உத்தரப்பிரதேச எல்லையில் நகர் உண்டாரி பணித்தளம் இருப்பதால் ஊழியத்திற்கு எதிர்ப்புகள் நிலவி வருகிறது. இங்குள்ள விசுவாசிகள் மற்றும் ஊழியர்களை தேவன் பாதுகாக்க; விடுதியில் தங்கி படிக்கும் நமது பிள்ளைகள் அனைவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், ஆரோக்கியத்தையும் அருள; நடைபெறவுள்ள அனைத்து கூடுகைகளும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

**19 நவம்பர்**
உபவாச ஜெபநாள்
புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. எலிசபெத் சொர்ணா துரைராஜ்
திருமதி. பசந்தி பாசுதேவ் மால்தோ

# மேற்கு வங்காளம்

## பாலூர்ஹட்:
### தீப்ரத்னா & மித்திலேஷ்

**துதிக்க:** இரண்டு நாட்கள் சபை மூப்பர் கூடுகை சிறப்பாக நடைபெறவும், இரண்டு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும் தேவன் உதவி செய்தார். தாராபாடா கிராமத்தில் நடைபெற்ற முழுஇரவு ஜெபத்தில் மின்டி ஹெம்ரோமின் இரண்டு மருமகள்களும் அசுத்தாவியின் பிடியிலிருந்தும், டங்கி கிராம ஷிவ்லால் முர்மு பயத்தின் ஆவியிலிருந்தும், வலிப்பு நோயிலிருந்தும் விடுதலைப் பெற்றனர். ஜடாய் கிராமத்தின் உபவாச ஜெபத்தில் டோலா சோரன் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றார். சிறுநீரகக் கல் பிரச்சனையால் 15 வருடங்களாக அவதியுற்ற பப்லு ஹன்ஸ்தாவுக்கு அறுவை சிகிச்சையின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** படல்பூர், டங்கி, டடுகிடோலா, தாரஜ்பூர், பாலிடங்கா ஆகிய கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்க எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்க செய்ய; நமது விசுவாசிகளும், சபை மூப்பர்களும் ஆவிக்குரிய வாழ்வில் வேரூன்றி வளரவும், சுவிசேஷ ஊழியத்தில் உற்சாகத்துடன் பங்குபெறவும்; பாஜு ஹன்ஸ்தா மற்றும் பிஜு கிஸ்கு ஆகியோர் கிரமமாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; சிபு சோரன், போர்கனா முர்மு, பொலில் முர்மு, பகத் ஹன்ஸ்தா, நாயன் டுடு, பூடான் டுடு ஆகியோரின் குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## தப்பன்:
### ஹரமோகன் பிரபுதாஸ் நாயக் & சூசம்மா

**துதிக்க:** மூன்று பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய தேவன் உதவி செய்தார். விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிப்போன சுனில் முர்மு தற்போது ஆலய ஆராதனையில் கலந்து கொள்கிறார். சேபான் முர்மு மனநல பாதிப்பிலிருந்து பூரண சுகம் பெற்றுள்ளார். சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து சல்பாரிக்கு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறு ஆராதனை நடத்தப்படும் அனைத்து கிராமங்களிலும் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; கல்லீரல் பிரச்சனையிலிருந்து அஜோய் கர்மாக்கர், புற்றுநோயிலிருந்து லோகேன் மார்டி, சர்க்கரை நோயிலிருந்து அரோட்டி முர்மு ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; சபை மூப்பர்கள் வேத அறிவை தெளிவாய் பெற்று தங்களது சபையை ஆவிக்குரிய வழியில் நடத்திச் செல்ல; சுதேச ஊழியர் ராஜீவ் முர்முவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; எக்டாலா, டங்ராடோலா, டெட்கி ஆகிய கிராமங்களில் இரவு கூட்டங்கள் நடத்த அனுமதி கிடைக்க; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பப்லு சோரன், சப்தன் முர்மு, ஒக்கில் முர்மு ஆகியோர் தேவனின் அன்பை ருசிக்க ஜெபிப்போம்.

**20 நவம்பர்**
**வியாழன்**

# சத்தீஸ்கார்

## தப்காரா & லுடேக் விடுதி:

### அருண்குமார். ஜி & சாரதி

**துதிக்க:** மஹாதேவ்முடா திருச்சபை சீரமைக்கப்படவும், ஆராதனை தொடர்ந்து நடைபெறவும் தேவன் உதவி செய்தார். குமன்சியா கிராமத்தில் விசுவாசிகளுக்கான கூடுகையில் கலந்துகொண்டோர் ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். குடும்ப ஆலோசனைக் கூட்டத்தில் 40 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் ராதிகா வுக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10 வருடத்திற்கு பிறகு கர்ப்ப மாயிருக்கும் அனுரஞ்சன் சகோதரரின் மனைவிக்கு தேவன் சுகப் பிரசவமருள; நடைபெறவிருக்கும் வாலிபர்களுக்கான மேளாவில் கலந்துகொள்ளும் வாலிபர்கள் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவும், தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணிக்கவும் ஜெபிப்போம்.

## காட்கோரா:

### கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா

**துதிக்க:** எட்டு இடங்களில் சத்சங் கூடுகைகளும், ஸ்தோத்திர ஜெபக் கூடுகையும் சிறப்பாக நடைபெற்றது. உபவாச ஜெபக்கூட்டத்தில் அநேகர் கலந்துகொண்டு பாரத்தோடு ஜெபித்தனர். வேதபாட வகுப்புகள் வாலிபர்களுக்கும், தன்னார்வ ஊழியர்களுக்கும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பிரயோஜனமாக அமைந்தது. மருத்துவ முகாமின் மூலம் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தம்னர் தாலுக்காவில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்துள்ளார். எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவத்தின் மத்தியிலும் தடையின்றி ஊழியம் நடைபெற; தன்னார்வ ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் ஆத்தும பாரம் நிறைந்தவர்களாய் ஊழியத்தில் அதிக வாஞ்சையுடன் ஈடுபட; சத்தீஸ்கர் மாநிலத்தில் எதிர்ப்புகள் பெருகிவரும் இந்நாட்களில் ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் தேவன் தைரியத்தையும், பாதுகாப்பையும் தந்தருள ஜெபிப்போம்.

## ஏழைக்கு இரங்குபவர்

*மஹாராஷ்டிரா மாநிலம், கப்ராடா பணித்தளத்திலுள்ள சில்ஹர்மால் கிராமத்தைச் சேர்ந்த நமது ஏழை விசுவாசி சோமி பென் வியாதிப்பட்டார். மருத்துவ மனைக்குச் சென்ற அவருக்கு மருத்துவர் பல மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளும்படிச் சொன்னார். மருத்துவ பரிசோனைகளை செய்தபின் அதற்குரிய கட்டணத்தை செலுத்த போதுமான பணம் அவரிடம் இல்லாததால் மருத்துவ அறிக்கைகளைத் தர மறுத்துவிட்டனர். மிகுந்த சோர்வோடு தேவன் தங்களுக்கு உதவி செய்யும்படி ஜெபித்துகொண்டே வீடு திரும்பின பொழுது சோமி பெனை அறியாத ஒருவர் வழியில் சந்தித்தார். சோமி பெனின் சூழ்நிலையைக் கேள்விப்பட்ட அவர் மருத்துவ பரிசோதனைக்கான முழுக் கட்டணத்தையும் மருத்துவமனையில் செலுத்தி அறிக்கையைப் பெற்றுக்கொள்ள செய்தார். ஏற்ற நேரத்தில் தேவன் தங்களுக்குப் பாராட்டின தயவை நினைத்து தேவனை மகிமைப்படுத்தினார் சோமி பென். அல்லேலூயா!*

## 21 நவம்பர்
### வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெஹாலின் ஜெமி ஜெயசேகர்
திருமதி. மன்பிரீத் கௌர் அய்யனார்

## ஒடிசா

### ரிமுலி:
**அரவிந்த் குமார் & ஹெலன் மரியம்**

**துதிக்க:** ஊழியர்கள் தங்கள் விடுமுறை முடித்து இரயிலில் திரும்பும் போது ஏற்பட்ட நிலச்சரிவிலிருந்து ஆபத்தின்றி தேவன் பாதுகாத்தார். மசூரியின் குடும்பத்திற்கு தேவன் குழந்தை செல்வத்தைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். விசுவாசி கார்த்திக் தன் உறவினர் வீட்டிற்கு தன் மாடுகளை வண்டியில் ஏற்றிச் சென்ற போது மதவாத கும்பலினால் அவரது வண்டி காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. ஜெபத்தின் மூலம் ஒரு வாரத்திற்குள் அவரது வண்டி திரும்ப கிடைக்கும்படி உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தலை முழுவதும் கட்டி களினால் அவதியுறும் சாமு முண்டாவை தேவன் குணப்படுத்த; தலைவலி, நெஞ்சு வலி, தலை சுற்று போன்ற பெலவீனங்களினால் கஷ்டப்படும் சுனியா முண்டா, அநேக நாட்களாக அதிக தலைவலியினால் கஷ்டப்படும் ஜோஹத் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; புதிய பணித்தளத்திற்கு மாறுதலாகி செல்லவிருக்கும் மிஷனெரி குடும்பத்தை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

## குஜராத்

### ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி:
**ஹரிபாபு & பங்கஜம், பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா, சதீஷ் & கிறிஸ்டி ஜெயந்தி மற்றும் தாங்பியாக்முயான்**

**துதிக்க:** விடுதிப் பிள்ளைகளுக்கு ஒருநாள் ஆவிக்குரிய கூட்டம் நடத்த தேவன் உதவி செய்தார். பாம்பு கடித்து ஆபத்தான நிலையிலிருந்த விடுதி மாணவன் ஷியாம் பாயின் தாயாருக்காக விடுதிப் பிள்ளைகள் இணைந்து பாரத்தோடு ஜெபித்தபோது அவரது ஜீவனை தேவன் பாதுகாத்தார். கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் பிள்ளைகள் உற்சாகத்துடன் பங்குபெற்றனர். விடுதி பிள்ளைகளுக்கும், ஊழியர்களுக்கும் தேவன் தந்த சுகம் மற்றும் பாது காப்பிற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது பள்ளியில் படிக்கும் அனைத்துப் பிள்ளைகளும் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ள; இந்த வருடம் நம் பள்ளியில் 10ஆம் வகுப்பு படிக்கும் 30 பிள்ளைகளும், 12ஆம் வகுப்பு படிக்கும் 14 பிள்ளைகளும் நல்ல மதிப்பெண்கள் பெற்று 100% தேர்ச்சிப்பெற; பள்ளி நிர்வாகத்தை நடத்தும் நமது மிஷனெரிகளுக்கு போதுமான ஞானத்தை தேவன் தந்தருள; பள்ளி மைதானத்திற்கு தேவையான நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

# 22 நவம்பர்
சனி

## மாண்சா:
### செல்லதுரை & கனகநேசம்

**துதிக்க:** விசுவாசி கபஜிபாய் வீட்டிற்கு அரசு திட்டத்தின் மூலம் மின்சாரம் கிடைக்க தேவன் உதவி செய்தார். ஹீனா பெனின் திருமணம் தடையின்றி நடக்க தேவன் உதவி செய்தார். ராகுல் பாயின் திருமணத்திற்கான பொருளாதாரத் தேவைகளை தேவன் சந்தித்தார். தருண் பாயை பாம்புக் கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். பர்மார் சமுதாய மக்கள் மத்தியில் தேவன் தந்த திறந்த வாசலுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வர்காரி இன மக்கள் மத்தியில் காணப்படும் வறுமை, கடன், அடிமைத்தனம் நீங்கி விடுதலை பெற; வடக்கு குஜராத்தில் அதிகமாய் காணப்படும் குழந்தை தொழிலாளர்கள் நிலை மாறி, அனைத்து பிள்ளைகளும் கல்வி அறிவைப் பெற; வர்ஷா, ஹெட்டல் பென், சுமன் பென், பாரதி பென், பார்வதி பென், சப்னா பென், சோனால் பென், பால்குனி பென் ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள; கிறிஸ்தவ வாலிபர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; ஊழியத்திற்கு அர்ப்பணிப்புள்ள இரண்டு தன்னார்வ ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியரை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

## சொரம்பா:
### புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

**துதிக்க:** ஆறு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவி செய்தார். நான்கு இடங்களில் நடைபெற்ற பெண்களுக்கான ஆவிக்குரிய கூடுகை மிகுந்த பலனைத் தந்தது. கர்த்தரின் கிருபையால் விஷப்பாம்பின் கடியிலிருந்து சுரேஷ் பாதுகாக்கப்பட்டார். விசுவாசியான தாயின் ஜெபத்தினால் அசுத்தாவியின் பிடியிலிருந்து கிரண் விடுதலை பெற்றார். சபை மூப்பர் பயிற்சியில் கலந்துகொண்டோர் உத்தமத்தோடு சபையை நடத்த தங்களை அர்ப்பணித்தமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாலிபர் கூட்டத்தில் கலந்துகொள்வோர் அனைவரும் தங்கள் பாவத்தை அறிக்கையிட்டு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யவிருக்கும் வாலிபர்களான பிரியங்கா, ஜெசு பென், ஹேமு பென், தக்ஷா பென் உட்பட மேலும் 17 பேர் தைரியமாகவும், தடையின்றியும் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய; அசுத்தாவியின் அலைக்கழிப்பிலிருந்து கவிதா பெனை தேவன் விடுவிக்க; கர்த்தருக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்துள்ள மாஷ் மற்றும் சஞ்சு தங்கள் தீர்மானத்தில் உறுதியாய் இருக்க; புதிய விசுவாசிகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

## 23 நவம்பர்
ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாஷ்வா K.S.
திரு. ஜாண்பால் ஹாரிஸ் J.

# மகாராஷ்டிரா

### சுர்கானா:
**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** பாஹ்ரே மற்றும் சுர்கானா பணித்தளங்களில் சபை மூப்பர் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. உபவாசித்து ஜெபித்த நாவி பென் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றார். டின்டோரி பணித்தளத்தில் இரண்டு புதிய குடும்பங்கள் ஜெபத்தில் கலந்துகொள்கின்றனர். நான்கு வருடங்களாக வயிற்று வலியினால் வேதனைப்பட்டு வந்த சைத்தர் பென் உபவாசித்து ஜெபித்து பூரண சுகம்பெற்றார். போரிபாடா கிராமத்தில் தொடர்ந்து ஜெபக்கூட்டங்கள் நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் நாட்களில் திட்டமிட்டுள்ள ஆவிக்குரிய கூடுகைகள் தடையின்றி நடைபெற; டின்டோரி பணித்தளத்தில் ஊழியம் செய்ய அர்ப்பணிப்புள்ள சுதேச ஊழியர் மற்றும் தன்னார்வ ஊழியரை தேவன் தந்தருள; சிறுநீரகக் கல் பிரச்சனையினால் அவதியுற்று வரும் கணேஷ் பாயை தேவன் குணப்படுத்த; பார்கவ் மற்றும் வாணி கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தேவன் தந்து, அநேக ஆத்துமாக்கள் ஆதாயப்படுத்தப்பட; பப்லுன் சபையில் விசுவாசிகளை அச்சுறுத்தும் கிராம மக்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### ஜவஹர்:
**விஜய்பாபு & தேவ கிருபை**

**துதிக்க:** ஆறு புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். 12 கிராமங்களில் ஒருநாள் உபவாச ஜெபம் நடத்த தேவன் உதவி செய்தார். வியாதியிலிருந்தும், அசுத்தாவியின் பிடியிலிருந்தும் ஜெபத்தின் மூலம் ஜய்தேன்பாய் விடுதலை பெற்றார். இரண்டு வாரங்களாக நடக்க முடியாமல் கஷ்டப்பட்ட கிரிஜி பென் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். விசுவாசத்தை விட்டு பின்வாங்கிபோன இரண்டு பேர் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விக்ரம் காட் மற்றும் வட தாலுக்காவில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைத் தந்தருள; இரவில் அசுத்தாவியின் அச்சுறுத்துதலினால் கஷ்டப்படும் அஞ்சனா பெனுக்கு தேவன் விடுதலை அருள; மீனா பெனுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; சிறுநீரக தொற்றிலிருந்து பிரமிளா பேன் சுகம்பெற; எலிகளின் தொல்லையிலிருந்து விசுவாசிகளின் விளைச்சல்களை தேவன் பாதுகாக்க; வாலிபர்கள் வாஞ்சையோடு ஆலய ஆராதனைகளிலும், வேதபாட வகுப்புகளிலும் கலந்துகொள்ள; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள கஸ்டேரி, முர்டோபாடா, வடுபாடா, நவபாடா, போப்தாரி, கிரிமீரா, கர்சோன்ட் மற்றும் மதுவிஹிரா சபைகளில் தேவன் எழுப்புதலை கட்டளையிட ஜெபிப்போம்.

## 24 நவம்பர்
திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பியூலா செல்வி ஹென்றி
திருமதி. கிரண் பெங்ரா லவ்லின்

### மந்தனா & பன்சேமால்:

**கொடிசெலா பிரவீன் & மௌனிகா**

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் பாடகாட்சி ஊழியம் நடத்த தேவன் கிருபை செய்தார். கரினா என்ற 12 வயது சிறுமியின் கை, கால்கள் திடீரென செயலிழந்துவிட்டன. மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்றும் சுகம்கிடைக்காத நிலையில் நமது விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் ஜெபத்தின் மூலம் தற்போது கை, கால்கள் செயல்பட்டு வருகிறது. விஷப்பாம்பின் கடியிலிருந்து விசுவாசிகளை தேவன் பாதுகாத்தார். லாலிபாயை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். குடும்பப் பிரச்சனையினிமித்தம் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த ஹெம்ராஜ்க்கு அதிலிருந்து விடுபட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து கஷ்டப்படும் குலாப் பட்டேலுக்கு தேவன் அற்புத சுகமருள; புதிதாக ஆராதனையில் பங்குபெறும் சுதாசி புஜாரி என்பவரை பக்கவாதத்தி லிருந்து தேவன்குணப்படுத்த; கர்ப்பப்பை அறுவை சிகிச்சை செய்துள்ள சோனாபாய் பரிபூரண சுகம்பெற; எட்டு வருடங்களாக குழந்தை பாக்கியத் திற்காக காத்திருக்கும் சுரேஷ் மற்றும் தீவான் குடும்பத்திற்கு தேவன் இரக்கம் பாராட்ட; காச நோய்க்கு சிகிச்சைப் பெற்று வரும் பிங்கி பாய்க்கு தேவன் பூரண சுகமருளவும், அவளது மூன்று வயது குழந்தைக்கு அந்நோய் பரவாமல் தேவன் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

### பெயிண்ட் பிராந்தியம்:

**எம். வினு & சுபிலா**

**துதிக்க:** ஏழு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. தெரியாமல் மின்சார கம்பியை மிதித்துவிட்ட நீரு பெனை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். ஒன்பது மாதங்களாக உதிரப்போக்கினால் அவதிப்பட்டு வந்த பிரமிளா பெனுக்கு தேவன் அற்புத சுகமருளினார். ஊழியம் முடித்து திரும்பி வரும் வழியில் புலியிடமிருந்து நமது சுதேச ஊழியர் சங்கர் பாயை தேவன் அற்புதமாய் பாதுகாத்தபடியால் அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூன்று இடங்களில் நடைபெறவுள்ள வாலிபர் முகாமின் மூலம் வாலிபர்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; எழுத்தறிவு பெற வாஞ்சையோடு இருக்கும் 600க்கும் மேற்பட்ட நமது விசுவாசிகளுக்கு முதியோர் கல்வித் திட்டத்தை செயல்படுத்த போதுமான தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; வாழ்வேரி கிராமத்தில் வசிக்கும் நமது மூன்று விசுவாச குடும்பங்களை அச்சுறுத்தி வரும் மதவாத கும்பலிடமிருந்து தேவன் பாதுகாக்க; கப்பூர்ணியா, தங்பாடா கிராமங்களில் கிறிஸ்தவர்களின் கல்லறைத் தோட்டத் திற்கான நிலம் விரைவில் கிடைக்க; இங்குள்ள அனைத்து ஆலயங்களும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்படவும், அதிகாரிகளின் கண்களில் தயை கிடைக்கவும் தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

## 25 நவம்பர்
### செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மிரிலா சம்பிரமரி
திரு. டெப்ரட்டோ பிஸ்வாஸ்
செல்வி. வசாவா அருணாபேன் டாமனியாபாய்

### காண்ட்பாரா & நவாப்பூர்:
**திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி**

**துதிக்க:** வஞ்சாலா கிராமத்தைச் சேர்ந்த ராம்லால் அசுத்தாவியின் பிடியிலிருந்தும், வியாதியிலிருந்தும் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். நிமோனியாவிலிருந்தும், வெள்ளை இரத்த அணுக்கள் பிரச்சனையிலிருந்தும் ஒருமாதமாக அவதியுற்று வந்த வந்தனாவுக்கு தேவன் அற்புத சுகமருளினார். புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் நான்கு பேருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நான்கு மாதங்களாக தலைசுற்று, காய்ச்சல் மற்றும் நீரிழிவினால் பாதிக்கப்பட்டு நடக்க இயலாமலிருக்கும் சங்கர், தொழு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மேலாபாய், சிக்கில் செல் நோயினால் அவதிப்படும் ருபேஷ் மற்றும் துள்சி ஜகதீஷ், சிறுநீரக பாதிப்பிலிருந்து பிரதாப், ஹேமலதா, மனநல பாதிப்பிலிருந்து சுபாஷ் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமளிக்க; நடைபெறவுள்ள வாலிபர் முகாம், சபை மூப்பர் பயிற்சி, விசுவாசிகள் கூடுகை யாவும் மிகுந்த பலனைத் தர ஜெபிப்போம்.

### சாலீஸ்காவ்:
**ஏசுபிரகாஷ் & சுனந்தாபெல்லி**

**துதிக்க:** தலையில் ஏற்பட்ட கட்டியினால் இரண்டு வருடங்களாக அவதியுற்று வந்த ஆராதனா என்ற 9 வயது சிறுமிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகமருளினார். காணாமல்போன ஷியாம் ராவ் எங்கு தேடியும் கிடைக் காமல் போகவே, ஜெபத்தின் மூலம் 45 நாட்களுக்குப்பின் பத்திரமாக வீடு திரும்ப தேவன் உதவி செய்தார். சின்சிகாவன், பன்ப்ரூட், முள்டோங்ரி, மெகுன்பார், நாகேகான், சட்டேநகர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு, நெஞ்சு வீங்கி கஷ்டப்படும் ஷிவராம் என்பவருக்கு தேவன் அற்புத சுகமருள; காச நோயிலிருந்து சோனு பாவ், பக்கவாதத்திலிருந்து ஹரீஷ் பகடே ஆகியோரை தேவன் குணப்படுத்த; தேவனின் அற்புத சுகத்தை அனுபவித் தவர்களும், சுவிசேஷத்தைக் கேட்டவர்களும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## 26 நவம்பர்

உபவாச ஜெபநாள்

புதன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மனாசே டேனியல்

### கட்சாந்தூர் & பாண்டர்கவ்டா:
### பால் ஆல்பர்ட் & ராணி ஜெஸிலெட்

**துதிக்க:** மூன்று மாத பிரின்ஸ் என்ற குழந்தை இரவில் சுவாச பிரச்சனையில் கஷ்டப்பட்டபோது ஊழியர்களின் ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளி யதால் பெற்றோர் தேவனை விசுவாசித்து வருகிறார்கள். அநேக வருடங்களாக குடிக்கு அடிமைப்பட்டிருந்த அனில் உபவாச ஜெபத்தில் கலந்துகொண்ட பின்பு தேவன் அவரை பூரணமாய் விடுவித்தபடியால் குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சராக ஏற்றுக்கொண்டுள்ளனர். நிம்லா பாயை விஷப்பாம்பு கடியிலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். தாவ்லிபீர் கிராமத்தில் ஆராதனைக் குழு ஒன்றை ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். ஆராதனையில் கலந்துகொண்ட மோஷ்ரா பாயை பக்கவாதத்திலிருந்து குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கண்ணில் சதை வளர்ந்து கஷ்டப்படும் சுனிதா பாய், குடலிறக்கத்தி லிருந்து கங்காராம், கடுமையான வயிற்று வலியிலிருந்து பேபி பாய், கையிலுள்ள கட்டியிலிருந்து சச்சின், சர்க்கரை நோயிலிருந்து அங்குஸ், அதிக இரத்தப் போக்கிலிருந்து ரெய்ணு பாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த; செவந்திபாய், ரவிதாபாய், துர்காவதி பாய், மீனாக்ஷி, கிரணின் மனைவி ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள; நடைபெறவுள்ள பெண்கள் முகாம், படக்காட்சி ஊழியம், சபை மூப்பர் பயிற்சி ஆகியவை மிகுந்த பலனைத் தர ஜெபிப்போம்.

### புது வாழ்வு

*மஹாராஷ்டிரா, வட்சா பகுதியைச் சேர்ந்த ஜீத்தேன் பாய் தீய சிநேகிதரின் நட்பால் விசுவாசத்திலிருந்து பின் மாற்றமடைந்துவிட்டார். தேவனை மறந்து குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்ட இவர் மன சமாதானத்தையும், தேவனின் ஆசீர்வாதத்தையும் இழந்தார். மேலும் வியாதிப்பட்ட இவர் மந்திரவாதிகளையும், மருத்துவர்களையும் நாடியும் சுகம் கிடைக்கவில்லை. அதுமட்டுமின்றி தூக்கத்தில் இவரது கனவில் தற்கொலை செய்துகொள்ளும்படி அசுத்தாவியினால் தூண்டப்பட்டார். இரண்டு முறை தற்கொலைக்கு முயற்சி செய்தபோது தேவன் அவரை பாதுகாத்தார். ஒருநாள் ஊழியர்கள் அவரை சந்தித்து ஜெபித்து ஆலோசனை கூறினர். அந்நாளில் இவரது கனவில் ஆண்டவர் தோன்றி, அனைத்து வியாதிகளையும் குணமாக்குவேன் என்று வாக்குத்தத்தம் அருளினார். மறுநாளிலிருந்து அவர் சரீரம் மற்றும் ஆத்துமாவில் பூரண சுகம்பெற்றார். இதனால் அவரது குடும்பம் முழுவதும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஆலய ஆராதனையில் பங்குப்பெற்று வருகிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

**27 நவம்பர்**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. லிங்டின்கிம் ஹயோகிப் லுன்கிம்

# கர்நாடகா

## ஹலியால் & கானாப்பூர்:
### தாங்லால் ஸௌ & நெம்ஸாவா

**துதிக்க:** ஏழு வருடங்களுக்குப் பின்பு தொடர் ஜெபத்தின் மூலம் ரெனே என்ற சகோதரி கர்ப்பம் தரிக்க தேவன் கிருபை செய்தார். இரத்தத்தில் வெள்ளை அணுக்கள் மற்றும் சிகப்பு அணுக்கள் குறைவினால் கஷ்டப்பட்ட புதிய தொடர் பாளரான எல்லப்பாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். இருதயம் மற்றும் நுரையீரல் பிரச்சனையினால் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்த பசப்பா ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வீடு திரும்பினார். புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ள ஸ்வர்ணா தன் கணவரால் துன்பங்கள் அனுபவித்தபோதிலும் விசுவாசத்தில் உறுதியாய் இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உஷா, ரேணுகா, சாந்தா ஆகியோருக்கு தேவன் சுகப்பிரசவத்தை அருளிச்செய்ய; 12 வருடங்களாக பஞ்சாயத்தில் வேலை செய்து வரும் எல்லாப்பாவுக்கு பணி நிரந்தர மாக்கப்பட; ருத்ரேஷ், பெம்மப்பா ஆகியோரை குடியிலிருந்து தேவன் விடுவிக்க; மூல புற்றுநோயினால் அவதியுறும் ருத்ரப்பாவுக்கு தேவன் அற்புத சுகமருள; பக்கவாதத்திலிருந்து லக்ஷ்மண், உத்தப்பா, நாகேஷ், எல்லப்பா ஆகியோரை தேவன் குணப்படுத்த; நந்துகோட் கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

## முண்ட்காட்:
### கோன்கா கிரி பாபு & லூர்து மேரி

**துதிக்க:** சித்தி மக்கள் வாழும் நான்கு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்தார். விசுவாசிகளின் முயற்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட பெண்கள் கூடுகையில் 25க்கும் அதிகமானோர் கலந்துகொள்ளவும், நான்கு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யவும் தேவன் கிருபை பாராட்டினார். ஒரு வருடத்திற்கு முன்பு தன் குழந்தையை இழந்த க்ருபாவுக்கு தேவன் மீண்டும் ஒரு குழந்தையை அருளி ஆசீர்வதித்துள்ளார். மணி மற்றும் லக்ஷ்மி குடும்பத்தினர் புதிதாக ஆலய ஆராதனையில் உற்சாகத்துடன் கலந்துகொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகப் பிரச்சனையோடு போராடிக்கொண்டிருக்கும் நாராயணா மற்றும் நாராயணப்பாவுக்கு தேவன் அற்புத சுகமருள; பெற்றோருக்குக் கீழ்படியாமல் தன் இஷ்டப்படி வாழும் தினேஷ் என்ற வாலிபன் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கணேஷ் மற்றும் பரசுராம் குடியின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற; ரேஷ்மா மற்றும் ஷிவு குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; விசுவாசி தாராபாயின் மகன் ஹனுமந்த் இரட்சிக்கப்படவும், அங்கித் மனநல பாதிப்பிலிருந்து சுகம்பெறவும் ஜெபிப்போம்.

# 28 நவம்பர்
வெள்ளி

## ஆந்திரப் பிரதேசம்

### தாமலச்செருவு:
**ஜாண் டேவிட்ராஜ் (ஓய்வு) & ஞானசேகரி**

**துதிக்க:** ஏழு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். விசுவாசி சுவார்த்த ரத்தனம் மாவின் விசுவாசமுள்ள ஜெபத்தினால் அறுவை சிகிச்சையின்றி சிறுநீரகக் கல் கரைந்து வெளிவர தேவன் கிருபை செய்தார். இரவு நேரங்களில் பிசாசின் தொல்லையினால் கஷ்டப்பட்டு வந்த நரேந்திராவுக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது அதிலிருந்து தேவன் அவருக்கு விடுதலை தந்தார்; இதன் மூலம் ஒன்பது பேர் தேவனை விசுவாசித்து வருகின்றனர். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ராகேல் லக்ஷ்மி திடீரென கடுமையான தலைவலியினால் அவதியுற்றார்; விசுவாசத்தோடு எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் அற்புத சுக மருளினார். காணாமல்போன மூளை வளர்ச்சி இல்லாத சக்கா என்ற சிறுவனை எங்கு தேடியும் கிடைக்காத சூழ்நிலையில் ஜெபத்தின் மூலம் அவன் பத்திரமாக வீடு திரும்ப உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிந்தம்மாவுக்கு அரசு மூலம் கிடைக்கும் மாதாந்திர உதவித் தொகை தடையின்றி கிடைக்க; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ராமய்யாவுக்கு தேவன் சுகமருள; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் வெங்கட்டமுனி, ராம மூர்த்தி, சந்திரா, ஜான் நாகராஜ் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; நந்தினியின் வயிற்றில் வளரும் குழந்தை முழுமை யான வளர்ச்சிப்பெற்று, சுகப்பிரசவத்தில் குழந்தை ஆரோக்கியத்துடன் பிறக்க; அடிக்கடி கருச்சிதைவு ஏற்படும் கிரேணா பிரிஸில்லா மற்றும் ரெபேக்காவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; கர்ப்பப்பை கட்டியினால் அவதியுறும் தெபோராவுக்கு தேவன் சுகமருள; திருமணமாகி ஒரே வருடத்தில் விபத்தில் மகனை இழக்கக் கொடுத்துள்ள சுதாவுக்கும், அவரது மருமகளுக்கும் தேவன் ஆறுதலை அளித்திட; ஊழியரின் மகள் டெய்சிக்கு நிரந்தர பணியை தேவன் தந்திட ஜெபிப்போம்.

### *இரட்சிப்பு கர்த்தருடையது*

*மஹாராஷ்டிரா, ஜவ்ஹர் பணித்தளத்தைச் சேர்ந்த வடுபடா கிராமத்து ஆஷிஷ் பாய் என்ற வாலிபன் சிறுவயது முதல் தன் தாயாருடன் ஆலயத்திற்குச் செல்லும் பழக்கமுடையவன். ஆனால் வாலிபனானபோது தவறான நண்பர்களுடன் சேர்ந்து தேவனை விட்டு தூரம் போக ஆரம்பித்தான். நல்ல சம்பளத்துடன் கூடிய வேலையிருந்தும் மன சமாதானமின்றி வாழ்ந்த அவனுடன் தேவன் இடைப்பட்டார். தன் வாழ்வை மீண்டும் தேவனுக்கு அர்ப்பணித்த ஆஷிஷ் பாய் ஜெபிக்கவும், வேதம் வாசிக்கவும் துவங்கியதோடு, குடிக்கு அடிமைப்பட்ட தன் தந்தையின் இரட்சிப்பிற்காகவும் பாரத்துடன் ஜெபித்து வந்தார். தேவன் அவர் தந்தையின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி யதால் தற்போது குடும்பமாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். தற்போது ஆஷிஷ் பாய் சிங்லாசமால் ஆலயத்தின் வாலிபர் குழுவின் தலைவராக இருப்பதோடு ஆலய ஊழியத்திலும் உதவி செய்து தேவனுக்கு சாட்சியாய் வாழ்ந்து வருகிறார். அல்லேலூயா!*

## 29 நவம்பர்
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. மகேஷ் R.

# தமிழ்நாடு

### மேச்சேரி:

**தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி**

**துதிக்க:** வியாதிப்பட்டிருந்த விசுவாசி வனிதாவின் கால்நடைகளுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். கண்ணையனின் பேத்தி நர்மதாவுக்கு சுகப்பிரசவத்தின் மூலம் தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். இப்பணித்தளத்தில் தேவன் நல்ல மழையை அருளி, விசுவாசிகளின் நிலங்களில் விதைகள் பயிரிடப்பட கிருபை செய்தமைக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் செல்வராஜ், சேகர், தங்கராஜ், ரமேஷ், ராஜ்குமார் ஆகியோருக்கு தேவன் விடுதலைத் தர; நடக்க முடியாமலிருக்கும் வென்ஸ் விரைவில் நடக்கும்படி தேவன் கிருபை செய்ய; அமலா பிரியாவின் மனக்குழப்பங்கள், சரீர பெலவீனங்கள் நீங்கவும், அவரது கணவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும்; துரைசாமி மற்றும் பொன்னம்மா விசுவாசத்தில் பெலப்படவும், குடும்பமாக ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

### இளம்பிள்ளை:

**செல்வகுமார் R. வில்சன் & ஜெயா ஹெலன் ரோஸ்**

**துதிக்க:** சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான வேதாகமத் தேர்வில் விசுவாசிகள் உற்சாகத்தோடு கலந்து கொண்டனர். உபவாச ஜெபம், இரவு ஜெபம் மற்றும் வேதாகம வகுப்புகளில் விசுவாசிகள் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகின்றனர். பீஹாரைச் சேர்ந்த விசுவாசி ரஞ்சித்க்கு முதுகு மற்றும் வயிற்று வலியிலிருந்து தேவன் அற்புத சுகமருளினார். விசுவாசி ராணியின் ஜெபத்தினால் அறுவை சிகிச்சையின்றி ஆஞ்சியோ மூலம் அவரது சகோதரனை குணப்படுத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காக்காபாளையம், வேம்படிதாளம், நடுவநேரி, வேலகவுண்டம்பாளையம் ஆகிய கிராம மக்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள இருக்கும் தடைகள் நீங்க; சீனிவாசன் மற்றும் விஷ்ணு பிரியாவுக்கு ஏற்ற வேலையை தேவன் தந்திட; எட்வர்டின் கண்ணிலுள்ள கட்டி மறைய; அழகம்மா, மாரியம்மா, நீலா, பெருமாள், மகேஷ்வரி, விக்னேஷ், ஜோதி, வீரராகவன் ஆகியோர் இயேசுவை அறிக்கையிட நிலவும் தடைகள் நீங்க; இளம்பிள்ளை ஆலயத்தைச் சுற்றி வாழும் மக்களின் அறியாமை இருள் அகல ஜெபிப்போம்.

## 30 நவம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சுகந்தி புஷ்பம் ஜென்னிஸ்

### வார்லி
### மொழிபெயர்ப்புப்பணி:
**ஆபிரகாம் ஜி. & ஹேமலதா**

**துதிக்க:** டொக்ரி மற்றும் நிஹ்ரி மொழிகளில் 1 தீமோத்தேயு முதல் யூதா வரை 12 புத்தகங்கள் திருத்தம் செய்யப்பட தேவன் உதவி செய்தார். வாட்ஸ் அப் குரூப் மூலம் வார்லி மக்கள் தங்கள் தாய் மொழியில் ஒரு அதிகாரம் வாசிக்கவும், ஒரு மனப்பாட வசனம் படிக்கவும் தேவன் உதவிசெய்து வருகிறார். இதன் மூலம் அநேகர் பயன்பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டொக்ரி & நிஹ்ரி மொழிகளில் வெளிப்படுத்தின விசேஷம் திருத்தம் செய்யப்பட; புதிய ஏற்பாட்டுடன் சங்கீதம், நீதிமொழிகளைச் சேர்த்து விரைவில் அச்சிடப்பட; வார்லி மக்களுக்கு இவ்வருடம் நல்ல அறுவடையை தேவன் கட்டளையிட; ஆடியோ பைபிள் மூலம் விசுவாசிகள் வாஞ்சையோடு வேதத்தைக் கற்றுக்கொள்ள; மொழி பெயர்ப்பில் உதவி செய்வோரின் ஒத்தாசைத் தொடர்ந்து கிடைக்க ஜெபிப்போம்.

### நன்றி கூறுகிறோம்

*மத்தியப்பிரதேசம், உதய்நகர் பணித்தளத்தில் உள்ள பட்கூன் கிராமத்தில் ஜுன் 20ஆம் தேதி அன்று விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்திகொண்டிருந்த நமது விசுவாசிகளான மஞ்சு, கிரண், மெய்தா, சச்சின், ஜெகராம் பாபா ஆகியோர் மதவாத கும்பலால் கைது செய்யப்பட்டு வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டனர். உங்கள் அனைவரது ஊக்கமான ஜெபத்தினாலும், ஊழியர்களின் தொடர் முயற்சியினாலும் 89 நாட்களுக்குப்பின் விடுதலைப் பெற்று வீடு திருப்பினதற்காக தேவனைத் துதித்து, பாரத்தோடு ஜெபித்த உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.*

*அரசு பள்ளியில் ஆசிரியையாயிருந்த **மஞ்சு** தன் வேலையை இழந்ததோடு அவரது எம்.ஏ. தேர்வை எழுத முடியாமல் போனாலும் அதற்காக வருத்தப்படவில்லை. சிறையில் மூன்று மாத கர்ப்பிணியாக இருந்த சுதேச ஊழியரின் மனைவி **கிரணுக்கு** தேவன் பாதுகாப்பை அருளினார். 11ஆம் வகுப்பு படிக்கும் **மெய்தா** மற்றும் **சச்சின்** தங்களது படிப்பைத் தொடர்கின்றனர். மெய்தா தன் படிப்பிற்குபின் முழு நேர ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்துள்ளாள். சிறையிலிருந்து வந்த மறுநாள் **ஜெகராம் பாபா** நமது விசுவாசிகளை அழைத்து தன் வீட்டில் பெரிய விருந்தளித்து, சிறையில் தேவனது பிரசன்னத்தை தான் உணர்ந்ததாகவும், தேவனுக்காக பாடனுபவித்தது தனக்கு கிடைத்த பெரிய சிலாக்கியம் என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இவர்கள் சிறையில் தேவனுக்காக அடிகளையும், அவமானங்களையும் வேதனைகளையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து உபத்திரவங்களை சந்தித்து வரும் நமது மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகளை நம் ஜெபத்தில் அனுதினமும் நினைவுகூறுவோம்.*

# நிதி அலுவலகத்திலிருந்து

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்

Online Banking

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI - A/c No. 602701216912** - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb@icici**

**SBI - A/c No. 10402752621** - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank - A/c No. 406157474** - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

## காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# கடவுளின் கண்ணாடி

கடவுளின் கண்ணாடி என்ற இந்தப் புத்தகம் இன்று கிறிஸ்துவுக்குள், ஆன்மீக வாழ்க்கையில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை மிகத் துல்லியமாக பிரதிபலித்துக்காட்டும் ஒரு சிறந்த புத்தகமாகும். இயேசு கிறிஸ்து யோவானுக்கு தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தின விசேஷம் அத்தியாயம் 2 மற்றும் 3இல் உள்ள ஏழு சபைகளுக்கும் வழங்கிய செய்திகள் நம்மை நாம் நிதானித்துப் பார்க்க உதவும் கண்ணாடிகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு சபைக்கும் வழங்கப்படும் செய்திகள் அந்தந்த காலக்கட்டங்களில் கிறிஸ்தவர்களின் உள்ளார்ந்த ஆன்மீக வாழ்க்கையை பிரதிபலித்துக்காட்டும் ஒரு கண்ணாடியாக தெரிகிறது. இங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ள செய்திகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதோடு, நீங்களும் உங்கள் மூலம் மற்றவர்களும் கடவுளின் இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கான படிக்கல்லாகவும் இருக்கும். தனிப்பட்ட மற்றும் குழு வேத ஆராய்ச்சிக்கு மிக சிறந்த புத்தகம்.




**நன்கொடை ரூபாய் 100/- மட்டுமே**

Regd. Newspaper for India No.17759/69

friends missionary prayer band

Whom shall I send?
Who will go for us?

ARE YOU WILLING TO INVEST YOUR YOUTHFUL DAYS FOR CHRIST?

Come & join the family of FMPB



MISSIONARIES WANTED

A time to explore God's call!

Eligibility Criteria:

- Have you completed higher secondary (+2) or are you a graduate?
- Are you a bachelor or spinster who has completed 18 years of age and are below 30 years?
- Are you a married person aged 35 years or below?

*If yes, you are eligible!* The opportunity before you:

- Pioneer missionary
- Church Planter
- Medical Missionary
- Bible Translator
- Missionary Teacher
- Media Missionary




Friends Missionary Prayer Band (FMPB)
*Human Resource Department (HRD)*
29, High School Road, Ambattur, Chennai - 53
Email: hrd@fmpb.org / www.fmpb.co.in
044 2657 0404 / 2657 4343

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***